www.tamilarangam.net

கருத்து மக்களைப்
பற்றிக் கொண்டால்
மாபெரும் சக்தியாக
உருவாகும்

'SAMAR'
87,Rue de colombes
92600 Asnieres sur seine
FRANCE

சமாதானம் என்பது
அவலங்களின் கூட்டு அல்ல,
அது சுயங்களுடன் கூடிய
கூட்டுறவு

# சமர்

சமர்-16 | வைகா-ஆனி | அன்பளிப்பு-10



**உள்ளே ☞**

☆ சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்..

☆ கருக்கலைப்பில் எமது சரியும், தவறும்

☆ நாசிகளின் படுகொலைகளும்..

☆ மற்றும்பல..

## தமிழ்த் தேசியத்தைக் கற்பழிக்க முனைந்த பெரும் தேசிய இனவாதிகள்

யுத்தம் தொடங்கிய பின் தமிழ்த் தேசிய இனத்தின் மீது காட்டுமிராண்டித் தனமான யுத்தத்தை இனவாதிகள் பிரகடனம் செய்து வருகின்றனர். தமிழ் மக்களின் கலாச்சாரம், மொழி, நிலம் என அனைத்துத் துறைகளிலும் வன்முறையானது கட்டவிழ்த்து விடப்படுகின்றது.

15 ஆயிரம் இராணுவத் துருப்புக்களைக் குவித்த இன வெறியர்கள் யாழ்-குடாநாட்டை கைப்பற்றும் நோக்கில் ஒரு முன்னேறிய இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினர். இந் நடவடிக்கை புலிகளுக்கு எதிரானது என பிரகடனம் செய்தபடி, தமிழ் பேசும் மக்களின் மீது தொடர்ச்சியான, இடைவெளியற்ற குண்டுவீச்சினால் ஒவ்வோர் அடி நிலமும் சல்லடையாக்கப்பட்டது.

மக்களை பொது இடங்களில் கூடுமாறு அறிவித்த அரசானது அவ்விடங்களின் மீது ஈவிரக்கமற்ற, குறிதப்பாத குண்டுத்தாக்குதலை நடத்தியது. இவ்வாறு சிலநூறு மக்களைக் கொன்று குவித்தவிட்டு, அவர்களைப் புலிகளெனக் கூறியபடி தனது பாணியில் இராணுவத் தார் பார்ரை நடாத்தியது.

மக்கள் கொல்லப்பட்டதிற்கு எதிராக பல குரல்கள் எழுந்த போது மாட்சிமை தங்கிய ஜனநாயக வாதியாம் சந்திரிகா ஆதாரம் ஏதுமுண்டா? எனக் கேட்டு, யுத்தப் பிரகடனத்தை புலிகளுக்கு எதிரானது மட்டுமே என்று மீண்டும் பிரகடனம் செய்தார்.

தொடர்ச்சியாக மக்கள் மீதான தாக்குதல்கள் உலகெங்கினும் பரவி விடவே, சந்திரிகா அரசு அவற்றை புலிகளின் தலையில் குற்றம் சுமத்தும் வகையில் பொய்ப் பிரச்சாரம் ஒன்றை மூட்டைகட்டி சர்வதேச தொலை காட்சிகள் மூலம் உலகின் முன் அவிழ்த்து வைத்து நாடகமாடியது.

தொடர்ச்சி பக் – 6ல்

## சமஷ்டி முன்மொழிவு என்பது, புத்தி ஜீவிகளின் பேரினவாத நோக்கமே!

சந்திரிகா அரசானது ஆட்சிப் பீடம் ஏறிய பின்னர் தீர்வு வைப்பதிலும், தேடுவதிலும் அரசுக்கு அப்பால் பலர் போட்டி போடுகின்றனர். அந்த வகையினரில் 37 பேர் கையெழுத்திட்ட ஒரு 'சமஷ்டி அரசியல் அமைப்பு' தீர்வுத் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதை 'சரிநிகர்' 75வது இதழில் பிரசுரித்திருந்தனர்.

இந்த வரைவை பல்கலைக்கழக ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், எழுத்தாளர்கள் என இலங்கையிலுள்ள பூர்சுவா வர்க்க புத்திஜீவிகள் கூட்டமும், தம்மைத் தாமே 'மார்க்ஸ்சிஸ்ட்' என நினைத்துக் கொண்டிருக்கும் சிலரும் கூடி, வரைந்து பிரகடனம் செத்துள்ளார்கள்.

இச் சமஷ்டி வரைவு என்பது பெருந்தேசிய இனவெறிக் கனவுகளுடன், அதன் உள் உடலுடன், இச் சமூக அமைப்பை தாராளமாக பேணிப் பாதுகாக்கும் வகையில் முன் வைக்கும் முன் மொழிவாகும். இதன் மூலம் பேரினவாத சிறிலங்கா அரசை ஆட்ட அசைவின்றி எதிர்காலத்தில் பாதுகாக்கும் வகையில் இவ் முன் மொழிவானது இவர்களை அழைத்துச் செல்ல ஏதுவாக உள்ளது.

சமஷ்டி அரசு என்று கூறியபடி இலங்கையை ஆறு பிரிவாக பிரிக்கின்றனர் இவர்கள். இலங்கையில் அரசியல் அதிகாரம் பகிரப் படவேண்டும் என தமிழ், சிங்கள, மற்றும் பிற இன மக்கள் போராடி பல ஆயிரம் பேர் கொல்லயுண்டு போனதாக இந்த பூர்சுவா புத்திஜீவிகள் கனவு காண்கின்றனர் போலும்.

இலங்கையில் சுயநிர்ணயத்தை ஒரு தேசிய இனம் பெற்றுக் கொள்வதற்காகவே யுத்தம் நடைபெறுகின்றது. இதை வெறும் அதிகாரப் பரவலாக்கமென கொச்சைப் படுத்துவதும், பல பத்து ஆயிரமாய் மக்கள் கடந்த காலங்களில் கொலை செய்யப்பட்டதும்,

தொடர்ச்சி பக் – 6 ல்

வெளியீடு தமிழ் அகதிகள் [illegible] வட்டம் | பதிவு செய்யப்பட்டது - [illegible]

www.tamilarangam.net

# உங்களுடன் சமர்

## சமரின் வேண்டுகோளுடன் கூடிய அறிவித்தல்!

நாம் 16 இதழ்களை மிக நீண்ட, நெடிய சுமைகளின் ஊடாக உங்கள் முன் கொண்டு வந்திருக்கின்றோம். இவ் இதழ்களை நாம் வெளியிடுவதில் பொருளாதார ரீதியில் எம்மையும், ஒரு சில வாசகர்களையும் சார்ந்து நின்றோம்.

இன்று அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவு, மற்றும் புலம் பெயர்ந்த நாடுகளில் ஏற்பட்டு வரும் எம்மவரின் சுயத்தை இழக்கும் போக்கு, சமரைக் கொண்டு வருவதற்கு பொருளாதார ரீதியான நெருக்கடிகளை உள்ளாக்கியுள்ளது. சமரானது தொடர்ந்து வருவதும், வராது நின்று போவதும் உங்கள் கைகளில் தான் தங்கியுள்ளது என்பதை இவ் இதழ்களில் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்வது, சந்தாக்களைச் சேகரித்து உதவுவது, ஒவ்வோர் இதழ்களுக்கும் உங்களால் முடிந்தளவு சிறு தொகையை அன்பளிப்பாக வழங்க முன்வருவது போன்றவைகள் மட்டுமே சமரின் வருகையை நிலை நிறுத்தும் என எதிர்பார்க்கின்றோம். இல்லாது போனால் எல்லாச் சஞ்சிகைகளையும் போல நின்று விடுவது தவிர்க்க முடியாத ஒன்றே.

ஐரோப்பாவில் வெளிவந்த அநேக சஞ்சிகைகள் ஏதோ ஒரு விதத்தில் பணத்தை வெவ்வேறு நிறுவனங்கள் ஊடாக பெற்றுக் கொண்டன. இந்நிலையில் சமர் அரசியல் ரீதியாக மற்றவர்களில் இருந்து தெளிவாக வேறுபட்டு, அதன் வரலாற்றுத் தேவையுடன் எமது சொந்த உழைப்பில் கொண்டு வந்தோம்

சமரின் தேவையையும், அதன் வருகையையும் சமர் இன்று தெளிவாக உணரத் தலைப்பட்டுள்ளது. ஏனென்றால் இன்று புதிதாக முற்போக்கு சக்திகள் என தம்மை இனம் காட்டிய ஒரு பகுதி அரசுக்குப் பின்னால் அணிதிரளத் தொடங்கியுள்ளது. இன்னும் ஒரு பிரிவினர் மிக மோசமான மார்க்சிய திரிபுக்குள் வேகமாகவே நகரத் தொடங்கியுள்ளனர்.

மாற்றுக் கருத்துக்கான ஒரு பத்திரிகையாக தன்னை நிலைநிறுத்தவும், தமிழ் தேச விடுதலையின் சுயநிர்ணய உரிமையை அரசிடம் அடகு வைக்கும் போக்குக்களை, திரிபுவாதத்தை திரையிழுத்துக் காட்ட சமரின் தேவையை மீளவும் நாம் உணரத் தலைப்படுகிறோம்.

நாம் பத்திரிகைக்கு அப்பால் எந்தச் செயல் பற்றிய கனவுகளை காணவோ, ஊட்டவோ முடியாத நிலைக்குள் நகர்ந்து வந்துள்ளோம். இது இன்று எமது யதார்த்தமாக உள்ள அதே நேரம், புலம் பெயர்ந்த நாட்டிலும் உள்ளோம். சமரின் வருகையை, அதன் அவசியத்தை, மாற்றுக் கருத்துப் பத்திரிகை நின்று போய் விடக் கூடாது என விரும் அனைத்துத் தரப்பினரிடமும் கருத்து முரண்பாடுகளக்கு அப்பால் உங்கள் சிறு சிறு பங்களிப்புக்களை, உதவிகளை தொடர்ச்சியாக எதிர்பார்க்கின்றோம்.

**சமர் ஆ.கு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அண்மையில பிரான்ஸ் உட்பட பல ஐரோப்பிய நாடுகளில் இலங்கையைச் சேர்ந்த 35 அமைப்புக்களின் சார்பில் மனோரஞ்சன்



ஒரு கருத்தரங்கை நடாத்தியிருந்தார். இவர் இலங் கையிலிருந்து வந்து இக் கருத்தரங்கை நிகழ்த்தியதுடன், ஜனநாய கத்தில் ஆர்வமுள்ள பலரும் (முரண் பாடுகள் உடன்) இதில் பங்கு கொண்டனர். மனோரங்சன் முன்னாள் NLFT உறுப்பினரும் பின் PLFT மத்திய குழு உறுப்பினரும் ஆவர்.

சந்திரிகா அரசு பதவி ஏற்றதன் பின்பு இவ் 35 அமைப்புகளின் சார்பாக அமைப்புக்குழு ஒரு சில நடவடிக் கையில் ஈடுபட்டதுடன் மட்டும் இன்றி, இவர்களின் தூதுக் குழுவானது யாழ் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித் தும் வந்தது.

நாம் இச் செயற்பாடுகள் மீதான ஒரு விமர்சனத்தைச் செய்ய முன்பு எமது தெளிவான சில கருத்துக்களை இவ் விடத்தில் முன் வைக்கவேண்டியது அவசியமானதாக் கருதுகின்றோம்.

இன்று இலங்கையிலும் சரி, புலம் பெயர்ந்த நாடுகளிலும் சரி ஜனநா யகத்தைப் பெற்றுக் கொள்ள எடுக் கப்படும் நேர்மையான அனைத்து முயற்சிக்கும் சமர் தன்னால் முடிந் தளவு பங்களிப்பை நல்கும். அதன் வரலாற்றுத் தேவையை, அதன் இன் றைய முக்கியத்துவத்தை சமரானது ஏற்றுக் கொண்டதுடன், அதற்காக நேர் மையாக உழைக்கும்.

ஜனநாயகத்தை மீள அமைக்கும் முயற்சி என்பது எப்போதும் ஒரே ஒரு போக்கின் ஊடாக மட்டுமே சாத்திய மானது. அது சொந்த மக்களை, அதன் அணிகளைச் சாந்ததாக மட்டுமே இருக்க வேண்டும். இதற்கு ஆதரவாக உலக மக்களின் புரட்சிகர பிரிவின் ஆதரவையும் பெறமுடியும். இதை விடுத்து அந்நிய ஏகாதிபத்தியங்கள், பிற நாட்டு அரசுகள், குறிப்பாக இந்திய அரசு, மற்றும் இலங்கை அரசு, மற்றும் துரோகக் குழுக்கள், கூலிப்படைகள் என்ற இதில் ஏதாவது ஒரு வகையி னருக்கு உதவுவதன் மூலம் ஜன நாயகத்தை மீள அமைத்தல் என்ற போர்வையில் ஜனநாயகத்தை மீறும் எக் கோரிக்கையையும் சமர் மிகக் கடுமையாக எதிர்த்து நிற்கும். இதை அணுகும் அனைத்து மறைமுக செயல்களையும் சமர் எதிர்த்துப் போராடும்.

குறிப்பாக 'புலி எதிர்ப்பு' என்ற கோஷத்தின் பின்னுள்ள எதிர் புரட்சியை சமர் கடுமையாக எதிர்க்கும். புலிகளின் ஜனநாயக விரோதச் செயல்களை விமர்சிக்க மற்றும் அதை எதிர்த்துச் செயற்படக் கோரும் சமர், புலி எதிர்ப்பின் ஊடாக தேசிய விடு தலைப் போராட்டத்தை எதிர்க்கும், அதை நாசம் செய்யும் எச் செய லையும் சமர் எதிர்த்து நிற்கும்.

இன்றைய தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய ஆயுதக் குழுக்கள் அனைத்துமே மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டி ருந்தன. பின்னைய நாட்களில் கொழும்பிலும்,இந்தி யாவிலும் வளர்ப்புப் பிள்ளைகளாக துரோகம் இழைத்து இயங்கியதுடன், ஜனநாயகத்தைக் குழிதேண்டிப் புதைத்தும் வருகின்றன.

## சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்ற மகஜர் மக்களை மந்தைகளாக மாற்றுவதே!

தேசிய விடுதலைப் போராட் டத்திற்கு பச்சையாகவே துரோகம் இழைத்து வரும் இவர்கள் இலங்கை அரசு, இந்திய அரசு, மற்றும் ஏகாதிபத்தியங்கள் என மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அரசுகளுடனும், ஜனநாயகத் தைக் குழிதோண்டிப் புதைக்கும் அவைகளின் ஈவிரக்கமற்ற செயல்க ளுக்கும் தலையால் சேவகம் செய்தும் வருகின்றன.

சிறுபான்மை தேசிய இனங்களின் விடுதலை சுயநிர்ணய அடிப்படையில் மட்டுமே தீர்க்க முடியும் என்பதை நாம் தெளிவாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் ஜனநாயகத்தை மீள அமைக்கும் எந்த வழிவகைகளிலும் இது எப்பொ ழுதும் துலைந்து போய்விடக் கூடாது. குறிப்பாக இதை ஏற்றுக் கொள்ளும் அனைத்துத் தரப்பினரும் ஒரு பொது வான ஜனநாயகத்திற்கான முன்ன ணியைக் கோரும் பட்சத்தில் அது ஜனநாயகத்திற்காக உண்மையில் இயங்கும். அது மகஜர் கொடுப்பதற்குப் பதில் சொந்த மக்களை, அதன் புரட்சிகர அணிகளை செயலில் இறங்கும் வகையில் புரட்சிகர அறை கூவலுடன் செயற்பட வேண்டும்.

இவைகள் அல்லாத ஜனநாயகம்! ஆம், சமாதானத்துடன் .. என்ற கோரிக்கை இன்றைய இனவாத அரசை, பெரும் தேசிய இனவாத த்தை, ஜனநாயக மீறலைத் தொடர மக்கள் இதை எதிர்க்காத வகையில் திசைதிருப்பும் ஒரு கபடம் நிறைந்த முன் மொழிவேயாகும். குறிப்பாக இதன் செயற்பாடுகள் அரசு சார்பான சிங்களப் பகுதிகளில் இருப்பதால் இதை வளர்த்தும் எடுக்கும் என்பதையும் மறந துவிடக் கூடாது. மக்கள் செயலில் இறங்காத வண்ணம் பார்த்துக் கொள் ளும் வகையில், மக்கள் புரட்சிகர வழிவகைகளைத் தேடாத வகையில், கூட்டணியின் சத்தியாக்கிரகம், தொண்டமானின் பிராத்தனை போன் றவற்றுக்கும் இவர்களின் மகஜர் அனுப்பும் செயற்பாட்டுக்கும் அடிப் படையில் எந்தவித வித்தியாசமும் கிடையாது.

சிங்களப் பிரதேசத்தில் கொஞ்சமாவது சிந்தித்து முன்வர முயலும் ஒரு சிலரைக் கூட ஜனநாயகமற்ற இவ் உலகத்தில் மகஜர், மற்றும் புரட்சிகர வழியற்ற வெற்றுக் கூட்டங்களினூடாக செக்கு மாடாகச் சுற்றிவரச் செய்வதுடன், மக்களைத் திசை திருப்பி மக்களை மந்தைகளாகவும் ஆக்கி வருகின்றனர். இதன் மூலம் சந்திரிகா இனவாத அரசை பலப்படுத்த முனை கின்றனர்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் இனவாத அரசின் சமாதானம் பற்றிய போலிப் பிரச்சாரமும், தேசிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலையின் பால் புலிகளின் ராஜ தந்திரம் அற்ற வழமையான செயல் முறைகள் என்பனவும் இணைந்து இயல்பில் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு 'சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்..' என்ற கோஷமானது நடைமுறையில் எதிரானதாகவே செயற்படுகின்றது.

இதை இவர்கள் எப்படிச் செயற்படுத்த முனைகின்றனர் எனின்: புலிகள், அரசு என இருவரிடத்தில் சமர்ப்பித்த மகஜரில் புலிகளை நோக்கி பொருத்தமான சமாதானத் திட்டம் ஒன்றை முன்வைக்கக் கோருகின்றனர். இக் கோரிக்கை அடிப்படையில் பெரும் தேசிய இனவாதத்திற்கு துணை போவதுடன், தனிச் சலுகையை இழக்க விரும்பாத, தனிச்சலுகையை கட்டோடு வைத்திருக்க உதவுகின்ற ஏகாதிபத்திய நாட்டின எல்லைக்கோட்டை தாங்கிக் கொள்ளும் காலனித்துவத்திற்குத் துணை போகும் செயற்பாடுகளுமாகும். பெரும் தேசிய இனத்தின் இனவாத இயல்புக்கு ஏற்ப, அதன் இருப்பைத் தக்க வைக்கும் வகையில், அதன் நலன்களைப் பாதிக்காத வகையில், புலிகளை நோக்கி பொருத்தமான தீர்வை முன்வைக்கக் கோருகின்றனர்.

இப்படிக் கேட்க இந்தப் பெரும் தேசிய வாதிகளுக்கோ சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்ற அமைப்புக் குழுவுக்கோ, எந்தத் தனிநபருக்கோ எந்தவித உரிமையும், அதிகாரமும் கிடையாது. தமிழ் தேசிய இனமானது இதன் கபடத்தனத்தை பல நீண்டகால வரலாற்று அனுபவங்களினூடாக நன்றாகவே அறிவர்.

புலிகளின் ஜனநாயக மீறலைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் ஜனநாயகக் கோரிக்கையான சுய நிர்ணயக் கோரிக்கையை 'சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்..' என்ற கோரிக்கையுடன் பெரும் தேசிய இனத்திற்கு தாரைவார்க்க மறை முகமாகக் கோரும் இவர்களையிட்டு எப்பொழுதும் விழிப்பாகவே இருத்தல் வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள், சிங்கள மக்கள், என அனைத்து இலங்கை வாழ் மக்களும் அரசு, மற்றும் பல்வேறு அமைப்புக்களால் (புலிகள் உள்ளிட்டு) ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டு, உரிமைகளை இழந்துள்ளனர் என்பது உண்மையே. இம் மக்களின் ஜனநாயகம் மீதான விருப்பு எப்பொழுதும் உண்மையான விடுதலையின் மீதானதாகவே இருந்து வந்துள்ளது. இதனை தமக்குச் சாதகமாக பயன்படுத்த முனைந்த சந்திரிகா அரசு, மற்றும் இக் குழுவினர் செய்ய நினைப்பது மக்களை ஏமாற்றவே.

மக்கள் உண்மையான சமாதானத்தை அடைந்து விடுவதைத் தடுக்க மகஜர் அனுப்புவதுடன், "பொருத்தமான தீர்வு" என்று ஒன்றைக் கூறி இலங்கையின் சிறுபான்மை மக்களின் சமாதானக் கோரிக்கையை கேலிக்கூத்தாக்கி கொச்சைப் படுத்துகின்றனர். இது பெரும்பான்மை இனவெறி தேசியவா தத்திற்கு பசையாக ஒத்துப்போவதே யாகும்.

"பொருத்தமான தீர்வை" தமிழ் மக்கள் சார்பாக புலிகள் கூட சமர்ப்பிக்க முடியாது. ஏனெனில்: தமிழ் தேசிய இனத்தின் உண்மையான சமாதானம், ஜனநாயகம் என்பது சுயநிர்ணய உரிமையில் தான் தங்கியுள்ளது. சேர்ந்து வாழ்வதா, அல்லது பிரிந்து போவதா என்பது சிறுபான்மை இனத்தின் உரிமை. இது மட்டுமே உண்மையான சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்..

சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்பது தமிழ் தேசிய விடுதலைக்கு அப்பால் உருவாகிவிடாது. இது சுய நிர்ணயம் என்ற அச்சாணியில் மட்டுமே சாத்தியம். அதாவது இதற்காகப் போராடுவதன் மூலம் மட்டுமே, அதன் வழிகளில் மக்கள் அணிதிரள்வதன் ஊடாக மட்டுமே, அதன் வழிமுறைகளில் புரட்சியை நடாத்துவதன் மூலம் மட்டுமே சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்பதைப் பெற முடியும்.

இதை நிராகரித்த சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன் என்பது எந்த குறுக்கு வழிகளிலும் சாத்தியமில்லை. இது இருப்பிலுள்ள ஜனநாயக விரோதச் செயல்களைத் தக்க வைப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும், தேச விடுதலையை கிடப்பில் போட்டு விடுவதற்கும் செய்யும் கைங்கரியமேயாகும்.

சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன் என்ற குழவின் பிரதிநிதியானவர் இக் கைங்கரியங்களை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு சில வாதங்களை சுற்றிச் சுழன்று மீண்டும் மீண்டும் முன் தள்ளினார்.

- இனக்கலவரம் என்று ஒன்று இனி மேல் வாராது. அதாவது நாம் வர விடமாட்டோம்.
- யாழ் சென்று புலிகளைச் சந்தித்த இக் குழு தம்முடன் எடுத்துச் சென்ற 5000 மகஜர் பிரதிகளை திடீரென விநியோகித்த போது புலிகள் விரும்பாத நிலையிலும் மக்கள் முண்டியடித்து பெற்றுக் கொண்டனர். எனவே தமிழ் மக்கள் சமாதானம் மீது, மாற்றுக் கருத்துக்கள் மீது ஆர்வம் உள்ளவர்களாக உள்ளனர்.
- வவுனியாவுக்கு பாத யாத்திரை வந்த 5000 மக்கள் உணர்வு பூர்வமாக சொந்தச் செலவில் வந்தனர்.
- பல நூறு சிங்களக் கிராமங்களில் பிரச்சாரம் செய்துள்ளோம். என இவைகளை முன் நிறுத்தி, வேறு சில விடயங்களையும் முன்வைத்தனர்.

இனக்கலவரம் இப்போதைக்கு வரமாட்டாது என்பது 99சத விகிதம் உண்மையானதே. இது இவர்கள் குறிப்பிடும், இவர்களின் அமைப்பினால் தடுக்கப்படும் என்ற எடுகோளில் இருந்து நாம் குறிப்பிடவில்லை. மாறாக ஓர் இனக்கலவரம் வருவதை இப்போதைக்கு அரசு விரும்பாது என்பது தெளிவான உண்மை. அன்று 13 இராணுவவீரர்கள் கொல்லப்பட்டவுடன் உருவான கலவரம் இன்று பல நூற்றுக் கணக்காக கொல்லப்பட்டதும் உருவாகவில்லை. ஏனெனில் இனி ஓர் இனக்கலவரம் வரின் இயல்பில் தமிழீழம் என்பது அங்கீகரிப்புக்கு நகர்ந்து விடும் என்பதை அரசு தெளிவாகவே உணர்ந்துள்ளது. 1983 முதல் 95க்கு இடைப்பட்ட 12 வருட காலங்களில் இனக்கலவரம் நடக்கவில்லை. அப்பொழுது இந்த 35 அமைப்புகள் இருந்தும் இருக்கவில்லை. இனியும் இனக்கலவரம் நடக்க அரசு இலேசில் அனுமதிக்காது.

இதையும் மீறி நடக்குமாயின் அரசு பலவீனம் அடைந்த நிலையில் மட்டுமே சாத்தியம். குறிப்பாக காலி இனக்கலவரத் தூண்டுதலை வெறும் தனிப்பட்ட பிரச்சனையாகக் காட்டத் தலைப்பட்டனர். உண்மையில் அது ஓர் இனக்கலவரத் தூண்டுதலின் பேரில் உருவான நிகழ்வே. அதன் பூரணத் துவத்தை இன்று சாதாரண பத்திரிகைகளில் கூட காணமுடியும்.

இனக்கலவரம் நடக்கமாட்டாது என்ற எடுகோளை எடுக்கும் இவர்கள், உண்மையில் இனக்கலவரத்தைத் தூண்டிவிடும் சம்பவங்களைக் கூட மறுதலித்து, திரித்து அதைத் தனிப்பட்ட பிரச்சனையாக மாற்றிவிட படாத பாடுபடுகின்றனர். இது ஒரு தேசிய விடுதலையின் பால், அதன் போராட்டத்தின் பால் எதிர்நிலைக்கு இலேசாக இவர்களை இழுத்துச் செல்கின்றது.

அடுத்து யாழ் மக்கள் துண்டுப் பிரசுரத்தை வாங்க ஆவல் கொண்டனர் என்பதை தீரென 'கண்டுபிடிப்பாக' காட்ட முயல்கின்றனர். மக்களிடம் காணப்படும் முரண்பாடுகள், அவர்கள் மாற்றுக் கருத்துக்காக போராட நினைக்கும் இயல்புகளை அந்தச் சம்பவத்திற்கு முன்புவரை கண்டுகொள் முடியாதவர்கள் எப்படி சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்று வெளிக் கிட்டவர்கள்? எப்படிச் அதை நோக்கிச் சென்றடைவார்கள்? எந்த மக்களும் தமது கருத்துக்களுக்காக போராட முயல்வது ஒரு சாதாரண இயங்கியல் நிலை. இதைத் திடீரென ஞானம் கலைந்து எழுந்தவன் போல் கூறுவது மக்களை ஏமாற்றும் ஒரு நடிப்பு. கபடம் நிறைந்த ஏமாற்று முன்முயற்சி.

அடுத்து வவுனியா வந்த மக்கள் தொடர்பாக கூறுவதாயின்:-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டணியினரின் வாய்வீச்சை நம்பி 90சத வீதமான மக்கள் அவர்களின் பின்னால் இழுபட்டனர். தொண்டமான் மலையக மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவார் என நம்பி ஆறு லட்சம் தொழிலாளர்கள் 15 ரூபாய் வீதம் மாதச்சந்தா கட்டுகின்றனர். சந்திரிகா அரசு சமாதானத்தைப் பெற்றுத் தரும் என நம்பி 62வீத மக்கள் வாக்குக்களை அள்ளிப் போட்டனர். இது போன்று சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்ற நம்பிக்கையின் பேரில் 5000 பேர் வருவது ஒரு பெரிய விசயமல்ல. இந்தக் கோரிக்கையை சந்திரிகா வைத்துக்கொண்டு வவுனியா வந்திருப்பின் இதைவிடக் கூடப்பேர் வந்திருப்பர் என ஒருவர் சொன்னால், அதில் பொய்யிருக்காது.

அடுத்து சில நூறு கிராமங்களில் இதற்காகப் பிரச்சாரம் செய்துள்ளோம் என்பது மக்களை அணிதிரட்டி விடாது. அது வெறும் பிரசங்கம். சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்பதற்கு எந்த அரசியல் வேலைத் திட்டமும் (முதலாளித்துவ வழிகளில் கூட) கிடையாது. இல்லாத வரை இது எதையுமே சாதிக்காது.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புலிகள் அம்பலப்படும் போது ஒரு பெரும் தாக்குதலும், அரசு அம்பலப்படும் போது புலிகள் மீது ஒரு பெரும் தாக்குதலும், கொழும்பில் ஒரு குண்டு வெடிப்பும் எல்லாவற்றையும் பழையபடி கொண்டுவந்து விடும். இன்று தேவைப்படுவது சமாதானம்! ஆம், ஜனநாயகத்தடன் என்பதை ஒரு அரசியல் வழியில் மக்களிடம் புரிந்து கொள்ள வைப்பதேயாகும்.

மேலும், இவ் 35 அமைப்புகளில் நாம் அறிய சில அமைப்புகள் ஜனநாயகம் ஆம், சமாதானத்துடன் .. என்ற முதலாளித்துவ கோரிக்கையை மாற்று அமைப்புகளுக்கு வழங்கியதே கிடையாது. வாசுதேவாவின் நவ சமசமாயக் கட்சி, கம்யூனிஸ்ட்டு கட்சி என்பன குறிப்பாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்க உறுப் பினர்களுக்கு பலமுறை தாக்கியுள்ளனர். (பார்க்க- தொழிலாளர் பாதை) மற்றும் துரோகம் இழைத்து நிற்கும் ஆயுதம் ஏந்திய தமிழ் குழுக்கள் எப்படி சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்.. என்பதை வழங்குமாம்?

குறிப்பிடத்தக்கதாக நடந்த வவுனியா பாத யாத்திரையில் துரோக PLOTE மக்களுக்கு உணவு வழங்க ஏற்பாடாம், ஆனால் ஏமாற்றி விட்டனர். அது வேறுகதை. ஆனால் தலைவர்களோ விழுந்து விழுந்து சாப்பிட்டனர். சாப்பாடு கொடுக்கும் சமாதான விரும்பிகள் PLOTE, சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்.. வழங்கிக் கொடுத்த விருந்தும், அதை உண்ட தலைவர்களின் சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்.. என்பதுவும் என்ன என்பதை நாம் கூறத்தான் வேண்டுமா? தேவையே இல்லை. ஏனெனில்: PLOTE சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்.. என்று சொல்லுவது படுகொலைகள், தேச விடுதலைத்துரோகம் என்பனவற்றைத் தாண்டியது அல்ல. இவர்களின் கொலைகள், மற்றும் தேசத்துரோகத்தில் வேர்வை சிந்தி கிடைத்த உழைப்பில் விருந்து உண்ட தலைவர்கள், அதன் வழியில் தொண்டர்களை அழைத்துச் செல்ல முனைவது அபாயகரமான சகதிக்கே. இதற்கு ஐரோப்பாவில் குறைந்த பட்சம் ஜனநாயகத்திற்காக போராடத் துடிப்பவர்களை பங்கு கொள்ள அழைப்பது இன்னுமொரு ஏமாற்று அவல நாடகமே.

புலிகளின் ஜனநாயக மீறலை எதிர்க்க என்ன செய்யலாம்? இவர்களின் அதாவது, சமாதானம் ஆம், ஜனநாயகத்துடன்.. என்ற வாதிகளின் வழிமுறையில் புலிகளுக்கு எதிராக இவ் ஏகாதிபத்திய அரசுகளுக்கு 'பெட்டிசன்' போடுவது, மகஜர் கொடுப்பது போன்றவைதானாம் வழிகள்.(புலம் பெயர் நாடுகளிலுள்ள சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட பிரச்சனைகளுக்கு, இங்கு நிதியைக் கோருவது என்பது இவற்றிலிருந்து முற்றிலும் வேறானது.) இந்த வழியைக் கைக்கொள்ளும் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஆங்கில மொழியில் (கவனிக்கவும், ஆங்கில மொழியில்) புலிகளின், அரசின் ஜனநாயக விரோதச் செயல்களை இவ் ஏகாதிபத்தியங்களிடம் சமர்ப்பிக்கின்றனர். (தமிழ் மக்களிடம் அல்ல என்பதை வாசகர்கள் நன்றாக ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.) இதன் மூலம் மொத்த ஜனநாயக விரோத நடவடிக்கைகளுக்கு மூல காரணமான இவ் அரசுகளை எம் நாட்டில் தாழ்மையுடன் தலையிட வைப்பதன் மூலம், தேசிய விடுதலைப் போராட்டத்தை சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்ற கோரிக்கையுடன் காட்டிக் கொடுத்து அழிக்க முனைகின்றனர்.

இதற்குள் தெரியாமல், அப்பாவித்தனமாக தான் செய்வது தேசிய விடுதலைக்கு உதவும் என நம்பிய சபாலிங்கம் யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்சங்க அறிக்கையை பிரஞ்சில் மொழி பெயர்த்து அதை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பி... இவர்களின் வழியில் சென்ற ஓர் அப்பாவித் தொண்டன்தான் சபாலிங்கம். இந்தச் சபாலிங்கத்தைப் பலிக்கடா ஆக்கியவர்கள் யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் குழுவே.(ஆனால் இக் கொலைகளில் ஈடுபடுபவர்கள் ஒர் அரசியல் வரையறையில் நின்றுதான் கொலைகளைச் செய்பவர்கள் அல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.) இதை யொட்டி நாம் மறைமுகமான விமர்சனம் ஒன்றை சமர்-12ல் 'ஐரோப்பிய பாராளுமன்ற தீர்மானமும் மாற்று மொழிக் கட்டுரைகளும்' என்ற தலைப்பில் செய்திருந்தோம்.

இருந்தபோதும் தமது கருத்துக்களைத் திருத்திக் கொள்ளாது அதன் வழிகளில் செல்வதுடன், அவர்களுத் சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்.. என்ற குழிவில் ஊக்குவித்து நிற்கின்றனர்.

தேச விடுதலைக்கு எதிராக மாறிவிடும் சமாதானக் குழவின் செயற்பாடு, எதிர்கால செய்பாடுகள் என்பன மிகவும் ஆபத்தானது. அவர்கள் உண்மையான விடுதலையின் பால் ஆர்வம் இருப்பின் புரட்சிகர வழிமுறைகளில் மக்களை அணி திரட்டவும், தம்மை சுயவிமர்சனம் செய்து கொள்ளவும் தயங்காது முன்வரல் வேண்டும்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க அறிக்கையை அப்பாவித்தனமான மொழி பெயர்த்து சபாலிங்கம் படுகொலை செய்யப்பட வாய்பளித்ததைப் போல் மேலும் சிலரை ஐரோப்பாவில் மோட்டுத்தனமாக பலியிட 'சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்..' என்ற கோரிக்கையின் பின்னுள்ள [redacted] கோரிக்கைகள், மற்றும் அதன் பிழையான செயல்வடிவம் என்பன நியாயப்படுத்த முடியாத அரசியற் படுகொலைகளக்கு பரிதாபமாக வழி வகுக்கும் என்பதை சமரானது சுட்டிக் காட்ட விரும்புகின்றது ●

## சிதைத்தாலும் எரித்தாலும் செங்கொடி அழியாது!

தோழர்கள் வில் ஹெல்ட், லிப்னெட்டும், ரோசா லக்சம்பர்க்கும் ஜெர்மன் பொதுவுடமைக் கட்சியைக் கட்டியதில் பெரும் பங்காற்றியவர்கள். 75 ஆண்டுகளக்கு முன்பு ஆளும் வர்க்க எதிரிகளால் படுகொலை செய்யப்பட்டு தியாகியானவர்கள். லீப்னெக்ட், மிகப் பிரபலமான பொதுவுடமை நூலான "சிலந்தியும் ஈயும்" என்பதினை எழுதியவர்.

கடந்த ஜனவரி 15ம் திகதி இவ்விரு தியாகத் தோழர்களின் 75-வது நினைவு தினம் வந்தது. என்றுமே கண்டிராத அளவு அந்நாளன்று 50,000 க்கும் ஆதிகமான ஜெர்மனிய மக்கள் தலைநகர் பெர்லினில் மக்கள் செங்கொடிகளோடு ஊர்வலமாக சென்று அவர்களின் தியாகத்தை நினைவு கூர்ந்தனர். பலமணி நேரம் வரிசையில் காத்திருந்து அவர்களது சமாதிகளில் மலர் வளையம் வைத்து சிவப்பஞ்சலி செலுத்தியுள்ளனர். மேற்கு ஜெர்மனி கிழக்கை விழுங்கியபின் இனி "கம்யூனிச தலைவர்களை எல்லாம் மக்கள் மறந்து விடுவார்கள்" என்ற ஏகாதிபத்திய வாதிகளின் நப்பாசைகளுக்கு ஆப்பு அறைந்துள்ளது, இந்நிகழ்ச்சி.

நன்றி- புதிய ஜனநாயகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ்த் தேசியத்தை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் தற்கொலை வாகனம் ஒன்று குண்டுடன் வெடித்ததில் 200 பேர் அளவில் மக்கள் கொல்லப்பட்டதாக ஒரு பொய்ப் பிரச்சாரத்தை அரசினர் முன்னெடுத்தனர். குண்டுகளும், வெடி மருந்துகளுமே வாழ்க்கையாகிப் போய்விட்ட எம் மக்களின் வாழ்வில், இவைகள் எந்த ஒரு கணமும் வாழ்வுடன் இணைந்தபடியே இருந்தும் வந்துள்ளது. இவ்வாறிருக்கும் பொழுதில் ஒரு தற்செயல் விபத்துக்கள் ஏற்படுவது சாத்தியமானதே. ஆனாலும் இதைத் தவிர்ப்பதும் மிக அவசியமானதே.

சிறிலங்கா அரசானது தனது கொலை வெறியாட்டத்தை மூடிமறைக்கும் சூழ்ச்சியின் அடிப்படையில் இதைப் பிரச்சாரத்துக்கு எடுத்துச் சென்றனர். ஆனால் உண்மையிலேயே ஒரு விபத்து நடந்த போதும், அரச, மற்றும் ஏகாதிபத்திய பிரச்சார சாதனங்கள் முழக்கியது போன்ற ஒரு பெரிய மக்கள் அழிவை ஏற்படுத்திய விபத்தாக அது இருக்கவில்லை. 500க்கு மேற்பட்ட மக்களைக் கொன்று கொலை வெறியாட்டம் போட்ட இனவெறி சந்திரிகா அரசு, இவற்றிலிருந்து மக்களைத் திசை திருப்பிவிட பொய்ப் பிரச்சார வடிவங்களைச் சார்ந்து இருப்பதுடன், மீண்டும் புதிய தாக்குதல்களைத் தொடுக்க அரசபடை குவிப்புக்களைச் செய்தவண்ணம் உள்ளது. 1987களுக்குப் பிந்திய மிகப் பெரிய தாக்குதல் தேல்வி பெற்ற பின் கூட, மீண்டும் 'மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற வகையில் புதிய தாக்குதலைத் தொடுக்க உள்ளது.

தமிழ்த் தேசியத்தின் இருப்பை அச்சுறுத்தும் வகையில், எல்லாத் துறைகளிலும் பொருளாதாரத் தடையை செய்துள்ள இனவெறி அரசு, பாரிய இராணுவ முன்னெடுப்புக்களின் மூலம் தமிழ்த் தேசியத்தை மண்டியிட வைக்கும் முயற்சியில் போலி முற்போக்கு அரசின் இனவெறியர்கள் தொடர்ந்தும் தமது கைவரிசைகளைத் தொடர்கின்றனர். இவர்களை முற்போக்கு அரசு என சில ஆலவட்டப் பேர்வழிகள் தூக்கிச் சுமக்க, மீண்டும் மக்கள் ஆயிரக் கணக்கில் கொல்லப்பட்டும், குதறப்பட்டும் வருகின்றனர்.

புலிகள் இந்நிலைகளில் கூட மக்களின் ஜனநாயகத்தையோ, அவர்களின் சுயாதீனமான சுதந்திரமான அரசுக்கு எதிரான குரல்களை எழுப்பி விடுவதற்குக் கூட தடையாக இருந்து வருகின்றனர். இதன் மூலம் தேசிய விடுதலைப் போராட்டமானது சரியான திசை வழியில் வழிநடாத்தப் படாமல், குறுகிய மட்டுப்படுத்தப்பட்ட தற்காப்பு யுத்த வடிவத்திற்கு மேல் முன்னேற முடியாமல் மீண்டும் மீண்டும் உறைந்து தேக்கத்திற்கு உள்ளாகி வருகின்றது. பரந்துபட்ட மக்களை அணிதிரட்டும் ஒரு முன்னணியைக் கூட உருவாக்கி விட முடியாத நிலை என்பது, தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு குந்தகமான, அப் போராட்டத்தை குட்டிச் சுவராக்கும் நிலையேயாகும்.

---

## சமஷ்டி முன்மொழிவு என்பது,..

(முன் பக்கத் தொடர்)

இந்த பூச்சாண்டி காட்டும் வெறும் சமஷ்டி அலகு பிரிவுகளுக்காக அல்ல. மாறாக ஒரு தேசிய இனம் தனது இறைமையை சுயநிர்ணயத்தை பெற்றுக் கொள்வதில் தான் பூரணமடைகின்றது. அதற்கும் அதிகாரப் பரவலாக்க அமைப்புகள் இருப்பது அவசியமானதே, அது வேறு விடயம். ஆனால் வெறும் அதிகாரப் பரவலாக்கம் என்ற வகையில் சம்ஷ்டியை பிரகடனம் செய்வதும், அதை சிங்கப் பிரதேசத்திலும் பிரிப்பது ஒரு தேசிய இனத்தின் அடையாளத்தை கொச்சைப் படுத்துவதும், கேலி செய்வதுமாகும்.

இந்த பேரினவாத புத்திஜீவிகள் குடியேற்றம், குடியகல்வு போன்றவைகளை இந்த சமஷ்டி அரசிடம் ஒப்படைக்கத் தயாராக இல்லை. இது போன்று அம்பாறையை வடக்குக் கிழக்கிலிருந்து வெளியேற்றி விடுகின்றனர். இவற்றை UNP, SLAP கூட வைக்கத் தயாராக உள்ளன. அம்பாறை மாவட்டம் 1948ல் தமிழ் முஸ்லிம் மக்களின் பாரம்பரிய பிரதேசமாகவே இருந்தது. இன்று குடியேற்றம், குடியகல்வு மூலம் பாரம்பரிய பிரதேசம் என்ற அடிப்படையையே கேள்விக்குள்ளாக்கி உள்ளனர், பேரினவாதிகள். இதைச் சாதகமாகக் கொண்ட பேரினவாத புத்திஜீவிகள் வடக்குக் கிழக்கிலிருந்து அம்பாறையை வேறுபடுத்துகின்றனர். போகிற போக்கில் நாளை திருமலையைக் கூட இந்நிலைக்கு ஆளாக்கி வருகின்றனர் இந்தப் பேரினவாதிகள்.

வரலாறு, அதன் மீதான ஒடுக்குமுறையையும் நிராகரித்து, இன்று ஒருமாதிரி ஒரு தீர்வைத் திணித்து தமிழ்த் தேசிய இனத்தின் அடிச் சுவடியை முற்றாக ஒழித்துக்கட்டும் வகையில் வரையப்பட்டதே இந்த சமஷ்டி வரைவாகும். தமிழ்த் தேசிய இனம் 85களில் திம்புப் பேச்சுவாத்தைகளில் முன்மொழிந்த

- வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகப் பகுதி அங்கிகரிக் கப்படல் வேண்டும்.
- தமிழ் மக்கள் தனியான தேசிய இனம் என்பது அங்கிகரிக்கப்படல் வேண்டும்.
- தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை அங்கிகரிக்கப்படல் வேண்டும்.
- நாடற்றவர்களாக உள்ள அனைத்துத் தமிழர்களுக்கும் குடியியல் உரிமை வழங்கப்படல் வேண்டும்.

இவ் அடிப்படைப் பிரச்சனைகள் முதலில் முதலில் அங்கிகரிக்கப்படல் வேண்டும். இதுவே எந்தப் பேச்சுவார்த்தை நிகழ்ந்தாலும் அதன் மிக முக்கியமான அடிப்படை அம்சமாக இருக்க வேண்டும். இத்துடன்

- மலையக மக்கள் ஒரு தனித்துவம் மிக்க ஒரு தேசிய இனம் என அங்கிகரித்தல்.
- முஸ்லிம் மக்கள் ஒரு தனித்தவம் மிக்க ஒரு தேசிய இனம் என அங்கிகரித்தல்.

இதுவே பேச்சுவார்த்தை நடாத்தும் இரு பிரிவினருக்கும் அடிப்படையானதும், தீர்வை வைப்பவர்கள் அடிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுமாகும். இதை நிராகரித்த அனைத்தும் பேரினவாதத்தை தக்கவைக்கும் வகையில் முன் மொழியும் ஒரு கபட நாடகமேயாகும்.

## □□கண்ணாடிகளிலும், கம்பளங்களிலும் கருகும் மொட்டுக்கள்

குழந்தைகள் உழைப்பதை தடை செய்யும் சட்டங்ள் இருப்பினும், உத்திரபிரதேசத்தில் மிர்ஸாபூர் மாவட்டத்திலும் பெரோஸாபாத் பகுதியிலும் நடத்தப்பட்ட ஆய்வுகள் அதிர்ச்சியளிக்கின்றன. மிர்ஸாபூர் மாவட்டத்தில் மட்டும் கம்பளம் பின்னும் தொழிலில் ஒருலட்சம் குழந்தை உழைப்பாளிகள் உள்ளனராம். முதல் மூன்று வருடங்களுக்கு சம்பளமில்லாமல் வேலை செய்யும் இவர்கள் அடுத்தவருடங்களில் 15 மணிநேர உழைப்புக்கு பெறும்கூலி 3 முதல் 5 ரூபாய்கள் வரை மட்டுமே.

பெரோஸாபாத் பகுதியில் கண்ணாடித் தொழிச்சாலைகளில் வேலைபார்க்கும் 50,000 குழந்தைகள், 700 டிகிரியிலிருந்து 1,800 டிகிரி சென்றிகிரெட் வரை வெப்பமுள்ள சூளைகளின் அருகே அமர்ந்து தினமும் 12 மணி நேரம் வேலை செய்கின்றனர். இதற்கு இவர்கள் பெறும்கூலி 8 முதல் 11 ரூபாய்களாகும். இவர்கள் எங்குமே தப்பிப்போக முடியாத அளவிற்கு மா∴பியாக்களின் கண்காணிப்பும் உள்ளதாம். ஆண்டுதோறும் நவம்-14 ஐ குழந்தைகள் தினமாக கொண்டாடும் ஆட்சியாளர்களின் மண்டையில் இவ உண்மைகள் ஏறுமா?

நன்றி: புதிய ஜனநாயகம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நாசிகளின் படுகொலைகளும், பிரான்சின் புதிய ஜனாதிபதியும்




இன்றைய ஜனாதிபதி- சிராக்
*( Jacques Chiras )*

மே -7ம் திகதி பிரான்சில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 14 வருட சோசலிச ஆட்சியானது முடிவுக்கு வந்துள்ளது. இச் சோசலிசக் கட்சி என்பது வரலாற்று ரீதியில் 2ம் அகிலக் கட்சியின் தொடர்ச்சியே ஆகும். 2ம் அகிலத்தில் லெனின் இருந்ததுடன் புரட்சிக்கு எதிராகவும், 1ம் உலக யுத்தத்தை இவ் அகிலம் ஆதரித்து நின்ற போதும், இதற்கு எதிராக லெனின் மற்றும் உண்மையான கம்யூனிஸ்ட்டுகளுடன் விமர்சித்து வெளியேறி, 3ம் அகிலத்தை உருவாக்கினார்.

சோசலிசக் கட்சியின் ஆரம்ப நிலையிலிருந்து தன்னை சீரழித்து வலதுசாரியாக மாற்றி வந்த நிலைமைகளில் இத் தேர்தலில் தோற்றுப் போனார்கள். இதேநேரம் பிரான்சுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி சீரழிந்து சோசலிசக் கட்சியின் வழியில் தொடர்கின்றனர். 40-50 களில் 150 தொகுதிகளை வென்று வெற்றிவாகை சூடிய கம்யூனிஸ்ட்டுக் கட்சி இன்று 10 தொகுதிகளைக் கூட வெல்ல முடியாமல் வலதுசாரியாக சீரழிந்து போகின்றனர்.

முதலாளிகளுடன் கூட்டு, இரகசியமாகப் பணம் பெறுதல், தொழிலாளர்களின் போராட்டங்களைக் காட்டிக் கொடுத்தல் போன்றவைகளால் இக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் முடிவு நெருங்குகின்றன. இன்றைய நிலையில் 4ம் அகிலத்தில் இருந்து முன்பு வெளியேறிய ஒரு ரொக்சியக் கட்சி எதிர்பாராத சில வெற்றிகளைச் சாதித்துள்ளது. 6சத விகித வாக்குக்களை முன் ஒருபோதும் பெற்றிராத இக்கட்சி புரட்சியை விரும்பும் மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இவர்களும் வெறும் வாய்வீச்சுடன், புரட்சியை முன்னெடுக்க முடியாத வகையில் ஒரு புரட்சிகர கட்சியாக கொள்கை ரீதியில் கூட இல்லாது உள்ளனர்.

இதேநேரம் தேசிய முன்னணி என்ற நாசிக்கட்சி தனது செல்வாக்கை முன்பொருபோதும் இல்லாத வகையில் (15.5சத விகித வாக்கைப் பெற்று) உயர்த்தி உள்ளது. சில பிரிவுகளில் முதற் சுற்று வாக்களிப்பில் முதன்மை வெற்றியைப் பெற்றனர். இவ் வெற்றியை பறைசாற்றும் வகையில் வெளிநாட்டவர்களை படுகொலைகள் செய்து வருகின்றனர். முதற் சுற்றுத் தேர்தல் முடிந்த 10ம் நாள் மே-1ம் திகதி நடந்த ஊர்வலத்தின் ஊடே பகிரங்கமாக மொரோக்கோ நாட்டைச் சார்ந்த 28 வயது இளைஞனை உயிருடன் செயின் நதியில் தூக்கிவீசி படுகொலை செய்தனர்.



இப் படுகொலையைத் தொடர்ந்து தேசிய முன்னணியின் தலைவர் லுபென் இதை ஒரு தற்செயலான விபத்தென அறிவித்தார். கொல்லப்பட்டவருக்கு அனுதாபத்தையோ தவறென ஏற்கக் கூட மறுத்தார். பின் பலதரப்புக்களிலும் எதிர்புகள் கிளம்பிய நிலையில் இக் கொலையை ஒட்டி பொலிஸ் மீது குற்றம் சாட்டினார். இக் கொலையைச் செய்த நாசி மொட்டையர்கள் ஊர்வம் ஊடாக வந்தபோது மேடையில் அமைர்ந்திருந்த லுபென் கையசைத்து வணக்கத்தைச் செலுத்துவதை எதிர்பாராமல் போலந்து நாட்டுத் தொலைக் காட்சிச் சேவையினர் படம் பிடித்திருந்தனர். இது தற்பொழுது பிரான்சில் பகிரங்கமாவே ரீவியில் காட்டப்படுகின்றது. இக் கொலையைக் கண்டித்து அடுத்த நாள் 30 ஆயிரம் மக்கள் வீதியில் இறங்கிப் போராடினர். இக் கொலை ஜனாதிபதி வேட்பனர்களின் ஒரு முக்கிய கேள்வியாக எழுந்தது.

இன்று ஜனாதிபதியாகப் பதவியேற்ற வலதுசாரியான சிராக் இது வெறும் சட்ட ஒழுங்குப் பிரச்சனை என்ற மட்டத்துக்குள் மட்டும் அணுகுவதாக பிரச்சாரம் செய்தார். பலதரப்பிலும் தேசிய முன்னணியை தடைசெய்யக் கோரிக்கைகள் எழுந்த போதும் சோசலிஸ்டுக்கள் அதை ஆதரிக்காத வகையில் குரல் கொடுத்தனர்.

இக் கொலை நடந்த 4ம் நாள், ஜனாதிபதித் தேர்தலுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் மீண்டும் ஒரு வெளிநாட்டவர் மார்செயில் என்ற இடத்தில் படுகொலை செய்யப்பட்டான். இது பெரியளவில் வெளிவராத வகையில் ஜனாதிபதித் தேர்தல் மூழ்கடித்து விட்டது. நாசிகளின் தலைவன் லுபென் 2ம் சுற்று வாக்களிப்பில் தனது ஆதரவாளர்களை வெற்று வாக்களிப்பை நடத்தக் கோரினான். இந்த வெற்று வாக்களிப்பு 7சத விகிதமாக இருந்தது. இவர்களே தீவிர நாசிகள் ஆவர்.

புதிய வலதுசாரி அரசாங்கம், இங்கு பிறக்கும் வெளிநாட்டுத் தாய் தந்தையரைக் கொண்ட குழந்தைகளுக்கு பிரஞ்சுப் பிரஜா உரிமையை உடனடியாக மறுத்துள்ளது. மாறாக 18 வயதில் கோரமுடியும். அக்காலத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருப்பின், பிரஞ்சுப் பிரஜா உரிமையை



நாசிகளின் தலைவன் - லுபென்

பெற முடியாதென அறிவித்துள்ளனர். இரண்டு லட்சம் மாணவர்கள் ஒரு வருட காலத்திற்கு முன்பு இவ் வலதுசாரி அரசுக்கு எதிராக போராடிய போது அது வன்முறையில் நகர்ந்தது. அந்நிலையில் அல்ஜிரிய மாணவர்கள் வன்முறையில் ஈடுபட்டனர் எனக் கூறி நாடு கடத் தினர். பின் இது பல சட்டச் சிக்கல்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உட்பட்டும், மாணவர்கள் போராடியும் மீளவும் அவர்களை நாட்டுக்குள் கொண்டு வந்தனர். பிரஜா உரிமைச் சட்டமென்பது சாதாரணமாக போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு பயன்படும் என்பதை மேற்கூறிய சம்பவம் தெளிவாக்குகின்றது. இதன் மூலம் இவ் வலதுசாரி அரசு தனது நிற வேற்றுமையை வெளிப்படுத்தி வருகின்றது.


இன்றைய புதிய ஜனாதிபதி வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் பிரகடனம் செய்தார். இது எப்படிச் சாத்தியமானது என்கின்ற போது வெள்ளை நிறம் அல்லாத தொழிலாளர்களை நாடு கடத்துதல் மூலமேயாகும். முதலில் விசா இல்லதவர்கள், அடுத்து குறகிய கால விசா உள்ளவர்கள், பின் குறகிய கால விசாவுடன் ஒப்பந்த வேலைகளில் உள்ளவர்கள், (இமிக்கிரோன்) குற்றங்களில் சம்மந்தப்பட்டவர்கள் என்ற ரீதியில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் மீது தாக்குதல் தொடங்குமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இதைப் பிரஞ்சு மக்களும், வெள்ளை நிற ஐரோப்பியரும் பகிரங்கமாவே கதைக்கும் அளவுக்கு நிலைமைகள் உள்ளன. சக தொழிலாளியாக எமக்கு இது பற்றி குறிப்பிட்டுச் சொல்லும் போது இதன் தாற்பரியத்தின் வடிவத்தை புரிய முடிகின்றது. இவ் வலதுசாரி அரசு கடந்த பல ஆண்டுகளாக சோசலிச அரசில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அணுக் குண்டுப் பரிசோதனையை மீள நடத்தும் என அறிவித்துள்ளது. இதன் மூலம் சர்வதேச பதற்ற நிலைக்குள் உலகை வேகமாக நகர்த்த உள்ளனர்.

ஐரோப்பாவுக்குள் தலைமை இடத்துக்காக பிரான்சும், சர்வதேச ரீதியில் தலைமை இடத்துக்கு ஐரோப்பாவை நகர்த்த புதிய வலதுசாரி அரசு எல்லாவித முயற்சியிலும் ஈடுபடும். அதற்கு அணுக்குண்டுகள் மூலம் எல்லாவித மோசடிகளிலும், மிரட்டலிலும் ஈடுபடும் என எதிர்பார்க்கலாம்.

இவ் வருடம் முதல் அமுலுக்கு வந்த டங்கல் திட்டம் மூலம் காட்டாட்சியின் ஆக்கிரப்பு மூலம், உலகில் ஏற்பட்ட தேக்க நிலையில் இருந்து மேற்கு நாடுகள் மீள முயல்கின்றன. 1990ல் தேக்க நிலையில் இருந்த உலக பொருளாதாரம் 1995ல் 3சத விகித வளர்ச்சியைக் கண்டதன் மூலம் உலகை மிகச் சிறப்பாகச் சுரண்ட இவ் டங்கல் திட்டம் சிறந்த வழியாக அமைகின்றது. இதை மேலும் இப் புதிய வலதுசாரி அரசானது தீவிரமாக்கும்.

இவ் அரசு, மக்கள் நீண்ட காலங்கள் போராடிப் பெற்று விட்ட பல சலுகைகளை கடந்த இரண்டு வருடங்களில் பறித்துள்ளது. இந்த வகையில் மொத்த சம்பளத்தில் ஒரு சதவிகித வெட்டை செய்ததுடன், மருத்துவம், மற்றும் குடும்ப உதவித் தொகைகளிலும் பாரிய வெட்டை நடாத்தியுள்ளது. இப் புதிய அரசின் கீழ் பரந்துபட்ட பிரஞ்சு மக்களினதும், வெளிநாட்டுத் தொழிலாளர்களினதும், பிரஞ்சுக் காலனிகளிலும் பல போராட்டங்களை எதிர்காலத்தில் நாம் சந்திக்க முடியும்.




## கடலுக்கடியில் 2000 பெற்றோலியக் குப்பைகள்

Alaska (E-U) - அலெஸ்கா
Etats - unis - அமெரிக்கா
Mexique - மெக்சிக்
Ameriques du nord et centrale - மத்திய வட அமெரிக்கா
Nigeria - நைஜிரியா
Cameroun- கமுறுன்
Production mondiale- உலக உற்பத்தியில்
Congo - கொண்கொ

### LA PLANETE OFFSHORE
### பூமியிலுள்ள கடல் கழிவுகள்

- Principales - குண்டுகள் வைததுத் தாட்ட இடம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருக்கலைப்பில் எமது சரியும், தவறும்




நாம் கருக்கலைப்பு தொடர்பான பிரச்சனையில் சமரில் இருந்து ஒருவரை வெளியேற்றியதுடன், இது சூடுபிடித்து பல சஞ்சிகையில் கருத்துக்களாக தொடர்ந்து வெளிவந்தன

நாம் இப் பிரச்சனை மீது ஓர் அரசியல் முடிபை அடைந்த நிலையில் இதன் மீதான தொடர்ச்சியான கருத்துக்களை முன்வைத்து வந்தோம். நாம் எழுப்பிய கேள்விகளை சம்மந்தப்பட்ட நபரோ, அல்லது இவ் விவாதத்தில் ஈடுபட்ட எவருமே எமக்கு பதிலளிக்க முடியாது போய் இருந்தனர். இருந்தபோதும் இதில் நாம் ஏதோ ஒரு தவறைக் கொண்டுள்ளோம் என்ற உள்ளுணர்வு காரணமாக எமக்குள் தொடர்ச்சியான தேடலையும், தனிநபர்களுக்கு இடையிலான கடிதமூலமான விவாதங்களையும் இது விரிவுபடுத்தியது. இதன்போது எமது தவறு எமக்கு சரியாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

கரு அழிப்பு என்பது ஒரு பெண்ணின் விடுதலையின் ஒரு பகுதி என்ற கோஷம் ஒரு குட்டிபூர்சுவா வர்க்கக் கோரிக்கையாகும். இருந்தபோதும் இதில் ஒரு ஜனநாயகக் கோரிக்கையும் உள்ளடங்கி இருந்ததை நாம் காணத் தவறியிருந்தோம். இதை நடைமுறைகளுடன் விளக்குவதாயின்:
எப்படி ஒரு தேசியம் முதலாளித்துவக் கோரிக்கையாக உள்ளதோ, அதேநேரம் அதில் ஒரு ஜனநாயகக் கோரிக்கையும் உள்ளடங்கி உள்ளதோ - அதுபோன்றதே இதுவும்.

எப்படி எல்லா மக்களுக்கும் வாக்குரிமை வேண்டுமென்பது பூர்சுவாக் கோரிக்கையாக உள்ள அதேநேரம், அதில் ஜனநாயகக் கோரிக்கை உள்ளதோ அதுபோன்றதே இதுவும். இதுபோன்று பலநூறு விடயங்களை முன்வைக்க முடியும். கோரிக்கைகளாக உள்ளவைகள் எல்லாம் பாட்டாளிகளின் குறிக்கோள் அல்ல. ஆனால் அதிலுள்ள ஜனநாயகக் கோரிக்கையை ஆதரிக்கவும், குரல் கொடுக்கவும் செய்கின்றனர். இது தெளிவான விமர்சனத்துடன் அமைந்தவைகளே ஆகும். இந்தவகையில் கரு அழிப்பில் இருந்த ஜனநாயகக் கோரிக்கையை நாம் கடந்த காலத்தில் காணத் தவறியது என்பது மட்டும் எமது சுயவிமர்சனத்துக்கு உட்பட்டதாகும்.

கரு அழிப்புத் தொடர்பாக வெளியில் வந்த விமர்சனங்கள், எமது தொடர்ச்சியான கேள்விகளை விவாதிப்பதைத் தவிர்த்தே வெளிவந்திருந்தன. ஆனால் நாம் அதில்தான் முடிவை வந்தடைந்தோம். இவர்களின் விவாதங்கள்:

* கரு அழிப்பு ஒரு பாட்டாளி வர்க்கக் கோரிக்கை என்றனர்.
* கரு அழிப்பு ஒரு பெண்விடுதலைக் கோரிக்கை என்றனர்.
* கரு என்பது ஒரு குழந்தைக்கான உயிர் என்பது ஒன்று இல்லை என்றனர். அதாவது இயங்கியலின் தொடர்ச்சியை மறுத்தனர்.
* இதை பெண்விடுதலையுடன் முடிச்சுப் போடுவதன் மூலம் குடும்ப அலகை, தனிநபர் பொருளாதார நலனுக்கு இசைவாக, குடும்ப அலகை நிராகரிக்கும் போக்கு முனைப்புப் பெற்றது.
* கரு அழிப்பின் சீரழிவு வடிவங்களையோ, பெண்ணுக்கு எதிராக கரு அழிப்பு நடந்தபோது அதுபற்றி மௌனத்துடன் இருந்துவிடும் போக்கு.

இது போன்று பல காரணங்கள் எம்மால் சரியான பக்கத்தை அடைவதற்குத் தடையாக இருந்தன. இது பற்றி விவாதித்த பலரும் இது தொடர்பான தேடலை நடத்தத் தயாரற்று இருந்ததை காணமுடிகிறது. பெண்விடுதலை தொடர்பாக மார்ச்சியம் கண்டும்காணாமல் விட்டது என்ற வாதமும் இன்று இவர்கள் மத்தியில் பரவலாகக் காணப்படுகின்றது.

இதில் வேடிக்கை என்னவென்றால் லெனின் எழுதிய 'மகளிர் விடுதலை பற்றி' என்ற புத்தகத்தில் பெண்விடுதலையின் பால் விடயங்கள் சொல்லப்பட்டுள்ளது. அதில் கரு அழிப்புப் பற்றிய பகுதியும் உண்டு. (இவைகள் சமரிடம் இருப்பின் அடுத்த அடுத்த இதழ்களில் பிரசுரிப்போம்.)

இதைப் பலர் படிக்கவில்லை, அல்லது படித்தவர்கள் மறைத்துள்ளனர். ஏனெனில் இது ஒரு குட்டிபூர்சுவாக் கோரிக்கை என்பதை லெனின் மிகத் தெளிவாக அம்பலப்படுத்துவதால் ஆகும்.

இது ஒரு பெண்ணின் விடுதலைக்கு வழிவகுக்கப் போவதில்லை. இந்தவகையில் சமர் சரியாகவே விவாதித்தும் இருந்தது. இன்று பிரான்சில் இரண்டு லட்சம் சிசுக்கள் வருடம் அழிக்கப்படுகிறது. இன்று சீனா, இந்தியா, மற்றும் மூன்றாம் உலகநாடுகளில் பெண்குழந்தை என்றால் அழிக்கும் போக்கு வளர்ந்து வருகின்றது. இது சீரழிவுக்கும், பெண்ணுக்கு எதிராகவுமே செல்கிறது.

இன்று கரு அழிப்பின் எல்லா அடிப்படையும், அதைச் செய்வது பெண்ணாக இருந்தாலும் அது ஆணாதிக்கக் கோரிக்கைக்கு உட்பட்டே நடக்கிறது என்பதை நாம் நிராகரிக்கவே முடியாது.

## சொர்க்கத்தில் தற்கொலை!

U.S.A யில் 12%மான 'ரீன்ஏஜ்' வயதினர் தற்கொலை செய்வதற்கு மிகவும் அருகில் இருந்து வரகின்றார்கள். 60% மானவர்கள் தற்கொலை செய்தவர்களின் நண்பர்களாக இருக்கின்றனர் என அமெரிக்க ஆய்வுகள் கூறுகின்றன. இவை சிறப்பாக கோடைகாலங்களில் அதிகரிக்கிறது எனவும், இக்காலத்தில் 'ரீன்ஏஜ்' வயதினர் வேலை இல்லாமையாலும், உயர்கல்வித் தயாரிப்பு நெருக்கடிகளினாலும் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொள்கிறார்கள் என அமெரிக்க GALLUP நிறுவனம் கூறியுள்ளது-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏகாதிபத்தியத்திற்கு சாமரம் வீசும் மனித உரிமைக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள்

மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் யாழ் மண்ணில் ஏற்பட்ட மாற்றுக் கருத்துக்கள் மீதான புலிகளின் தாக்குதலுடன் கொழும்புக்குத் தப்பி வந்தனர். கொழும்பு வந்த பின்பும் முற்றாக தமிழ் சமுகத்தில் அன்னியப்பட்டதுடன் தம்மை முற்றாக தலைமறைவாக்கியவர்கள் இலங்கை அரசு, புலிகள் மற்றும் அனைத்துத் தரப்பு மனித உரிமை மீறல்களையும் தொகுக்கத் தொடங்கினர்.

இத் தொகுப்பபை இப் புத்திஜீவிகள் இலங்கையிலுள்ள இரு மொழியாகிய தமிழ், சிங்களத்தில் தொகுத்து அந்த மக்களிடம் எடுத்துச் செல்லவில்லை. மாறாக இதை ஆங்கிலத்தில் தொகுத்தபோதும் இதை ஓர் ஆவணத் தெகுப்பாக தொகுத்து இருப்பின் இவர்களின் பணியை நாம் விமர்சிக்கவேண்டி ஏற்பட்டிருக்காது.

இவர்கள் முற்றாக மக்களிடம் அன்னியப்பட்ட நிலையில், முற்றாகத் தலைமறைவாக இருந்தபடி.. இத் தொகுப்பை ஆங்கிலத்தில் சர்வதேச ரீதியில் ஏகாதிபத்தியத்துக்கும், அதன் எடுபிடிகளுக்கும் விநியோகிப்பதில் முழுமூச்சாக கடந்த காலங்களில் செயற்பட்டனர். வீடுதலைமீது ஆர்வம் இருந்த பலருக்குக் கூட இதைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அவர்கள் இவ் ஏகாதிபத்திய வெளியீடுகளிலும், மற்றும் அவர்களின் நூல்களிலும் தான் பார்க்க முடிகிறது.

இன்று இவர்கள் ஏகாதிபத்திய பணத்திலும், அவர்களின் பாதுகாப்பிலும் தங்கி இருப்பதுடன், இவர்கள் கடந்த 2-3 வருடங்களாக அடிக்கடி ஐரோப்பிய இரகசிய விஜயங்களைக் கூடச் செய்துள்ளனர்.

சாபாலிங்கம் கொல்லப்பட்டதற்கு முந்திய மாதத்தில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பாராட்டியும், துணிவைப் போற்றியும், உதவிகள் செய்யவும் இப் பாரளுமன்றம் தீர்மானம் நிறைவேற்றியது.

இன்று உலகில் யுத்தத்திற்கும் அழிவிற்கும் காரண கர்தாவான இந்த ஐரோப்பிய அரசுகளே இலங்கையின் யுத்த நிலைக்கும் காரணமாகும். இது இப் புத்திஜீவிகளுக்குப் புரியாதோ! ஐரோப்பிய பாராளுமன்ற உதவியை, அறிக்கையை, அதன் ஊதாரித்தனத்தை நிராகரிக்க முடியாத இவ் 'மனித உரிமை பல்கலைக்கழக ஆசிரியர்கள்' இந்த நாகரீக ஐரோப்பிய அரசுகளின் கால்களை விழுந்து தொழுது நிற்கின்றனர். இவர்கள் தொடர்ந்தும் இவ் நாகரீகக் கனவான்களுக்கு இச் சமாதானப் பிரியர்களுக்கு மனித உரிமையின் பெயரால் சமர்பணம் செய்து, தொண்டூழியம் புரிவதுடன் அண்மைக் காலமாக இவர்கள் கொழும்பிலிருந்து வந்து ஐரோப்பிய அரச பிரதிநிதிகளுடன் கூடிக்குலாவிச் செல்கின்றனர்.

இப்படி வந்த பிரதிநிதி, இங்குள்ள மாற்றுக் கருத்துப் பிரதிநிதிகளைச் சந்தித்து வென்றெடுக்க முயற்சி செய்தார். இதன்போது அப் பிரதிநிதியிடம் (தமிழர்) '' ஏன் நீங்கள் உங்கள் வெளியீட்டை தமிழில் கொண்டுவர முடியவில்லை? '' எனக் கேட்டதற்கு, அவரோ "அது அவசியம் இல்லை. அது மினைக்கெட்ட வேலை, அதில் பிரியோசனமே இல்லை'' எனக் கூறியதுடன் இதன் போக்கில் பலதும் கதைத்தார்.

புரிகிறது புத்திஜீவிகளே! நீங்கள் எங்கே போகிறீர்கள் என்பது. அது சரிநிகர் 74, 75கள் புரிய வைத்தன. சரிநிகருக்கு நடக்கும் உட்பூசல், அதை அரசு சார்பாக மாற்ற முயலும் கூட்டமான இவ் மனித உரிமைக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் எடுபிடிகள், தொண்டுகளின் விலாவரியான முகத்தை சரிநிகர் 74,75ல் வெளிப்படுத்தினர்.

அண்மையில் ஏற்பட்ட யுத்தமும் அதன் தொடர்ச்சியில் புலிகளின் மீது ஏறிப் பாய்ந்துள்ளனர். புலிகள் வேறு மக்கள் வேறென (சந்திரிகா அல்ல) இந்த யாழ் மனித உரிமை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திடீரென கண்டுபிடிப்பாக ஒப்பாரி வைத்துள்ளனர். அதாவது அரசும் இன்று அப்படித்தான் சொல்கிறது. இவர்களும் அப்படித்தான் சொல்கின்றனர். என்ன வேறுபாடு? எல்லாம் ஒன்றுதான். புலிகள் அழிக்கப்படவேண்டும் என ஓலம் இடுகின்றனர். யார் அழிப்பது? அரசு, அல்லது இந்த ஏகாதிபத்தியப் படைகள். (இவர்கள் இப்படி நேரடியாகக் கூறவில்லை ஆனால் அதைத்தான் மறைமுகமாகச் சொல்கின்றனர்.)

இல்லை மக்கள் போராடவேண்டும் எனின்: என்ன அடிப்படையில் என்பதுவும் இவர்களுக்குக் கிடையாது. புலிகள் மக்களுக்கு எதிராக உள்ளனர் என்பது உண்மையே ஆனால் அதைக் காட்டி அரசுக்கு சாமரம் வீசும் உங்கள் முயற்சிக்கு ஐரோப்பிய பாராளுமன்றம் முதல் ஏகாதிபத்தியங்கள் வரை துணை நிற்கின்றன. இதைச் செய்ய 'மனித உரிமைக்கான...' என்ற பெயர் ஓர் அவமானச் சின்னம். ஏமாற்றுக்காரர்களும், மோசடியில் ஈடுபடுபவர்களும், துரோகிகளுமே இப்படிச் செய்ய முடியும்.

நீங்கள் துரோகிகளின் இராணுவ உடுப்பைப் போட்டு, அவர்களுக்கு மேல் இருந்து மனித உரிமை பற்றி பிரச்சாரம் செய்து, புலிகளை அழிப்பது எப்படி என வகுப்புகள் எடுப்பது நல்லது என நாங்கள் சிபார்சு செய்கின்றோம். அதை நேரடியாகச் செல்லிச் செய்வது உங்கள் நேர்மைக்கு ஓர் எடுத்தக்காட்டாக அமையும். உங்களது மனித உரிமையின் மீது எமது கேள்விகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாங்கள் புலிகளுடன் இணையாது இருப்பது ஒரே ஓர் அடிப்படையில் மட்டுமே அது ஒடுக்கப்பட்ட மக்களின், அதன் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவில்லை. அதனால் அது சார்ந்த வன்முறையை எதிர்க்கின்றோம்.

உங்களுக்கும் துரோகக் குழுக்களுக்கும் என்ன வேறுபாடு உண்டு? (செயலுக்கு அப்பால் கேட்கின்றோம்) கொள்கை ரீதியில் புலி அழிப்பு, அரசின் மனித உரிமை மீறல் பற்றிய வாய்ப்பந்தல், தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு இதுவே உங்கள் இருவருக்கும் அடிப்படை.

இனவாத யுத்த நோக்கில் அரசு உள்ளவரை தமிழ் மக்களையும், புலிகளையும் வேறுபடுத்த முடியாது. இன்றுள்ள நிலையில் தமிழ் மக்கள் இனவாதத்திற்கு எதிராக புலிகளாகவே தம்மை வெளிப்படுத்தி வருகின்றனர். இதை சமர் அங்கிகரித்து நிற்கின்றது. இது நாளை மாற முடியும். அது சுயமான அரசியலில், சொந்தக் கால்களில் போராட முனைவது மட்டுமே ஒரே ஒரு வழியாகும்.

மனித உரிமைக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள் இன்று இனவாதத்திற்கு எதிரான இவ் யுத்தத்தில் தமிழ் மக்களையும், புலிகளையும் வேறுபடுத்துவது

## ஆக்கிரமிப்பு நோக்கம் கொண்ட புதிய கவர்ணருக்கு ZAPATA வினர் எச்சரிக்கை!

மெக்சிக்கோவின் தெற்கு மாநிலமான CHIAPAS மாநிலத்தில் கலவரம் ஆரம்பிப்பதற்கான அறிகுறிகள் தென்படுவதாக அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட கவர்ணர் EDUARDO ROBLEDO என்பவர் பதிவி ஏற்பதாலேயே இப்பதற்றம் ஏற்பட்டுள்து.
சபாதா விடுதலை அமைப்பினர் EDUARDO பதவி ஏற்றால் "இப்பகுதியில் போர் மூளும்" என எச்சரிக்கை விடுத்துள்ளனர் என AFP செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது.
EDUARDO ROBLEDO ஆளும் கட்சியின் (PRD)பிரதிநிதியாக நின்று தேர்தலில் (21894) பங்குபற்றினார். இவ் ஆளும் கட்சி 1929ல் இருந்து ஆட்சியில் இருந்து வருகிறது. இக்கட்சியின் பிரதியான EDUARDO "கள்ள ஓட்டுக்கள் போட்டே தேர்தலில் 50% வாக்குகளை பெற்றுள்ளனர்." என ZAPATA அறிவித்துள்ளது.

> **நாங்கள் புலிகளுடன் இணையாது இருப்பது ஒரே ஓர் அடிப்படையில் மட்டுமே அது ஒடுக்கப்பட்ட மக்களின், அதன் அடிப்படை உரிமைகளுக்காகப் போராடவில்லை. அதனால் அது சார்ந்த வன்முறையை எதிர்க்கின்றோம்.**

அரசுக்கும் உங்களுக்கும் செயல்களுக்கு அப்பால் உள்ள உடன்பாடு

- ◊ புலிகள் வேறு, மக்கள் வேறு.
- ◊ அரசியல் தீர்வு மக்களுக்கு அவசியம்.
- ◊ புலி முதலில் அழிக்கப்பட வேண்டும்.

இதுவே உங்களுக்கும் அவர்களுக்குமான அடிப்படை.. புலிகள் வேறு தமிழ்மக்கள் வேறு என்ற உங்களின் கண்டுபிடிப்பு என்பது, பேரினவாத அடிப்படையிலான குரலேயாகும். புலிகள் தமிழ் மக்களின் சரியான போராட்டத்திற்கு எதிரானதாக இருந்தபோதும், இன்று தமிழ் மக்கள் - புலிகள் வேறு வேறு என்பது இனவாத யுத்தநோக்கில் வேறுபட்டது அல்ல. இனவாத அழிப்பில் அரசு, இராணுவம், துரோகிகள், யாழ். பல்கலைக்கழக மனித உரிமை ஆசிரியர்கள், புலிகளையும் மக்களையும் வேறுபடுத்த முயல்வது தமிழ் மக்களை அதன் உரிமைப் போரை வேரோடு ஒழித்துக்கட்ட முயற்சிக்கும் செயலாகும்.

என்பது: சந்திகா அரசை அதன் இனவெறி தாக்குதலை ஊக்கிவிக்கவும், ஏகாதிபத்தியத்தின் இன்றைய உலக ஒழுங்கை கட்டிப் பாதுகாக்கவும் செய்யும் மாபெரும் சதி முயற்சியாகும். இறுதியாக சரிநிகர் 75ல் நாசமறுப்பான் பல்கலைக்கழக ஆசிரியர்களின்

ஏகாதிபத்தியத்தின் தேவைக்கு ஆவணப்படுத்தும் எம் முயற்சியையும் ஏற்கமுடியாது. ஆவணப்படுத்தியதன் வெளிப்பாடு, அரசியலற்ற புலி எதிர்பாக மாறி, ஐரோப்பிய பாராளுமன்றத்தை திருப்தி செய்யமுயல்வதுடன் இன்று சந்திரிகா அரசுக்கு சேவை செய்ய தொடங்கியுள்ளனர். அதற்கு ஜனநாயகம், சமாதானம், மனித உரிமை ......போன்ற தேவையான எந்த சொல்லடுக்கு

> **இன்றுள்ள நிலையில் தமிழ் மக்கள் இனவாதத்திற்கு எதிராக புலிகளாகவே தம்மை வெளிப் படுத்தி வருகின்றனர். இதை சமர் அங்கிகரித்து நிற்கின்றது.**

கருத்தை விமர்சிக்கும் போது 'ஆவணத் தயாரிப்பு அவசியம்' என பாராட்டுகின்றார். இங்கு இவர் தடுமாறி விடுகின்றார். எப்படி அவர்களின் செயலைக் கொச்சைப் படுத்த முடியும் என்ற ஆதங்கம் போலும். ஆவணப்படுத்தல் அவசியம். ஆனால் அது இன்று யாருக்கு ஆவணப்படுத்தப்படுகின்றது?

களையும் பயன்படுத்தத் தயாரக இருப்பர்.
இவர்கள் இதைத் தொடங்கியபோது இதை யாரும் சொல்லவில்லைத்தான். ஆனால் சமர் அதை இடைக்காலத்தில் அதன் விளைவுகளைச் சுட்டிக் காட்டியது. இன்று அதைப் பலரும் ஏற்கும் நிலைக்குவருவது கண்கூடு. வெறும் ஆவணப்படுத்தல் புரட்சியாக மாறிவிடாது. அது எங்கே? யாருக்கு? சேவை செய்ய ஆவணப்படுத்தப்படுகிறது என்பது மிகவும் முக்கியமானதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புதிதாக உருவாகி வரும் தரகு முதலாளித்துவ வர்க்கம்

## இவர்கள் மக்கள் எதிரிகளே!

இன்று உலகம் ஒரு குடையின் கீழ் ஆளப்படும் வகையில் வேகமாக புதிய உலக ஒழுங்கு உருவாகி வருகின்றது. அந்த வகையில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில நூறு பன்னாட்டு நிறுவனங்கள் உலகின் மொத்த உற்பத்தியைக் கட்டுப்படுத்தி ஏகாதிபத்திய ஆதிக்கத்தை மொத்த நாடுகள் மீதும் நிறுவி வருகின்றது.

ஒவ்வொரு நாட்டின் தேசிய உற்பத்தியை அழித்தும், தேசிய செல்வத்தைக் கொள்ளையடித்தும் இவ் ஏகாதிபத்தியங்களில் வாழும் சிறு தொகையினர் ஆடம்பர வாழ்வை வாழுகின்றனர். இவ் ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்கள் துப்பிவிடும் எச்சில்களைக் கொண்டே தரகுமுதலாளித்துவ கூட்டம் உலகெங்கும் தமது சொந்த நாட்டைக் காட்டிக் கொடுத்து உயிர்வாழ்கிறது.

இந்தச் சிறுதொகை தரகுமுதலாளித்துவ கூட்டம் நாட்டிலுள்ள பிற்போக்கு வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து, 90சத விகித மக்களைக் கொள்ளையடித்து, கொட்டமடித்து வரும் இன்றைய நிலையில் புதிதாக ஒரு தரகு வர்க்கம் அரங்கில் உருவாகி வருகின்றது. தரகுமுதலாளிகள் மற்றும் பிற்போக்கு வர்க்கத்துடன் உள்ள சிறு கூட்டத்துடன் மொத்த மக்களையும் இணைக்கும் வகையில், அவர்களையும் இதற்குள் இழுத்து விடும் வகையில் கவர்ச்சிவாத சந்தையை உருவாக்கி வருகின்றனர்.

எழுந்து வரும் புதிய உலக பொருளாதார நெருக்கடியில், சந்தைப்படுத்துவதில் எழுந்துவரும் நெருக்கடிகளின் ஊடே தரகு கம்பனிகள் தமது உற்பத்தியை எவ்வளவுதான் விளம்பரம் செய்தும் விற்க முடியாமல் தேங்கி விடுகின்றன. இதனால் இதைச் சரிக்கட்ட 'Net work' என்னும் சந்தைப்படுத்தும் முறையை இப் பன்னாட்டு நிறுவனங்கள் உருவாக்கி உள்ளன.

NSA என்ற இன்றைய பன்னாட்டு நிறுவனம் 1970ல் 1000 டொலரையே சம்பாதித்தது. இன்று இந்நிறுவனம் 200கோடி டொலர்களை நிகர லாபமாக மீட்டுள்ளது இது இலங்கைப் பணத்திற்கு கிட்டத் தட்ட 11,000 கோடி ரூபாய்களாகும்.

இந்தப் பன்னாட்டு நிறுவனம் எப்படி இதைச் சாதித்தது? வழமையான சந்தைப்படுத்தும் வழிமுறைகளை விடுத்து மக்களை நேரடியாகவே விற்பனையாளனாக மாற்றியுள்ளது. ஒருவரை தமது தரகனாக மாற்றிய பின் அவன் அப்பொருளை தனது உறவினர், நண்பர்களுக்கு விற்கும் வகையில் இவ் விற்பனை வழிமுறையை உருவாக்கியுள்ளது.

விற்பவர் அதில் ஒரு கமிசனையும், முன்பு இவரை விற்பனரகாச் சேர்த்தோருக்கு ஒரு கமிசனையும் வழங்குகின்றது. இது பழைய தரகுமுதலாளிக்குப் பதில், பழைய எச்சில்களுக்குப் பதில் வாயிலிருந்து பறக்கும் துளி சிதறல்கள் அனைத்தின் மூலமும் இதைச் சாதிக்க முடிந்திருக்கின்றது. இதைச் செய்வதன் மூலம் பெரும் கொள்ளையடிப்பதுடன், பொருட்களுக்கு இலவச விளம்பரத்தைப் பெற்றுக் கொடுப்பதுடன், அப் பன்னாட்டு நிறுவனத்தைப் பாதுகாக்கவும், விற்பனை செய்பவரின் நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் இடையிலான உறவை ஒரு வியாபாரமாக மாற்றி சமுகத்தைச் சீரழிக்கவும் முடிகிறது.

NSA என்ற நிறுவனத்தின் பின் புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழர்களில் 6 ஆயிரம் பேர் அணிதிரண்டு உள்ளனர். இது அதிர்ச்சியானது மட்டுமல்ல: அமெரிக்காவுக்கு சேவகம் செய்யும் ஒரு நிகழ்வுமாகும். இந்த ஆறாயிரம் பேருக்கு தலைமை வகிக்கும் இலங்கையரின் மாத வருமானம் இலங்கைப் பணத்தில் சில பத்து லட்சங்கள் ஆகும். இதில் சேரத்தூண்டும் நண்பர்கள், தமது பணப்பையை நிரப்பும் கனவுகளுடன் எப்படியாவது விற்றுவிடத் துடிப்பதைக் காணமுடிகிறது.

(உ+ம்)மாக எமது நண்பர் ஒருவர் முன்பு எம்முடன் அரசியல் கதைத்ததுடன், சமருக்கு உதவியும் வந்தார். அவர் இந்த நிறுவனத்தின் தரகு நபராக மாறிய பின்னர், இதில் சேர எம்மைத் தூண்டினார். இது தொடர்பாகக் கதைக்க வந்தவர், வழமையாக பல அரசியலைக் கதைப்பவர் இந்த வியாபார பேரத்துக்கு அப்பால் எதையும் கதைக்க முன்வரவில்லை. இது ஓர் அதிர்ச்சியான விடயமாக இருந்தது. எம்மைச் சேர்க்க சில வழிவகைகளைக் கூட கூறினார். அதாவது சமருக்கு இருக்கக் கூடிய நிதி நெருக்கடியைத் தீர்த்துக் கொள்ள "இரண்டு பொருட்களை நீங்கள் விற்பின் சமர் ஒழுங்காக வரும்"- என்றார்.

பத்து நிமிடங்கள் கொண்ட ஒரு தமிழ் வீடியோ கசட் எமது பார்வைக்கு முன் வைக்கப்பட்டது. அந்த பத்து நிமிடக் கசட்டில் ஒருசில பொருட்கள் விளம்பரம் செய்யப் பட்டன. அதில் ஒரு பூட்டும், ஒரு தொலை நோக்குப் பார்வைக் கண்ணாடியுடனும் (கதவில் பூட்டுவது, வெளியில் பார்! எனக் கண்டு கொள்ள) அறிமுகத்தைச் செய்தனர்.

இதில் NCB நிறுவனத்தின் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் இவ் இரு பொருட்களும் உண்மையில் NCB யின் கண்டுபிடிப்பல்ல. மாறாக இங்கிலாந்திலும், ருசியாவிலும் இருந்த இரு நிறுவனங்களை விழுங்கி ஏப்பம் விட்ட NSA தனது பெயரால் இப் பொருட்களை விற்று பணத்தை அமெரிக்காவுக்கு கடத்துகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரகு முறையின் மாற்றத்தின் பின் இப் பொருட்களின் சந்தை வாய்ப்பை பத்து மடங்காக அதிகரிக்க வைக்கப் பட்டுள்ளது. இது மக்களில் எஞ்சிய சிறு தொகையைப் பிடுங்க மக்களின் காதுகளில் பூ வைக்கும் செயலே.

இதுபோன்று பல நிறுவனங்கள் இன்று ஐரோப்பா எங்கும் உருவாகி யுள்ளன. இது எதிர் காலத்தில் லாபம் கருதி பொருட்களுடன் பொருட்களை மோத விடுவதன் மூலம் சாதாரண மக்கள் மோத உள்ளனர். ஓர் உலக யுத்தம் ஏற்படின் இவ் விற்பனையாளர் கள் எந்த பன்னாட்டு நிறுவனத்தின் பிரதிநிதியாக உள்ளனரோ அந்நாட் டுக்காக சொந்த நாட்டையே விற்பர். ஒரு நாட்டில் இரண்டு அல்லது பல பன்னாட்டு நிறுவனத்தின் பின்னுள்ள இவர்கள் அந்நாடுகளுக்காக யுத்தம் செய்யவும், பாதுகாக்கவும் துடிப்பர். இது ஒரு புதிய எதிரி வர்க்கமாக பரிணாமித்து வளர்கிறது. இது தரகு பூர்சுவா வர்க்க (பெயர் சரியானதோ தெரியாது) மாக இனம்காண முடியும்.

மேற்படி NSA நிறுவனத்தின் பிரச்சார ஒளிநாடா வீட்டைப் பாதுகாக்கும் விளம்பரத்தில் 30களில் இருந்த உலக நிலைமை இன்று உள்ளது, இங்கி லாந்தில் பெருகி வரும் குற்றச் செயல் களை சுட்டிக் காட்டி உங்கள் வீடுக ளை, சொத்துகளை பாதுகாக்க இதை பாவியுங்கள் என விளம்பரம் செய்கிறது.

30களில் ஏழைகள் பெருகிய போதும் நீங்கள் கோடீஸ்வரராக முடியும் எனக் கூறி விற்கத் தூண்டுகின்றனர். இப்படிப் பல மோசடிகளுடன் உயர் வர்க்கப் பிரிவை இயன்றவரை பாதுகாக்க எல்லா வகையிலும் முயல்கிறது. இதைச் செய்ய குட்டிபூர்சுவா கனவுக ளுடன் உள்ள ஒவ்வொரு மனிதனை யும் பங்குதாரராக மாற்றி தமக்கும், ஏகாதிபத்தியத்திற்கும் சேவை செய்ய வழிவிட்டுள்ளது. இப் புதிய தரகு பூர் சுவா வர்க்கம் ஏகாதிபத்தியத்திற்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சேவை செய்வதன் மூலம் மக்கள் எதிரிகளாக வளர்ந்து வருகின்றனர்.○



# அமெரிக்கா: ரஸ்யாவில் இருந்து கடத்திச் செல்லும் செல்வங்கள்

1993 வான்கூவர் சந்திப்பில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன் ரஸ்யாவுக்கு அளித்த 160 கோடி டொலர் உதவியை எல்லா முதலாளித்தவ பத்திரிகைக ளும் 'ஆஹா' வெனப் புகழ்ந்து தள்ளியுள்ளன. அதே போல அமெரிக்கா 1994ல் மேலும் 360 கோடி டொலரை கடன் அளிக்கப் போவதாகவும், ஜப்பான் 200 கோடி டொலரைக் கொடுக்கப் பொவதாக வும் ஏழு பெரும் ஏகாதிபத்திய (G7) நாடுகளும் தங்கள் பங்குக்கு உதவலாம் என்றும், ரஸ்யாவை வளமாக்குவதுதான் மேற்குலக நாடுகளின் குறிக்கோள் என்பது போலவும் பூரிப்படைந்து எழுது கின்றன. ஆனால் உண்மையில் மேற்குலக நாடுகளில் இருந்து ரஸ்யாவுக்குள் செய்யப்படும் முதலீடுகளை விட, ரஸ்யாவி லிருந்து மேற்குலக நாடுகளுக்கு கடத்திச் செல்லப்படும் மூலதனம் தான் பலமடங்கு அதிகமாக வுள்ளது. கடந்த ஓர் ஆண்டில் மட்டும் சுமார் 4000கோடி டொலர் மதிப்புள்ள மூலதனம் மறைமுக வழிகளில் கடத்திச் செல்லப்பட் டுள்ளது. யெல்சிங்கும் அவர்க ளது பொருளாதார வல்லுனர் களும் தான் இக் குற்றத்தைப் புரிந்தவர்கள் என பகிரங்கமா கவே குற்றம் சாட்டினார் முன்னாள் ரசியத் துணை ஜனாதிபதி ரூட்ஸ்கோய். உலக வங்கியும் இக் கடத்தலை வெளிப்படையாகவே ஒத்துக் கொண்டுள்ளது.

# ரஷ்யா ஆக்கிரமிப்பு

சோவியத் யூனியன் என்ற ஒரு சோசலிச நாட்டை குருசேவ்-பிரசேனவ் கும்பல் முதலாளித்துவ மாக மீட்டு தமது முதலாளித்துவ விசுவாசத்தை வெளிப்படுத்தினர். கொப்பச்சேவ் மேலும் அதை பச் சையாகச் செய்த நிலைகளில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு உள்ளானார் இதைத் தொடர்ந்து ஜெல்சின் அமெரிக்காவின் காலடிகளில் விழுந்தபடி ஆட்சியைக் கைப்பற் றினர்.

முதலாளித்துவ மீட்சியுடன் தேசி ய இனப்பிரச்சனை சோவியத்தில் முன்தள்ளப்பட்டது. முதலாளித் துவ மீட்சியையும், சுரண்டலையும் வெளித் தெரியாது மறைக்க மக் களைக் கூறுபோட்டு, மோத விட்டு அதில் கொள்ளையடிக்கும் உள் நாட்டு வெளிநாட்டு கொள்ளைக் கார முதலாளிகள் சோவியத்தை இன மோதலுக்குள் அழைத்துச் சென்றனர்.

சோவியத்தில் தேசிய இனங்கள் சமமாக மதிக்கப்பட்டதும், சுயநிர் ணய அடிப்படையில் பிரிந்து செல் லும் உரிமையையும், முதலாளித் துவம் முற்றாகக் கைப்பற்றிய போ து அத்தேசிய இனங்கள் இலகு வாகப் பயன்படுத்தி பிரிந்து சென் றன.

இங்கு தேசிய இனங்கள் சோவி யத்தின் வழிகளில்தான் இப் பிரி வினையைப்பெற முடிந்ததே ஒழிய முதலாளித்துவ வழிகளில் அல்ல. இன்று செசன்யா தனிநாடு கோரி போராடி வருகிறது. இதன்மீது ரஷ்யா இராணுவம் மூர்க்கத்தனமாக தாக்குதலைத் தொடுத்து செசன்யா மக்களை அழித்து வருகின்றனர்.

4லட்சம் மக்களைக் கொண்ட செசன்யா மீதான ருஷ்ய ஆக்கிர மிப்பை அம்மக்கள் தீரத்துடன் எதிர்த்துப் போராடுகின்றனர். ருஷ் யக் கம்யூனிஸ்டுக்கள் இத் தாக் குதலை எதிர்த்து தேசிய சுயநிர் ணய அடிப்படையில் சொந்த மக் களுக்குள் பிரச்சாரம் செய்து வரு கின்றனர். மீண்டும் சோவியத்தில் புரட்சி மலரும். செசன்யா சு.நி உரிமை பெற்று சோவியத்தைப் பாதுகாத்துக் கொள்ளும். அதுவ ரை ஜெல்சின் ஆதிக்க ஆக்கிர மிப்புக்கள் தொடரத்தான் செய் யும். உலகின் ஜனாதிபதி கிளிங் டன் இத் தாக்குதலைத் தொடர்ந் து ஜெல்சினுக்கு தனது அனுதா பத்தை கூறி ஆக்கிரமிப்புக்கு பச் சைக் கொடி காட்டியுள்ளார். வாழ்க ஜனநாயகம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'கொலைகாரன்' டி.சிவராமும், 'பாய்' விரிக்கும் சரிநிகரும்

சமர்-13ல் நாம் டி.சிவராம் பற்றிய ஒரு விமர்சனத்தை முன்வைத்திருந்தோம். எமது விமர்சனம் சரியாகவே இருந்ததை மீண்டும் சரிநிகர்-69ல் டி.சிவராமின் கட்டுரை உறுதி செய்துள்ளது.

கடந்த சமர் இதழ்கள் முதல் புலிகள் தொடர்பான எமது நிலை என்பது தமிழ் மக்களின் தேசிய விடுதலையின் எல்லைக் உள்ளேயே விமர்சித்து வந்தோம். அதாவது தமிழ் மக்கள் தமது சொந்தப் போராட்டம் சாராத எந்தவகையான புலிகளின் தோல்வியும் மொத்தத் தமிழ் மக்களின் தோல்வியாகவே அமையும் என்பது சமரின் நிலை. இந்த வகையில் தமிழ் மக்கள் சாராத புலிகள் மீதான தாக்குதல், மற்றும் பலவீனமாக்கும் அனைத்துச் செயல்களையும் எதிர்த்து வந்துள்ளோம். இனியும் எதிர்ப்போம். அதேநேரம் தமிழ் மக்களின் சொந்தப் போராட்டத்தை கட்டி அமைக்கும் வகையில் புலிகளின் தவறுகளை கடுமையாக விமர்சித்தும் வருகின்றோம். இன்னும் ஒரு நிலையில் புலிகளின் வெற்றி என்பது தமிழ் மக்களின் வெற்றியும் அல்ல. மாறாக அது புலிகளினதும், அதன் வர்க்கப் பிரதிநிதிகளினதும் வெற்றியாகவே அமையும். தமிழ் மக்களின் வெற்றி என்பது சமூகமாற்றத்தை அடிப்படையாகக் கொண்டது மட்டுமே. இது மட்டுமே உண்மையான ஒடுக்கப்பட்ட மக்களின் வெற்றியாக இருக்கும்.

எமது விமர்சனம் என்பது இதற்குள் இருந்தே செய்கின்றோம். சரிநிகர் இன்று புலிகளின் தவறுக்கு பச்சையாகவே வாயுபச்சாரம் செய்யப் புறப்பட்ட நிலைமைகளில் இவ்விமர்சனம் அவசியமானதாகவே உள்ளது. இதை சரிநிகர் பிரசுரிக்க மாட்டார்கள் (எமது கட்டுரைகளுக்கு நடந்தது போல்) என்பதால் நாமே பிரசுரிக்கின்றோம். சரிநிகர் என்பது சரியான சமன் என்ற கோட்பாட்டைக் கைவிட்டு வருவது தெளிவானது. சரிசமன் எனக் கூறியபடி தவறுகளுக்கு மட்டும் எப்போதும் ஒருதலைப் பட்சமாக கருத்துச் சுதந்திரம் வழங்கி வருபவர்கள்.

டி.சிவராம் என்பவர் யார்? இன்று அவர் எப்படி புலிகளைப் பாராட்ட முடிகின்றது? எப்படி புலிகள் டி.சிவராமுடன் ஒட்டி உறவாட முடிகின்றது? இதுபோன்ற கேள்விகளை கடந்தகால வரலாற்றுடன்தான் தேடவேண்டும். டி.சிவராம் PLOTE அமைப்பில் உமா மகேஸ்வரனின் ஒரு வலது கையாக இருந்தவர். உமா மகேஸ்வரன் செய்த எல்லாவற்றுக்கும் உறுதுணையாக நின்றும், அவைகளுக்கு கொள்கை விளக்கமும் கொடுத்த ஓர் ஆசாமி.

PLOTE அமைப்பில் சில நூறு இளைஞர்களின் படுகொலைக்கு உற்ற துணையாக நின்றதும் அல்லாமல் பல கொலைகளை நேரடியாகத் தலைமையேற்று செய்தவர்தான் இந்த டி.சிவராம். ஒரு சில பெண்களைக் கற்பழிக்க முனைந்தவர். பல பெண்களையும், ஆண்களையும் நிர்வாணமாக்கி சித்திரவதை செய்து மகிழ்ந்தவர். விடுதலைப் போராட்டம் என்ற போர்வையில் ஒரு புறமும், மறுபுறம் இலைங்கை உயர் இஸ்தானிகளுடன் இந்தியாவில் விருந்துகள் உண்டு காட்டிக் கொடுத்தவர். விடுதலைப் போராட்டம் ஒரு புறமும் மறுபுறம் இந்திய றோ (ROW) வுடனும் கூடிக்குலாவி காட்டிக் கொடுத்து வந்தவர். விடுதலைப் போராட்டம் ஒரு புறமும் மறுபுறம் பிற்போக்கு நாடுகளின் கைக்கூலிகளுடன் கூடிக் கூத்தாடியவர். இப்படி PLOTE க்குள் நடந்த எல்லா பிற்போக்கு வியாதிகளுக்கும் சளைக்காமல் ஒத்துழைத்து பங்குகொண்ட ஒரு நயவஞ்சகன்.

இன்று பலிகளுடன் ஓர் உறவு, நியாயப்படுத்தல், என்றால் அது புலிகளை அழிக்க,புலிகளை மெச்சுவது அவசியமானது என்றே அர்த்தமாகும். புலி உறுப்பினர்கள் ஆறு பேரை சுழிபுரத்தில் இவரின் அமைப்பு படுகொலை செய்தபோது அதை மறைக்க உரத்துக் குரல் கொடுத்தவர். தேவையான இடங்களில் நியாயப்படுத்தியவர். அச்சுவேலியிலிருந்து இவரின் அமைப்புக்கு பயிற்சிக்குச் சென்ற ஒருவர் புலி ஊடுருவல் என்ற சந்தேகத்தின் பெயரில் அச்சுவேலியிலிருந்து சென்ற அனைவரையும் கொன்றபோது அதற்கும் உறுதுணையாக நின்று வக்காளத்து வாங்கியவர்.

PLOTE யை புலிகள் தடை செய்தபோது, PLOTE யை இந்தியாவிடம் அடகு வைக்கவும், பின் இலங்கை அரசுடன் கூடிக் குலாவவும், தேசிய விடுதலையை காட்டிக் கொடுக்கவும், துரோகம் இழைக்கவும் முக்கிய துரோக நடவடிக்கையில் ஈடுபட்டு PLOTE க்குள் ஒருதலைப் பட்சமாக புலி எதிர்ப்பை ஆரம்பம் முதலே ஊட்டி வளர்த்தில் டி.சிவராம் மிகப் பெரும் பங்கு வகித்தவர். இன்று புலிகளைப் புகழ்ந்து வக்காளத்து வாங்குகிரார் எனின்: புலிகளை அழிக்க சதி செய்கின்றார் என்பதே அர்த்தமாகும்.

புலிகளுக்கு வக்காளத்து வாங்க என்ன செய்கின்றார்? அதிலும் கூட மாபெரும் மோசடி! சொந்தக் கருத்துள்ள இரு சிங்கப் பத்திரிகை ஆசிரியர்களின் பெயரால், ஒரு பயணக்கட்டுரையின் மூலம் ஒரு நியாயப்படுத்தல். டி.சிவராம் தனது சொந்தக் கருத்துகள் என நேரடியாகச் சொல்லி இருக்கலாம். ஆனால் பாவம் இவ்விருவரும் நண்பன் என நம்பும் ஒரு மோசடிக்காரனின் கைப்பொம்மையாக மாறியது சோகமானதே. அதாவது PLOTE இன் தமிழீழ விடுதலைப் போராட்டம் போல..

அஜித் சமரநாயக்கா (ஒப்சேவர் பத்திரிகை ஆசிரியர்), விக்டர் ஐவன் (ராவய பத்திரிகை ஆசிரியர்) ஆகிய இருவரின் பெயரால் அவர்கள் புலிகளை ஒட்டிய முன்னைய கருத்தை மாற்றி உள்ளதாக அவர்களின் பெயரால் டி.சிவராம் ஒரு குழையடிப்பு செய்துள்ளார். இந்த மோசடிக்கு சரிநிகர் ஒரு பக்க விளம்பரம் மூலம் பாய்விரிப்பு.

அவர்கள் மூலம் டி.சிவராம் புலிகள் தவறிழைக்கவில்லை என்கிறார். புலிகள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடவில்லை என்கிறார். புலிகளின் தேசிய விடுதலையின்பால் சரியான சக்திகளைக் கைது செய்யவில்லை என்கிறார். முஸ்லிம் மக்களை விரட்டவில்லை என்கிறார். அதாவது டி.சிவராம் அந்த இரு பத்திரிகை ஆசிரியர்களின் பெயரால்புலிகள் பற்றிய ஒரு பொய்ப் படத்தை (புலிகளே ஒத்துக் கொண்டவைகளை) சரிநிகர் மூலமாக பிரச்சாரம் செய்ய முற்படுகின்றார். இதற்கு சரிநிகர் வேறு உடந்தை.

முஸ்லிம் மக்களை வெளியேற்றியது, கைதிகளாக உள்ளவற்றை எல்லாம் புலிகளே ஒத்துக் கொண்டது மட்டுமன்றி மீளக் குடியமர்த்துவது தொடர்பாகக் கூட அண்மையில் புலிகள் பேசினர். ஆனால் நடக்கவில்லை. இதை டி.சிவராம் மறைத்து புலிகளுக்கு வக்காளத்து வாங்க சரிநிகரானது பச்சையாக துணைபோகிறது. புலிகளின் சிறைகளில் அரசியல் கைதிகள் உள்ளனர் என்பதை புலிகள் ஒப்புக் கொண்டும், அவர்களை விடுவிப்பது பற்றி அண்மையில் கூறினர். ஆனால் விடவில்லை. கைதிகளே இல்லையென டி.சிவராம் வாதிட அதற்குச் சரிநிகர் என்ன வக்காளத்தா?

புலிகள் அரசியலில் தவறு விட்டனர் என்பதை (குறிப்பாக பிரேமதாஸா ஏமாற்றியதை ஒத்துக்கொண்ட புலிகள்) மறுக்கும் டி.சிவராம் அதன் துணையாக நிற்கிறது சரிநி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கரும். இதுபோன்று பல... அவைகளில் பலவற்றை புலிகள் ஏதோ ஒரு வகையில் யாருக்காவது ஒத்துக் கொண்டது உண்மையே ஆகும்.

இச் சம்பவங்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானது, விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப் படுத்தி சீரழிக்கின்றது. இது புலியையே சிலவேளை பாதிக்கின்றது. அதனால் ஒத்துக் கொள்ள சிலவேளை நிர்ப்பந்தித்தாலும் அதில் சுய விமர்சனம் செய்யவோ, அவைகளைக் கைவிடவோ தயாராக இல்லை. மாறாக அதற்குள் வேகமாகச் செல்கின்றனர்.

இந்நிலையில் டி.சிவராம் ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள சரிநிகர் வாசகர்களுக்கு புலிபற்றிய ஒரு பொய்ப் பிரச்சாரம். அதற்குச் சரிநிகர் பச்சையாகத் துணை போகிறது. டி.சிவராம் புலிகள் பற்றி இன்றைய நிலை என்பது புலிகளைச் சீரழிக்க, மேலும் அவர்கள் மக்கள் விரோதச் செயல்களைச் செய்ய தூண்டுவதன் மூலம் புலிகளுக்குள் ஊடுருவி அதன் பாலுள்ள சிங்கள இனவெறிக்கு விட்டுக் கொடுக்க மறுத்துப் போராடும் உணர்வுகளை அழிக்க முனைப்புப் பெற்று நிற்கும் ஒரு மோசடிக் காரனின் தந்திரமாகும். இவை இட்டு தமிழ் மக்கள் எப்பொழுதும் மிக அவதானமாக இருக்க வேண்டும்.○

**அடுத்த இதழில்!**
'வாழ் நிலைதான் உணர்வையும், அறிவையும் தீர்மானிக்கின்றது. உணர்வுகளும், அறிவியலும் வாழ் நிலையைத் தீர்மானிப்பதில்லை'
**உயிர்ப்பு- 5 மீது விமர்சனம்**

## உலகெங்கும் நடக்கும் யுத்தமும், அகதிகளும்

-சண்டை நடக்கும் இடம்


உள்நாட்டுச் சண்டை, புரட்சி அடையாளத்துக்காக (தேசியம் ,சமயத்துக்காக.....)


1974 1974 முதல் சண்டை நடந்த இடம்

- வெளிச்சண்டை

✸ அதிர்ச்சியான இடம், பதற்றமான பிரதேசம், வன்முறை உள்ள இடம்

### LES REFUGIES - அகதிகள் உலகம் பூராவும்




Guerres ethniques ou religieuses, prenant parfois l'allure de guerres civiles, de guerres de frontière après la disparition d'Etats ou de regroupements artificiels; les populations civiles en sont les premières victimes, à en juger par l'explosion du nombre de réfugiés dans le monde.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உலக ஒழுங்கமைப்புக்கு உட்பட்ட உலகமானது, மீண்டும் ஏகாதிபத்திய காலனியாக..

## தேசம் கடந்த தொழில் கழகங்கள்

தேசம் கடந்த பன்னாட்டுத் தொழில் கழகங்களே இன்று உலகின் பிரதான கொள்ளை நிறுவனங்களாகக் கொடிகட்டிப் பறக்கின்றன. உலகப் பொருளாதாரத்தில் 90சத விகிதத்தை இத் தனியார், அந்நிய முதலீடுகள் தம்வசப்படுத்தி வைத்திருக்கின்றன. 1985 வாக்கில் ஒவ்வொன்றும் 3500கோடி ரூபாக்குமேல் ஆண்டு வரவு செலவு செய்யும் 400 தேசம் கடந்த தொழில் கழகங்கள் இருந்தன. உலகின் மொத்த உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கையும், அன்னிய வர்த்தகத்தில் பாதிப்பங்கையும், கனரக மற்றும் தொழில் நுட்ப வடிவமைப்பில் 80சத விகிதத்தையும், இத் தேசம் கடந்த பன்னாட்டு தொழிற் கழகங்களே கட்டுப்படுத்தி வருகின்றன.

அமெரிக்காவிலுள்ள 500 ஏகபோக தொழிற் கழகங்கள் மட்டும் அந்நாட்டின் மொத்த ஆலைத் தொழிலாளர்களில் மூன்றில் இரண்டுபங்கையும், மொத்த ஆலைகளின் சொத்து மற்றும் லாபத்தில் முக்கால் பங்கையும் தம் கைகளில் குவித்து வைத்திருக்கின்றன. இத்தனைக்கும் இவ் 500 ஏகபோக தொழில் கழகங்கள் அமெரிக்காவிலுள்ள மொத்த தொழில் கழகங்களில் 0.2வீதம் மட்டுமே ஆகும். இவ் 500 தொழில் கழகங்களில் பெரியவையான 200 தொழில் கழகங்கள் மட்டும் ஆலை உற்பத்தில் 50 வீதத்தைக் கட்டுபடுத்துவனவாக உள்ளன.

ஜப்பானில் 4 பெரிய தொழில் கழகங்கள் மட்டும் அந்நாட்டின் 96 தொழில்களில் 60 வீதத்தையும், 67 தொழில்களில் 70 வீதத்தையும், 46 தொழில்களில் 80 வீதத்தையும் கட்டுப்படுத்தி வருகின்றன. பிரிட்டனில் இரண்டே இரண்டு தொழில் கழகங்கள் மட்டும் 75 விகித கணிப்பொறி- கம்யூட்டர் தொழிலையும், இத்தாலியில் ஒரே ஒரு கம்பனி 90வீத கார் உற்பத்தியையும், இன்னொரு கம்பனி 94வீத வார்பட இரும்பு உற்பத்தியையும் கட்டுப்படுத்துகின்றன.

உலகில் 9 பெரும் முதலாளித்துவ நாடுகள்தான் மொத்த தேசிய உற்பத்தியில், தேசம் கடந்த தொழில் கழகத்தின் வர்த்தகத்தை விட கூடுதலாகப் பெறுகின்றன. மற்றைய முதலாளித்துவ நாடுகளின் தேசிய உற்பத்தி தேசம் கடந்த தொழில் கழகத்தை விட குறைவாகவே உள்ளது. பிரிட்டனிலுள்ள 30 கம்பனிகளும், அமெரிக்காவில் 180 தொழில் கழகங்களும், அந்நாடுகளின் மொத்த தேசிய உற்பத்தியில் 40 வீதத்தை உற்பத்தி செய்து வருகின்றன.

1980 களின் புள்ளி விபரத்தின் படி தேசம் கடந்த தொழில் கழகங்கள் தமது துணை நிறுவனங்களின் மூலம் 50வீதத்திற்கு மேல் பங்குகளை வாங்கி பல தொழில்களைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தன. இதன் படி பிரிட்டன், இத்தாலி, மே.ஜேர்மனி, பிரான்சு, அஸ்திரியா, அவுஸ்திரேலியா ஆகிய நாட்டில் 20வீத உற்பத்தியைக் கட்டுப்படுத்தின. இது கனடாவில் 50சத வீதமாகவும், சிலியில் 25வீதத்தையும், அர்ஜென்டீனாவில் 30வீதத்தையும், மெக்சிக்கோ, பெரு, கொலம்பியா, மலேசியா ஆகியவற்றில் 40-44 வீதத்தையும், சிங்கப்பூரில் 83வீதத்தையும் கட்டுப்படுத்தின.

1980களின் கணக்குப் படி தேசம் கடந்த தொழில் கழகங்கள் உலகச் சந்தையில் 60வீத சக்கரை போன்றவற்றையும், 70-75வீத அரிசி வாழை, இயற்கை றப்பர், எண்ணை போன்றவற்றையம், 80-90வீத கோதுமை, காப்பி, சோளம், கொக்கோ, பைன், ஆப்பிள், மூங்கில், பருத்தி, சணல், செம்பு, புகையிலை, இரும்புத்தாது, பாக்சைட் போன்றவற்றையும் கட்டுப்படுத்துகின்றன. உதாரணமாக குளிர்பாண உற்பத்தியில் உலகில் முதலிடம் வகிக்கும் 'கொக்கோ கோலா' நிறுவனம், உலகில் மிகப் பெரிய சினிமா கம்பனிகளில் ஒன்றான அமெரிக்கா 'ஹாலிவூட்' கொலம்பியா பிக்சர்சை வாங்கியது. இதன் பின் ஜப்பானில் மிகப் பெரிய மின்னனுப் பொருள் உற்பத்தி நிறுவனமான 'சொனி' கைப்பற்றிக் கொண்டது. சேவைத் துறையில் 1970களில் 1,34,750 கோடி ரூபாய்களாக இருந்த சர்வ தேச வர்த்தகம் 1985ல் 9,45,000 கோடி ரூபாய்கு வளர்ந்தது. இது பொருட்கள் வர்த்தகத்தை விட மிஞ்சியதாகும். இச் சேவைத் துறையில் கூட தேசம் கடந்த தொழில் கழகங்களே மேலாண்மை வகிக்கின்றன.

## வங்கிகள்

உலகில் மிகப் பெரிய 20 வங்கிகளில் 14 வங்கிகளைத் தன தாக்கி உலகில் முதல் இடம் வகிக்கின்றது ஜப்பான். ஜப்பானின் டி.கே.ஐ வங்கியின் சொத்துக்கள் மட்டும் 7,24,500 கோடி ரூபாய்கள் ஆகும். மேற்குறிப்பிட்ட 20 வங்கிகளில் 5 ஐரோப்பிய வங்கியாகும். இவற்றில் மிகப் பெரியது பிரன்ஸ் கிரெடிட் அக்ரிக்கோப் வங்கியாகும். இதன் சொத்துக்கள் மட்டும் 3,74,500 கோடி ரூபாய்களாகும். இவ் 20 வங்கிகளில் இடம் பெறும் ஒரே ஒரு வங்கியான அமெரிக்க சிடி கோர்ப் வங்கியின் சொத்துக்கள் மட்டும் 3,72,800 கோடி ரூபாய்களாகும். இவை உலகில் மிகப் பெரிய வங்கிகள் மாத்திரம் அன்றி, உலக அளவில் மிகப் பெரிய நிதி மூலதன ஏகபோகங்களாகவும், உலகில் நிதி மூலதன ஒன்று குவிப்பு மையங்களாகவும் தொழிற் படுகின்றன.

பிரிட்டனில் நான்கு பெரிய வங்கிகள் இந்நாட்டின் அனைத்து வர்த்தக வங்கிகளின் சேமிப்பு- வைப்பு நிதியில் 75வீதத்தைக் கட்டுப்படுத்தி வருகின்றன. லண்டன் பங்குச் சந்தையில் 50வீதத் தை நிதிமூலதனக் கழகங்கள் கைப்பற்றி உள்ளன. பெல்ஜியம் நாட்டின் எல்லா வர்த்தக வங்கிகளின் வரவுத் தொகையில் 90 வீதத்தை அதன் மூன்று பெரிய வங்கிகள் வைத்திருக்கின்றன. ஜப்பானில் எல்லா வர்த்தக வங்கி களின் வரவுத் தொகையில் 65 வீதத்தை ஆறு பெரிய வங்கிகள் கைப்பற்றி உள்ளன.

1985ம் ஆண்டு அமெரிக்காவில் 100 மிகப் பெரிய வர்த்தக வங்கி களின் சொத்து மதிப்பு 30,64,250 கோடி ரூபாய்கள் ஆகும். இது அந்நாட்டின் 500 பெரிய தொழில் கழகங்களின் மொத்த சொத்து மதிப்பை விட அதிகமாகும். 1955 வாக்கில் 17,500 கோடி ரூபாய்களுக்கு மேல் சொத்து வைத்திருந்த உலகில் ஒரே ஒரு வங்கியாக அமெரிக்கா வங்கியே இருந்தது. 1985ல் 29,750 கோடி ரூபாய்க்கு மேல் சொத்துக்கள் வைத்திருக்கும் அமெரிக்க வங்கிகள் 42உம் வேறுநாட்டு வங்கிகள் 100க்கு மேலாகவும் இருந்தது.

## ஏக போக முதலாளித்துவம்

'உதவி', 'கடன்', 'மானியம்' என்ற பெயரில் ஏகாதிபத்தி நிதியில் இருந்து மூலதன ஏற்றுமதியானது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. 1955ல் அமெரிக்கா மேற்கு ஐரோப்பாவுக்குள் மட்டும் 25,840 கோடி ரூபாய்யை முதலிட்டது. இதே நேரம் தனியார் ஏகபோக முதலாளித்துவம் 11,84 40கோடி ரூபாயை முதலிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1949ல் 30 நாடுகளின் பணமதிப்பை ஒரே நேரத்தில் குறைக்க வைத்தது.

மேற்கு ஐரோப்பாவில் மட்டும் 1957ல் அமெரிக்காவின் தேசம் கடந்த முதலீடு 10,880 கோடி ரூபாய்கள் ஆகும். இது 1982ல் 3,84,360 கோடி ரூபாய்களாக அதாவது 35 மடங்காக அதிகரித்து உள்ளது. இதில் அரசமுதலீடு 13வீதமாக அதி கரித்து உள்ளது.

கம்யூட்டர் யுகமாக உலகம் மாறியதை அடுத்து 1983ல் 3,60,000 பேர் கமயூட்டர் திட்டமிடுதலில் குவிக்கப்பட்டனர். 1985ல் உலகச் சந்தையில் ஏகாதிபத்தியங்கள் கம்யூட்டர் விற்பனையில் 22,750கோடி ரூபாய்களைக் கொள்ளை



அடித்தது. இது 1986ல் 29,750 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. கம்யூட்டர் மற்றும் அதன் துணை மின்னணு சாதன விற்பனையில் 1984 களில் அமெ ரிக்காவில் ஆண்டுக்கு 2,85,250 கோடி ரூபாய்கள் ஆகவும், மேற்கு ஐரோப்பாவில் 1,43,500கோடி ரூபாய்களாகவும், ஜப்பானில் 1, 32,475கோடி ரூபாய்களாகவும் இருந்தது. உலக சந்தையில் அமெரிக்கா விற்ற சாதாரண நிலை பி.சி கம் யூட்டர்களின் மதிப்பு மட்டும் 37,450 கோடி ரூபாய்களாகும். கம்யூட்டர் கொண்டு இயந்திரமனித உற்பத்தி அதிகரிக்கப்பட்ட இவ் அதிகரிப்பானது, 1985ல் ஜப்பானில் 65,000 ஆகவும், அமெரிக்காவில் 14,500 ஆகவும், மேற்கு ஜெர்மனியில் 6,600 ஆகவும், பிரிட்டனில் 2,500 ஆகவும் இருந்தது.

அமெரிக்காவில் ஒரு தகவல் வங்கி அமைக்க 1970 களில் 35,500 கோடி ரூபாய்களும், 75ல் 70,000 கோடி ரூபாயும், 80ல் 1,40,000 கோடி ரூபாயும் தேவைப்பட்டன. 1985 களில் உலகிலிருந்த 1300 தகவல் வங்கிகளில் 750 அமெரிக்காவிடமே இருந்தன. இயந்திர மனிதனை வேலைக்கு அமர்த்தியதால் அமெரிக்கத் தொழிலாளர்களில் 40 லட்சம் பேர் வேலைகளை இழந்தனர். இது இந்த நூற்றாண்டுக்குள் எப்படியும் 2 கோடியைத் தாண்டுமெனவும், மற்றைய துறை களில் புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்படுவதன் மூலம் 4.5கோடிப் பேர் இன்னும் வேலையை இழப்பர் எனவும் கணக் கிடப்படுகிறது.

## ☆ மூலதனம், உற்பத்தி, உழைப்புப் பிரிவினை

1960களில் கூட உலகப் பொருள் உற்பத்தியில் 72சத வீதமாக இருந்த மேலை நாடுகள் 1980களில் 60சத வீதமாகக் குறைந்து விட்டது. இப்பொழுது 50சத விகிதத்திற்கும் கீழே போய் விட்டது. அமெரிக்காவும், பிரிட்டனும் உலகப் பொருள் உற்பத்தியில் 60களில் 49 வீதமாக இருந்து 81ல் 35 வீதமாகக் குறைந்து விட்டது. இதற்கு நேர் எதிராக ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவில் சில நாடுகளின் உற் பத்தியோ உயர்ந்துள்ளது. இதன் அர்த்தம் அந்நாடுகள் போட்டிபோடும் அளவிற்கு வளர்ந்தது அல்ல. மாறாக ஏகாதிபத்திய கொள்ளைகள் அங்கு நிகழ்கின்றன. உற்பத் தியை குறைந்த கூலிச் சந்தை நாடுகளுக்கு மாற்றி அங்கி ருந்து கொள்ளை அடித்துச் செல்கின்றனர்.

## ☆ நவ காலனித்துவ மேலாதிக்கத்திக்கான இராணுவ, பொருளாதார, அரசியல் அடிப்படை


20, 30 ஆயுதத் தொழில்களில் ஏகபோக தொழில் கழ கங்கள் கொள்ளையடிக்க வசதியாக 1979ல் இருந்த அமெரிக்க இராணுவ நிதியை நீகன் இரண்டு மடங்குகளாக அதிகரிக்கச் செய்தார். 1970 களில் 2,13,325 கோடி ரூபாயாக இருந்த இராணுவச் செலவை 85களில் 4,58,500 கோடியாக அதிகரித்து கொள்ளையடிக்கவும், உலகைக் கட்டுப்பாட்டுக் குள் கொண்டுவரவும் உதவினர்.

உலகில் கம்யூனிசத்தை தடுப்பதற்கும், அழிப்பதற்கும், தேச விடுதலைப் போராட்டங்களை நசுக்கிவிட அமெரிக்கா தலைமை தாங்கியது. இதன் மூலம் 'நோட்டோ' ஒப்பந்த கூட்டு நாடுகள் கோடி கோடியாகச் செலவு செய்தது. அது இரா ணுவத் தொழில் நுட்ப ஆராய்ச்சிக்கு மட்டும் 1980களில் 78.3 ஆயிரம் கோடி ரூபாய்களில் இருந்து 86ல் 2.02 லட்சம் கோடி ரூபாய்களாகி 88ல் 2.25 லட்சம் கோடி ரூபாய்களாகப் பெருகிச் சென்றது.

1985களில் அமெரிக்கா தொடங்கிய புதிய பெரும் ஆயுதத் தளவாடத் திட்டங்களுக்கான மதிப்பு மட்டும் 14.47 லட்சம் கோடி ரூபாய்களாகும். இது தவிர நம்சத்திரப் போர் நடவடிக்கைகளுக்கு 186 லட்சம் கோடி ரூபாய்களாக அதை உயர்த்தியது. இத்திட்டம் முடியும் போது இரட்டிப்பாக மாறும். அதேநேரம் நோட்டோ நாடுகளான மேற்கு ஜெர்மனியில் 19 75ல் இராணுவச் செலவு 47.38 ஆயிரம் கோடி ரூபாய்களாக இருந்து 86களில் இதன் 76சத விகிதத்தால் அதிகரித்தது. இதே நேரம் பிரிட்டன் 18.88 ஆயிரம் ரூபாய்களில் இருந்து 69.7 ஆயிரம் கோடி ரூபாய்களாக உயர்ந்தது. பிரான்சின் இராணுவச் செலவு 20.68 ஆயிரம் கோடி ரூபாய்களில் இருந்து 72.71 ஆயிரம் கோடி ரூபாய்களாக அதிகரித்தது.

நோட்டோ ஒப்பந்த நாடுகள் 1949 முதல் 1986 வரை 184,30 லட்சம் கோடி ரூபாயை இராணுவத்திற்கு செலவிட்டது. அதில் 1975-85க்கு இடையிலான 10 ஆண்டுகளில் மட்டும் 38 லட்சம் கோடி ரூபாய்யைச் செலவு செய்துள்ளனர். 1983-87 ஆகிய ஐந்தாண்டுகளில் ஜப்பானின் இராணுவச் செலவு 3.48 லட்சம் கோடி ரூபாய்களாக ஒதுக்கியது.

1973-83 முடிய நோட்டோ ஏகாதிபத்தியங்களின் மொத்த ஆயுத ஏற்றுமதி 3,306 லட்சம் கோடி ரூபாய்களாகும். அதில் அமெரிக்கா 1,577லட்சம் கோடி ரூபாய்யையும், மேற்கு ஜேர்மனி 22.80 ஆயிரம் கோடி ரூபாயையும், பிரான்சு 51.3 ஆயிரம் கோடி ரூபாயையும், பிரிட்டன் 30.4 ஆயிரம் கோடி ரூபாயையும், இத்தாலி 17.10 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்களை ஏற்றுமதி செய்தது. இதில் அமெரிக்கா மட்டும் 1000 விமானங்களையும், 1800 பீரங்கிக ளையும், 100 மேலான போர் கப்பல்களையும் வெளிநாட்டுக்கு



விற்றுள்ளது. உலகில் இராணுவ உற்பத்தியில் முக்கால் பங்கு போர் விமானங்களை யும், ஏவுகணைகளையும், பாதியளவு பீரங்கி மற்றும் காலாட் படைகளையும் நோட்டோ நாடுகளின் மூன்றில் இரண்டு மடங்கு போர் கப்பல்களையும் அமெரிக்கா உற்பத்தி செய்கிறது. அமெரிக்க இராணுவத் தொழில் கழகங்கள் இராணுவ உற்பத்தியில் 26 லட்சம் தொழிலாளர்களை குவித்துள்ளது. இது நோட்டோ நாட்டு இராணுவத் தொழிலாளர்களின் கூட்டை விட அதிகமாகும். அமெரிக்காவில் மொத்த விஞ்ஞானிகளில், பொறியியலாளர்களில் 20-30சத விகிதத்தினர் இராணுவ ஆராட்சியில் குவித்து வைக்கப்பட்டுள்ளனர்.

**வளரும்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திச் சிதறல்..

## பிரஞ்சு நாட்டவர் வெளிநாடுகளில்

வெளி நாட்டவர்களுக்கு எதிராக கோஷம் இடும் நாசிகள், வெளி நாட்டவர்களாலேயே இங்கு பிரச்சனைகள் எனக் கோஷம் இடுகின்றனர். இங்கு வேலையில்லாமைக்குக் காரணம் வெளிநாட்டவரே என படுபுளுகு விடுகின்றனர்.

பிரஞ்சு தேசத்தோர் மொத்தமாக 25 லட்சம் பேர் வெளிநாடுகளில் தொழில் புரிகின்றனர்.

அமெரிக்காவில்- 1,15,000 பேர், பெல்ஜியத்தில்- 1 லட்சம் பேர், ஜெர்மனில்- 80,000 பேர், இங்கிலாந்தில்- 60,000 பேர், கனடாவில் - 52,000 பேர், சுவீசில் - 30,000 பேர், ஸ்பெயினில் - 28,000 பேர், இத்தாலியில் - 21,000 பேர், கொலன்டில் - 8,000 பேர், சுவீடனில் - 3,000 பேர், ஜப்பானில் - 3,000 பேர் என மொத்தமாக 7,70,000 பேர் இந் நாடுகளில் வேலை செய்கின்றனர்.

பதினொரு முன்னணி பன்னாட்டுக் கம்பனிகளில், மூன்றில் இரண்டு பங்கையும் கொண்டுள்ளனர். இதைவிடவும் பதவியில் இல்லாமல் 17 லட்சம் பிரஞ்சுக்காரர்கள் வெளி நாடுகளில் தொழில் புரிகின்றனர். இதுபோன்று வெளி நாடுகளில் 45 லட்சம் ஜெர்மனியரும், 50 லட்சம் ஜப்பானியரும் தொழில் புரிகின்றனர்.

பிரான்சிலுள்ள 1,40,000 தொழில் நிறுவனங்களின் உற்பத்தியில் 92சத விகிதம் ஏற்றுமதி ஆக்கப்படுவதன் மூலம் மூன்றாம் உலக நாடுகள் சூறையாடப் படுகின்றன.

பெண்களை விடவும் ஆண்கள் 30 வீதமகன அதிகரித்த ஊதியத்தைப் பெற்று வருகின்றனர். மேற்கு நாடுகளில் பெண்களும் ஆண்களைப் போல ஒரே சுதந்திரத்தை அனுபவிப்பதாக கூறும் சில பெண்ணிலை வாதிகளின் கூற்றை இது தவிடுபொடி ஆக்கிவிடுகின்றது.

இன்று பிரான்சில் வேலையற்றோர் பெண்கள் தொகையில் பெண்கள் 14.9சத விகிதமாகவும், ஆண்கள் தொகையில் ஆண்கள் 10.8சத விகிதமாகவுமே உள்ளனர். 96 லட்சம் வேலை செய்யும் பெண்களில் 27 லட்சம் பெண்கள் பகுதி நேர வேலைகளில் உள்ளனர்.



## பெண்கள் மீதான சுரண்டல்



### பெண்களுக்கும்- ஆண்களுக்கும் உள்ள சம்பள வேறுபாடு

| | பெண் | ஆண் | அதிகரிப்பு |
|---|---|---|---|
| பாதுகா.துறை | *1,96,200 F* | *2,69,000 F* | *+37%* |
| தொ.நுட்பவிய | *1,15,800 F* | *1,37,300 F* | *+18%* |
| அலுவலகர் | *86,800 F* | *96,600 F* | *+11%* |
| தொழிலாளர் | *72,100 F* | *93,600 F* | *+29%* |

இந் வகையில் ஆணுக்கும் பெண்ணிக்கும் ஒரே வேலையில் வேறுபாடான சம்பளம் வழங்கப்படுகின்றன. இதைவிடவும் ஒரு பெண்ணிக்கும் ஆணுக்கும் ஒரு நாள் எவ்வாறு பங்கிடப்படுகின்றது எனப்பார்ப்போம்

| | வேலை | வீடு, பொழுதுபோக்கு | சுதந்திரமாக இருத்தல் | உணவு, நித்திரை, கழிவு |
|---|---|---|---|---|
| ஆண் | *6,21* | *2,41* | *3,41* | *11,17* |
| பெண் | *5,16* | *4,38* | *2,51* | *11,15* |

ஒரு நாள் நடவடிக்கையில் கூட பெண் ஆணுக்குச் சமமாக இல்லாமல் சுரண்டப்படுகிறாள். வேலை, மற்றும் ஒரு நாள் செயற்பாடு என்ற புள்ளி விபரத்தில் மட்டும் ஒரு பிரஞ்சுப் பெண் சுரண்டப் படுகிறாள் என்பதை மேலுள்ள புள்ளி விபரம் நிறுவுகின்றது.

## பிரஞ்சு தேசத்தின் அவலம்..

உலகில் என்ன நடந்தாலும் அதில் தலையிட்டு ஆதிக்கம் புரியும் பிரஞ்சு, தனது சொந்த மக்களை குளிரில் விறைத்து நடுநடுங்கச் செய்கின்றனர்.

அண்மையில் எடுத்த புள்ளி விபரங்களின் படி, நான்கு லட்சம் பிரஞ்சு மக்கள் வீடு வாச லின்றி உள்ளனர். அவர்கள் வீதிகளிலும், புகைவண்டி நிலையங்களிலும், வாகனங் களிலும், இடிந்த கட்டிடங் களிலும் வாழ்வதாக புள்ளி விபரங்கள் வெளிப்படுத்து கின்றன.

பாரிஸ் நகரத்தில் மட்டும் 10 லட்சம் பேர் அரசாங்க வீடுகள் கோரி பல நீண்ட காலங்களாக காத்துக் கிடக்கின்றனர். உலகையும், தனது சொந்த மக்களையும் சுரண்டிப் பெறப்படும் பணத்தை விரல்விட்டு எண்ணக் கூடிய சில பணக்காரர்கள் பயன்படுத்தி வருகின்றனர். அத்துடன் இப் பணத்தின் பெரும் பகுதி ஆக்கிரமிப்பு யுத்தங்களுக்கும், உலகைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் மேலாதிக்க எண்ணங்களக்கும் பயன்படுத்து கின்றனர்.

வேலையற்றோர் தொகையோ 34 லட்சமாக அதிகரித்த வண்ணம் உள்ளது. இந்நிலையில் புதிய அரசு மேலும் வேலை நீக்கத்தை ஊக்குவிக்கும் வழிவகையில், வேலையற்றோருக்கு வழங்கும் சிறு தொகை உதவிப் பணத்திற்கும் ஒரு முதலாளியின் கீழ் வேலை வாங்க நிற்பந்திக்கிறது. இதன் மூலம் முதலாளி குறைந்த சம்பளத்தில் கூலிகளைப் பெறுவதால் பலரை வீட்டுக்கு அனுப்புகின்றனர். அதாவது அடிப்படைச் சம்பளத்தைக் குறைக்காமல் மறைமுகமாக அடிப்படைச் சம்பளத்தை சரி அரைவா சியாகக் குறைத்துள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திச் சிதறல்..

## இந்தியாவின் பொருளாதாரம் ஏகாதிபத்திய நுகத்தடியில்..

இன்று இந்தியா மிக வேகமாக ஏகாதிபத்திய கால்களில் விழுவதில் முண்டியடித்துச் செல்கின்றது. சுய தேசியத்தை அழித்து ஏகாதிபத்தியத்தின் நவகாலினியாக இந்தியாவை மாற்ற தரகு முதலாளிகள் வேகமாகவே முன்னேறி வருகின்றனர். தை மாதம் வெளியான உலகவங்கி அறிக்கையில், உலகில் கடன்பெற்று அதில் மீளமுடியாமல் சிக்கித் தவிக்கும் நாடுகளில் மூன்றாவது இடத்தை இந்தியா கைப்பற்றி உள்ளது.

முதலாவது இடத்தை வகிக்கும் பிரேசில் 13,270 கோடி டொலரையும், 2வது இடத்தை வகிக்கும் மெக்சிக்கோ 11,800 கோடி டொலரையும், மூன்றாவது இடத்தை வகிக்கும் இந்தியா 9,179 கோடி டொலரையும் கடன்களாகக் கொண்டுள்ளன. இது இந்தியாவின் பண மதிப்பீட்டின் படி 2,84,518 கோடி ரூபாய்களாகும். இது ஒவ்வோர் இந்தியன் தலைக்கும் 5,850 ரூபாய்களின் படி இந்தியாவை அடகுவைத்துள்ளனர்.

1990-91 இல் 1,54,003 கோடி ரூபாய்களாக இருந்த இந்தியக் கடன் இன்று 2,42,78 கோடி ரூபாய்களாக அதிகரித்துள்ளது. அத்துடன் வேடிக்கை என்னவென்றால் இந்த நிதியாண்டில் 5,028 கோடி ரூபாய்களைக் கடனாக வாங்கியுள்ளது தான். பின் இப்பணத்தில் பழைய கடனைத் திருப்பிச் செலுத்த 3,523 கோடி ரூபாயை கொடுத்தது. அத்துடன் வங்கிக் கடனுக்கு வட்டியாக 2,817 கோடி ரூபாயையும் செலுத்தியது. ஆக மொத்தம் கடனும் வட்டியுமாக 6,340 கோடி ரூபாயைத் திருப்பிக் கொடுத்திருந்தது. மொத்த நட்டமான 1,312 கோடி மீதிப்பணத்தை உள்நாட்டில் திரட்டியது. கடனை வாங்கி கடனை அடைத்த அதேநேரம் கடனோ குறைந்து விடவில்லை, அதிகரித்துச் சென்றவண்ணமே உள்ளது.

60 களில் மெக்சிக்கோவை கைப்பற்றிய IMF தேசிய சுய பொருளாதாரத்தைச் சிதைத்தனர். இன்று மஞ்சல் கடதாசி கொடுத்துவிட்டு தான் திவாலாகியதை அறிவித்தது. இன்றிலையில் அமெரிக்காவும், மற்றைய வங்கிகளும் ஓடோடி வந்து 900 கோடி டொலர்களை கடனாகக் கொடுத்து மெக்சிக்கோ பொருளாதாரத்தை தக்க வைக்க முனைந்துள்ளனர்.

இந்தியாவும் வேகமாக இன்றிலை



நோக்கி நகர்கிறது. இதை சில புள்ளி விபரங்களின் மூலம் காண முடியும். 1991ல் இவ் இந்தியாவின் அத்தியவசியப் பொருட்களின் மொத்தக் குறியீட்டு எண் 197.6 ஆக இருந்தது. இன்று இது 276.7 புள்ளியாக உயர்ந்து விலைவாசியாகி உள்ளது.

1991ல் வறுமைக் கோட்டிற்குக் கீழ் இருந்தோர் எண்ணிக்கை 2818 கோடி நபர்களாகவும், இன்று 3547 கோடி நபராகவும் அதிகரித்துள்ளது. 1993ல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 40வீதமாக இருந்தது. 94ல் இது 35.5 ஆகக் குறைந்தது. 93ம் ஆண்டு 20 வீதமாக இருந்த ஏற்றுமதி வளர்ச்சி 94ல் 15வீதமாகச் சுருங்கி விட்டது.

தொடர்ந்து வந்த பணவீக்கம் இன்று இரட்டை இலக்கமாக மாறியுள்ளது. இது இந்தியா பொருளாதாரத்தை படு பாதாளத்தை நோக்கி தள்ளும் என முதலாளித்துவ நிபுனர்களே ஒப்புக் கொண்டுள்ளனர். இந்தியாவின் நிதிப் பற்றாக் குறை 65,000 கோடியில் இருந்து 98,000 கோடியாக அதிகரித்துள்ளது. 1989-90ல் 7,590 கோடி டொலராக இருந்த அன்னிய கடன் நான்கு ஆண்டுகளில் 9,178 கோடியாக அதிகரித்துள்ளது. ரூபாயின் மதிப்பு இறக்கத்தால் தற்போதைய கடன் 100 வீதத்தால் மேலும் அதிகரித்துள்ளது. ஒவ்வோர் இந்தியன் தலையிலும் 5,850 இந். ரூபாய் என்ற அளவில் நாட்டை விற்று ஏகாதிபத்திய நுகத்தடியில் இந்தியாவை அடகுவைத்துள்ளனர், இந்திய ஆளும் வர்கத்தினர்.○

## அமெரிக்காவின் போலி மனித உரிமைகள்

கடந்த வருடம் குப்.்.கபா என்ற கியுபா நாட்டு இசைக் கலைஞர் முதன் முதலாக நியுயோர்க் நகரில் தனது இசைக்கச்சேரியை நடத்தியுள்ளார். இசைக்கச்சேரி முடிந்த பின்னர் கியுபாவுக்கும் தனக்கும் இடையேயுள்ள பகைமையான உறவுகளைக் காரணம் காட்டி, அக் கலைஞருக்குச் சேரவேண்டிய சம்பளத் தொகையை கொடுக்க விடாது தடுத்து நிறுத்தியுள்ளது அமெரிக்கா அரசாங்கம். இச் சாதாரண உதவியைத் தட்டிப் பறித்திருக்கும் அமெரிக்காதான் உலகெங்கிலும் மனித உரிமைகளின் ஏகபோக காவலனாக தம்பட்டம் அடித்து வருகிறது. என்ன வேடிக்கை!○

## இறால் பண்ணைகள் மூலம் மக்கள் பட்டினி!

புத்தளம் மாவட்டத்தில் மட்டும் அரச அங்கீகாரம் பெற்ற 1,600 ஏக்கர் இறால் பண்ணைகள் உள்ளன. ஆனால் அதன் உண்மையான பரப்பளவோ 3,000 ஏக்கர்களுக்கு மேலாகும். இவ் இறால் பண்ணைகளின் மூலம் நன்னீர் உவர் நீராக மாறுவதுடன் அன்றாட சீவியத்துக்கு மீன்பிடியில் ஈடுபட்டு வந்த ஆயிரமாயிரம் மீனவர்கள் தொழிலை இழந்து வருகின்றனர். அதுமட்டும் அல்லாமல் இப் பண்ணைகளின் மூலமாக நுளம்புகள் பெருகி மலேரியா நோய் பரவியும் வருகிறது.

இப் பண்ணைகள் ஒருசில போகத்தின் பின்னர் இறால் உற்பத்தியில் ஈடுபட முடியாது போய்விடுவதால் நன்னீர் விவசாய நிலங்கள் உவர் நிலம் ஆக்கப்பட்டு அழிக்கப்பட்டும் வருகின்றன. ஏன் இந்த இறால் பண்ணைகள்? ஏகாதிபத்தியத் திலுள்ள மேட்டுக்குடி பிரிவினருக்கு இறால் என்றால் குசியாம். அவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இலங்கை போன்ற நாடுகளில் இவற்றை உற்பத்தி செய்கின்றனர். இவற்றால் அழிந்து சீர்கெட்டுப் போவது எம்மண்தானே, அவர்களுக்கு என்ன? அதனால்தான் இங்கே வந்து உற்பத்தி செய்கின்றனர். இதைத் தடுத்து நிறுத்துவதன் மூலமே எம்மண்ணை பாதுகாக்க முடியும். இதை நாமல்லவா செய்ய வேண்டும்.•



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சரிநிகர் ஆசிரியர் பீடம் எல்லாவித போலி முற்போக்குக்கும் விடைகொடுத்து விட்டனர்

சரிநிகர் 73ல் "உலர்ந்த நம் பிக்கை" எனத் தலைப்பிட்டு ஓர் ஆசிரியர் தலையங்கத்தை எழுதி, தனது போலி முற்போக்குக்கு ஒரேயடியாக விடைகொடுத்து விட்டனர். இவ் ஆசிரியர் தலையங்கத்தில் "உலர்ந்துபோன நம்பிக்கை" என ஒப்பாரி வைக்க முற்பட்டவர்கள், அது ஏற்பட்டது ஏதோ இலங்கையில் ஒரு கம்யூனிஸ்ட் கட்சியே எனக் கனவுகண்டவர்களாக கம்யூனிசக் கருத்துகள் மீது ஏறிப் பாய்ந்துள்ளனர் சரிநிகர் ஆசிரியர் குழு. சரிநிகர் ஆசிரியர்களுக்கு "உலர்ந் துபோன நம்பிக்கையின்" விளக்கத்தில் கூறும் வார்த்தைகளைப் பார்ப்போம்.

"யுத்தத்தின் நோக்கம் யுத்தத்தை ஒழிப்பதுதான் என்பது மாவோ முதல் , பாரிஸ் நகரத்துச் சோபோர்ன் பல்கலைக்கழகத்தில் புத்திஜீவத்துவம் பெற்ற பொல்பொட் வரை ஒரு தாரக மந்திரமாக இருந்து வந்திருக்கின்றது. ஜனாதிபதி சந்திரிகா சுற்றிவளைத்து அந்த முடிவுக்குத்தான் வந்திருக்கிறார். .... எவ்வகையான குரூரமான யுத்தமும் கூடப் பேச்சுவார்த்தைகள் ஊடாகத்தான் முடிவுக்கு வந்திருக்கிறது என்ற வரலாற்று யதார்த்தம் மறுக்கப்பட்டு யுத்தமே சாத்தியம்...."

எனச் சரிநிகர் ஆசிரியர் தலையங்கம் கூறுகிறது. ஈழப்போராட்ட வரலாற்றில் தத்துவார்த்த ரீதியில் தங்களை முற்போக்கு என அழைக்கும் போலிகளில், இது மிகவும் மோசமான ஒரு மக்கள் விரோதக் கருத்தே ஆகும் இதில் சரிநிகர் ஆசிரியர் குழு பொய்யர்களாக, திரிபுவாதிகளாக, குத்துக்கரணம் அடிப்பவர்களாக, இன்றைய உலக ஒழுங்கின் சிறந்த பிரதிநிதிகளாக உள்ளனர். இதை பாரிஸ் பல்கலைக்கழகத்துடன் முடிச்சுப் போட்டு. நையாண்டி ஊடாக கேலி செய்யும் தமது போலித்தனத்தைத் தோலுரித்துள்ளனர். இக்கருத்துரையின் நோக்கங்களைப் பார்ப்போம்:

1. சிங்கள பெரும்தேசிய இனவெறியை பாதுகாத்தல்.
2. 1935ல் அமெரிக்காவில் பிரௌடர் 1950களில் குருசேவ் முன்னையதை "சமாதான வாழ்வு" என்று மீண்டும் கொண்டுவந்து திரிபை ஏற்படுத்தியதைப் போல் மறைமுகமாக மீண்டும் சரிநிகர் திணிக்க முயற்சிக்கின்றனர்.
3. பொல்பொட்டை நக்கலடித்து கேலிசெய்து கூட்டிவருவதன் மூலம் பொல்பொட் விட்ட சில தவறுகளை சாதகமாகப் பயன்படுத்தி மாவோ, பொல் பொட்டுக்கும் சேறடிக்க முயல்வதாகும்.
4. 1950களுக்குப் பிந்திய உலகில் மாவோவின் சீனாவும் அதன் புரட்சிகர அரசியலையும் சேறடிக்க முயல்வதாகும்.
5. டெங் திரிபு அரங்கு ஏறியபின்பு உலகில் மாவோவின் வழியே புரட்சிகர வழியாக உள்ளதால் இதைக் கொச்சைப்படுத்துதல்.
6. இன்றைய உலக ஒழுங்கை அதாவது அமெரிக்காவின் தலைமையை அங்கீகரிக்கக் கோருதல்.
7. மக்கள் எல்லாவித உரிமையையும் போராடியே பெறமுடியும் என்ற கூற்றை மறுதலித்தல்.

இதுபோன்ற அநேக விடயத்தை இக்கூற்று பிரதிபலிக்கின்றது. இதைச் செய்ய முதல் யுத்தத்தின் நோக்கம் யுத்தத்தை ஒழிப்பது என்ற கூற்றை திரித்துள்ளனர். உண்மையில் இதன் சர்வவியலான உண்மை புரட்சிகர யுத்தத்தை மட்டுமே உள்ளடக்கியது. அதாவது யுத்தத்திற்குக் காரணங்கள் எல்லாம் வர்க்க முரண்பாட்டில்தான் உருவாகுகின்றன. வர்க்கம் இல்லாதபோது யுத்தம் இல்லாமற் போய்விடும். இதுதான் புரட்சிகர யுத்தத்தின் நோக்கம், யுத்தத்தை இல்லாமல் ஒழிப்பதுமாகும்.

இத்துடன் இக் கூற்றை மாவோவின் பெயரால் இனம்காட்டியதில் மாபெரும் மோசடி. இக் கூற்றை மார்க்ஸ்,எங்கல்ஸ் மிகச் சிறந்த முறையில் ஆய்வு செய்து முன்வைத்தனர். இதை லெனின், ஸ்டாலின் வளர்த்தெடுத்தனர். பின் மாவோ தொடர்ந்தார். இன்று புரட்சிகர கட்சிகள் அதனை வளர்த்தெடுக்கின்றனர். இக்கூற்று மார்க்சிய விஞ்ஞானமாக உருவான அன்றே உருவானது. இதைச் சரிநிகர் ஆசிரியர் பீடம் மறுப்பின் நாம் ஆதாரமாக வைக்கமுடியும். சரிநிகர் ஆசிரியர் குழுவுக்கு சுயவிமர்சனம் செய்யும் பழக்கமில்லை. மாற்றுக் கருத்தைப் பிரசுரிக்கும் பண்பும் கிடையாது.

எல்லா யுத்தமும் பேச்சுவார்த்தை ஊடாகத்தான் முடிந்தது என்று இன்னுமொரு மோடி. 1917 சோவியத் புரட்சி நடந்தபோதும், 1945 ல் கிட்லரை சோவியத் தோற்கடித்த போதும், 1949ல் சீனா புரட்சி நடந்தபோதும் இவை எல்லாமே யுத்தத்தின் மூலமே வெல்லப்பட்டன. இது சாதரண முறையில் பல ஆதாரங்களை எம்மால் முன்வைக்க முடியும். சரிநிகர் ஆசிரியர் குழுவின் நோக்கம் என்ன என்பதை விபரிக்கும் போது சில உதாரணத்தைப் பார்ப்போம்

1. ஆணாதிக்கத்திற்கு எதிராக. பெண்கள் போராடக்கூடாது என்கின்றார்.
2. ஒரு பெண்ணை ஆணாதிக்க வெறியன் கற்பழிக்கும் போது கூட பெண் அந்த ஆணிடம் இரந்து பேசித்தீர்க்க வேண்டுமாம்.அதாவது எதிர்த்துப் போராடக்கூடாது. இதைப் பார்த்தக் கொண்டிக்கும் ஆசிரியர் குழு இருவரிடமும் பேசும்படி கோருவார். அதற்காக சரிசநிகர் ஆசிரியர் குழு பெண் போட்டுவந்த சட்டை பிழை, தலைநிமிர்ந்து நடந்தது பிழை, பொட்டுவைக்காதது பிழை, தனியாக வந்ததும் பிழை... இதுபோன்று விளக்குவார்களா?
3. ஒரு தொழிலாளி முதலாளிக்கு எதிராக போராடக் கூடாது என்பர். இது யுத்தத்தை வழிநடத்தும் என்பர். . எனவே பேசித்தீருங்கள் தொண்டமான் வழியில் பிராத்தியுங்கள் என்கின்றனரா?
4. இன்று தமிழ்த் தேசிய இனத்தின் மீது பெரும் தேசிய இனவெறியர்கள் எல்லாத் துறையிலும் துவசம் செய்யுத் போது தமிழ்த் தேசிய இனம் பேசித்தீர்க்க வேண்டுமாம். அதாவது பழையபடி அமீர் வழியில், 1950 முதல் 1980 வரையான காலத்தக்குள் செல்ல வேண்டுமா? அதாவது இன்றைய துரோகக் குழுக்களின் நிலைக்குச் செல்ல வேண்டுமாம்!

இவ்வளவும் போதும் போதும் என நினைக்கின்றோம். சரிநிகர் ஆசிரியர் குழுவுக்கு நேர்மை ஏதாவது இருப்பின் விவாதியுங்கள். மௌனம் பெரும் தேசிய இனத்துக்கு காலடியெடுப்புவதாகும்.

**விமர்சனம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




முடியுமென்றால், ஒரே இரவில் நம் குழந்தைகள் கோடிக்கணக்கில் அந்நியச் செலாவணியைக் குவிக்க முடியும். சுற்றுலாப் பயணிகளாக வரும் அமெரிக்க, ஜப்பான், ஜெர்மன் காமவெறியர்களுக்குக் குழந்தைகள்தான் வேண்டுமாம். தாய்லாந்தில் 3 லட்சம் குழந்தைகளுக்கு எயிட்ஸ் நோயைக் கொடுத்தவர்கள் இப்போது நம் குழந்தைகளைக் கேட்கிறார்கள்... விற்கப்போகிறோமா?

## பிஞ்சுகளைக் குதறும் சீமைப்பன்றிகள்

### விபச்சாரத்தில் குழந்தைகள்

லினா பெர்னட் என்ற சுவீடன் நாட்டு நடிகையும் அவளது காதலனும் போதை மருந்து கடத்தல் குற்றத்திற்காக கோவாவில் கைது செய்யப்பட்டனர் அவர்கள் மீதான வழக்கு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது அதிர்ச்சியூட்டும் பல செய்திகள் வெளிவரத் தொடங்கின

கோவாவில் அநாதைச் சிறுவர்களுக்கான ஆச்சிரமம் நடத்தும் ஃபிரட்டி பீட் என்பவனை இவ் வழக்குத் தொடர்பாக காவல்துறையினர் சோதனையிட்ட போது இந்தியச் சிறுவர்கள் பலருடன் அவன் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதைச் சித்தரிக்கும் புகைப் படங்கள் நூற்றுக்கணக்கில் சிக்கின.

வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கான சாம்பிள்களாகவும், கோவவிற்கு சுற்றுலா வருமாறு அவர்களைக் கூப்பிடும் அழைப்பிதழ்களாகவும் அவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. நூற்றுக்கணக்கான அத்த கைய புகைப்படங்களை ஜெர் மனி மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு அவன் அனுப்பிவைத்திருந்ததும் தெரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வந்தது. விபச்சார விடுதிகளாக அவன் பயன்படுத்தி வந்த இரு இடங்களும் கண்டு பிடிக்கப்பட்டன.

"குழந்தை விபச்சாரத்தின் சொர்க்கம் என்று கூறப்படும் தாய்லாந்தில் சமீபத்தில் அரசுக் கெடுபிடிகள் அதிகமாகி விட்டதால் பொருத்தமான பாதுகாப்பான வேறொரு இடத்தை தெற்காசியப் பகுதியில் தெரிவு செய்யவேண்டிய நெருக்கடி இச்சுற்றுலா தொழில் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கோவா அதற்குப் பொருத்தமான இடம். பெண்களையும், சிறுவர்சிறுமிகளையும் இந்த வட்டாரத்தில் கொண்டுவந்து குவிக்க அவர்கள் திட்டமிட்டுள்ளனர் " என்று கூறுகிறது இன்டர்போல் என்ற சர்வதேசக் காவல்துறை.

இது இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளேட்டில் சமீபத்தில் வெளியான சிறியதொரு செய்தித் துணுக்கு. போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் குறித்த செய்தியும் முதன்முதலில் வெளிவந்தபோது செய்தித் தாழ்களில் இரண்டு அங்குல அகலம் நான்கு அங்குல உயரம்தான் இருந்தது.

வியட்நாமை ஆக்கிரமித்திருந்த அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் ஓய்வெடுப்பதற்கும், பொழுது போக்குவதற்கும் தாய்லாந்தை பயன்படுத்திக்கொள்ளும் ஒப்பந்தம் 1967 ல் அமெரிக்காவுடன் கையெழுத்தானபோது அதன் விபரீதத்தை தாய்லாந்து மக்கள் பலர் அறிந்திருக்கவில்லை.

1971ல் உலகவங்கித் தலைவர் மெக்னமாறாவின் ஆணைப்படி உலகவங்கி உதவியுடன் சுற்றுலா வளர்ச்சித்திட்டங்கள் நாடெங்கும் அறிவிக்கப்பட்ட போதும் விசயம் இன்னதென்று தபய்லாந்து மக்கள் புரிந்துகொள்ளவில்லை.

1975ல் "பொழுதுபோக்கு வளாகங்கள் சட்டம்" என்றொரு புதிய சட்டத்தைத் தாய்லாந்து அரசு கொண்டு வந்த போது, அச்சட்டத்தில் சிறப்புச்சேவைகள் என்ற பெயரில் மசாஜ் விடுதிகளுக்கும் கேளிக்கை என்ற பெயரில் ஆடை அவிழ்ப்பு நடனங்களுக்கும் அனுமதி அளிக்கப்பட்டிருந்ததை பார்த்த போதுதான் சதித்திட்டம் பலபேருக்குப் புரியத்தொடங்கியது.

ஆனால் அதற்குக் காலம் கடந்துவிட்டது. அந்த எட்டு ஆண்டுகளுக்குள் நாடெங்கும் 20.000 புதிய விபச்சாரவிடுதிகள் தோன்றிவிட்டன. அமெரிக்க ஐரோப்பிய யாத்திரீகர்களின் விபச்சார தீருத்தலமாக தபய்லாந்து மாற்றப்பட்டுவிட்டது.

மக்களின் வறுமையும், நாட்டின் அந்நியக் கடன்சுமையும் அதிகரிக்க அதிகரிக்க அதேவேகத்தில் விபச்சாரமும் அதிகரிக்கத் தொடங்கியது.

இன்று விபச்சாரத்திற்கு விரட்டப்பட்டிருக்கும் 12 வயதிற்குட்பட்ட தாய்லாந்து நாட்டுச் சிறுவர்கள் மற்றும் சிறுமியர்களின் எண்ணிக்கை 6 லட்சம். 18 வயதிற்குட்பட்டவர்கள் என்னு பார்த்தால் 20 லட்சம். சுமார் 5 அல்லது 6 கோடி ஜனத்தொகை கொண்ட ஒரு நாட்டில் 18 வயதிற்குட்பட்டோரின் எண்ணிக்கை 2 கோடி என்று வைத்தாலும் விபச்சாரத்தில் ஈடுபட்டிருப்போர் அதில் 10 சதவீதம் பேர்.

**குழந்தை விபச்சாரத்தின் சொர்க்கமான தாய்லாந்தில் 3 லட்சம் குழந்தைகளுக்கு எயிட்ஸ் : அரசுக் கெடுபிடி அதிகரித்து விட்டது. எனவே தாய்லாந்துக்கு மாற்றாக கோவாவைத் தெரிவு செய்துள்ளனர் சுற்றுலாத் தொழில் அதிபர்கள் – என்கிறது "இன்டர்போல்.**

தாய்லாந்தின் வடபகுதி எல்லையோரமுள்ள கிராமங்கள் அனைத்தையும் நேரில் பார்த்த ஒரு அமெரிக்க நிருபர் எந்தக் கிராமத்திலும் சிறுமிகளையே பார்க்கமுடியவில்லை என்கிறார். தாய்லாந்தின் வடபகுதியிலிருந்த அடர்ந்த காடுகளை வெட்டி ஏற்றுமதி செய்து அப்பகுதியை பொட்டலாக்கிவிட்டது அரசு. பாரம்பரியமாக காடுகளைச் சார்ந்து வாழ்கை நடத்திவந்த கிராமப்புற மக்கள் தங்கள் வயிற்றுப் பாட்டுக்காக பெண்பிள்ளைகளை விற்றுவிடுவது சகஜமாகிவிட்டது.

தாய்லாந்தின் ஒரு சிறுமியின் விலை 8000 டொலர்கள். ஜப்பானில் உள்ள விபச்சாரவிடுதிகளுக்கு 14.000 டொலர்களுக்கு அவர்கள் விற்கப்படுகிறார்கள். அந்தத் தொகை அப்படியே இரட்டிப்பாக்கப்பட்டு 30.000 டொலர் திரும்பக் கட்டினால்தான் விடுதலை என்று அச்சிறுமிகளை விடுதிக்குள்ளேயே சிறைவைத்திருக்கின்றனர், விபச்சார விடுதிகளை நடத்தும் மா.்பியா குண்டர்கள்.

" இன்னொரு பிறவியே எடுத்தாலும் இந்தத் தொகையை அடைக்க முடியாது, பாலியல் வன்முறையையும் சகிக்க முடியாது". என்ற நிலையில் சித்திரவதைக்கும் சாவுக்கும் அஞ்சாமல் விடுதியைவிட்டுத் தப்பி ஓடிவந்து தாய்லாந்து தூதரகத்தில் சரணடைகின்றனர் நூற்றுக்கணக்கான சிறுமிகள்.

இப்படி ஒவ்வொரு மாதமும் தாய்லாந்துிற்குத் திருப்பி அனுப்படும் தப்பிவந்த சிறுமிகளின் எண்ணிக்கை 250.

கிராமங்களிலிருந்து விலைக்கு வாங்கப்பட்டு இவ்வாறு வெளிநடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவோர் போக மற்ற சிறுமிகள் தலைநகர் பாங்கொக்கில் உள்ள விபச்சார விடுதிகளுக்கு விற்கப்படுகின்றர். அந்நியச்செலவாணியை அள்ளித்தருகின்ற அமெரிக்கர்களும், ஜப்பானியர்களும், ஜேர்மனியர்களும்தான். இங்கே பிரதான வாடிக்கையாளர்கள்.

" தபய்லாந்திற்கே உரிய கதகதப்பை வழங்கும் குட்டி அடிமைகள்," "சென்னபடி எல்லாம் கோட்டு நடக்கும் பெண் பிஞ்சுகள் " என்று வக்கிரமாகவும் பச்சையாகவும் விளம்பரம் செய்து காமவெறிபிடித்த வாடிக்கையாளர்களை கவர்கின்றன "ஐரோப்பிய செக்ஸ் சுற்றுலா நிறுவனங்கள்" ஒரு இளம்பெண்ணை மேற்சட்டையில்லாமல் புகைப்படம் எடுத்து அப்படத்தைக் காதல் சின்னத்திற்குள் பொருத்தி தாய்லாந்திலிருந்து காதலுடன் " என்று அச்சிட்டு விமானப்பயணிகளுக்கு விநியோகிக்கிறது இன்னோர் நிறுவனம். உலகில் எந்தெந்த நாடுகளில், எங்கெங்கே ஓரினச்சேர்க்கைக்கான ஆண்,பெண்கள் கிடைக்கின்றனர் என்ற பட்டியலை ஜெர்மனி ஓரினச்சேர்க்கையாளர் அமைப்பு நடத்தும் பத்திக்கையில் பல மொழிகளில் வெளிவருகிறது.

"பருவமடைந்த விலைமாதர்களுடன் உறவுகொண்டால் "எயிட்ஸ்" அபாயம் - சிறுமிகள் என்றால் அந்தப்பிரச்சனையில்லை." என்று பொய்ப்பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதால் செள்ளைக் காமவெறியர்களின் பார்வை முழுவதும் சிறுமிகளின்மீது திரும்பி விட்டது. பருவம் வராதநிலையில் பாலியல் வன்முறைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளாக்கப்படும் 8 முதல் 12 வயதிற்குட்பட்ட சிறுமிகள் கடுமையான இரத்தப்போக்கிற்கு ஆளாகின்றனர். அதனுடாகவே வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்தும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். விளைவு 6 லட்சம் சிறுமிகளில் பாதிப்பேர் எயிடஸ் நோயாளிகளாகியுள்ளனர்.

நோயாளிகள் எனத்தெரிந்ததும் அச்சிறுமிகள் செந்தக்கிராமத்திற்கே விரட்டியடிக்கப்படுகின்றனர். எயிட்ஸின் தாக்குதலுக்கு ஆளாகமல் இருந்த கிராமப்புறங்களிலும் இதன் காரணமாக எயிட்ஸ் பரவிவிட்டது.

பெண்ணுரிமை அமைப்புக்களும், குழந்தை நல அமைப்புக்களும் இந்தக் கொடுமைக்கெதிராகப் போட்ட கூச்சலை நேற்றுவரை எந்த ஜரோப்பிய, அமெரிக்க கனவானும் காதில் வாங்கவில்லை. ஆனால் இன்று தங்கள் குரலில் ஆச்சரியம் தொனிக்க, அப்படியா, தாய்லாந்தில் சிறுமிகளா விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்? எவ்வளவுபேர் இருப்பார்கள்? என்று ஒன்றுமே தெரியாதவர்கள் போலக் கேட்கின்றார்கள்.

இன்று அவர்கள் கேட்பதங்குக் காரணமும் தாய்லாந்து குழந்தைகள் மீதுள்ள அனுதாபமல்ல. விளையாடப்போன தங்கள் அருமைக்குடிமக்கள் எயிட்சை வாங்கி வந்துவிட்டார்களே என்ற வருத்தம்தான். புதிதாக ஏதேனும் ஒரு பாதுகாப்பான நாட்டை ஏட்பாடு செய்யவேண்டும் என்ற கவலைதான்.

ஆர்மைன் என்ற தாய்லாந்துச் சிறுமி விபச்சாரத்தில் தள்ளப்படும் போது அவளுக்கு வயது 12. பருவத்திற்குக் கூட வரவில்லை. கடற்கரையோர உணவுவிடுதியில் நல்லவேலை வாங்கித்தருகிறோம் என்று பொய்சொல்லி அவளது ஏழைப்பெற்றோரை ஏமாற்றி விபச்சாரத்திற்குப் பெயர்போன புக்கேட் நகரில் கொண்டுவந்து விற்றுவிட்டார்கள் விபச்சாரத் தரகர்கள்.

" ஒரு இரவிற்குக் குறைந்தது 3 பேர் எல்லோரும் அமெரிக்கர்கள், யப்பானியர்கள், ஜரோப்பியர்கள் தான்". என்றாள் ஆர்மைன். இரண்டு ஆண்டுகள் இந்த நரகத்தில் உழன்றபின் அவளை விடுவித்தது காவல்துறை. ஆனால் அதற்குள் அவள் எயிட்ஸ் நோயாளி ஆகிவிட்டாள்.

இந்தியாவில் 4 லட்சம் சிறுவர் சிறுமிகள், பிலிபைன்ஸில் 60.000 பேர், பிரேஸிலில் 2.5 லட்சம் பேர். அநேகமாக எல்லா ஏழை நாடுகளும், முன்னால் சோசலிசநாடுகளும் ஜரோப்பிய அமெரிக்க காமவெறியர்களின் விருந்தினர்களாகிவிட்டனர்.

இலங்கைத் தேயிலை அலுத்துப்போய் இப்போது பால்மணம் மாறாச்சிறுவர்களைக் கேட்கின்றார்கள் மேல்நாட்டு சுற்றுலாப் பயணிகள். இவர்களது ஓரினச் சேர்க்கைக்குப் பலியாக்கப்பட்டுவரும் சிறுவர்களின் எண்ணிக்கை 40.000.

**ஒரு இரவுக்குக் குறைந்தது 3 பேர். எல்லோரும் அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள், ஐரொப்பியர்கள்தான் என்கிறாள் ஆர்மைமன். பருவத்திற்கு வராத 12 வயது தாய்லாந்து சிறுமி இவள். 14 வயதில் விடுவிக்கப் பட்டபோது இவள் ஒரு எயிட்ஸ் நோயாளி**

தனியார் மருத்துவமனைகளைச் சுற்றிலும் மருந்துக்கடைகள் பெருத்திருப்பது வழக்கம். ஆனால் பம்பாயில் சில நட்சத்திர மருத்துவ மனைகளைச் சுற்றி விபச்சாரவிடுதிகள் ஏராளமாக முளைத்திருக்கின்றன. அந்நியச் செலவாணியைக் குறிவைத்தே துவக்கப்பட்டிருக்கும் இந்த மருத்துவமனைகளில் தலைவலி, காச்சல் என்று ஏதேனும் ஒரு சாக்கைச் சொல்லி நோயாளியாகச் சேர்ந்துவிடும் அரேபியஷேக்குகள் தங்களுக்கு தேவையான சிறுமிகளை பாதுகாப்பாக வரவழைத்துக் கொள்கிறார்கள்.

வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பி ஏமாந்து விபச்சாரத்தில் தள்ளப்பட்ட டொமினிக்கன் குடியரசைச் சேர்ந்த ஓர் இளம்பெண்ணின் போட்டியை பீ.பீ.சி தொலைக்காட்சி ஒளிபரப்பியது. அவர்கள் என்னை அடித்தார்கள், சூடுவைத்தார்கள், பட்டினி போட்டபர்கள். 5 நாட்களுக்குமேல் என்னால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. கடைசியில் என் தன்மானத்தையும், கன்னித்தன்மையையும் வெறும் 25 டொலருக்கு இழந்தேன் என்று கண்களில் நீர்வழியக் கூறினாள் அந்தப் பெண்.

தங்கள் நாட்டின் இறையாண்மையையும் மானத்தையும் சில லட்சம் டொலர்களுக்கு அமெரிக்காவிற்கும் உலகவங்கிக்கும் விற்றுவிட்ட நாடுகளின் பெண்கள் எல்லாம் தங்கள் மானத்தை ஒன்றிரண்டு டொலர்களுக்க விற்க நேர்வது தவிர்க்கமுடியாது.

பிரேஸில், மெக்சிக்கோ, பிலிப்பைன்சு, தாய்லாந்து...... அடுத்து இந்தியா.

" நமது மரபென்ன, பண்பாடென்ன, வரலாறென்ன! வயிற்றுப்பசிக்காக பெற்ற பிள்ளையையே விற்கத் துணியும் தாய்லாந்து விவசாயியைப்போல நம்நாட்டு மக்கள் ஒருக்காலும் நடந்துகொள்ள மாட்டார்கள்." என்று யாரும் ஆறுதல் அடைந்து கொள்ளவேண்டாம்.

" பசி வந்திட பத்தும் பறந்து போகும் என்பது தமிழ்ப் பழமொழியல்ல, உலகப் பொதுமொழி. வயிற்றுக்காக சிறுநீரகத்தை உயிரை பணயம் வைக்கத் தூண்டும் ஏழ்மை, சிறுவர்களை மட்டும் விட்டுவைக்குமா? மீட்க முடியாது என்று தெரிந்தே செந்தப் பிள்ளையைக் கொத்தடிமையாக விற்கத் தூண்டும் வறுமை, அத்துடன் நிறுத்திக் கொண்டுவிடுமா? உலகின் ஒரே இந்து நாடான நேபாளத்திலிருந்து சிறுமிகளும், பெண்களுமாக ஆண்டுக்கு 7.000 பேர் பம்பாய் சிவப்பு விளக்குப் பகுதிக்கு இறக்குமதியாக்கிறார்களே எப்படி?

நேபாளத்திலிருந்து கடத்திக் கொண்டு வரப்பட்ட ஒரு 14 வயதுச் சிறுமியை பம்பாய் விபச்சார விறுதி ஒன்றில் வைத்து 3 வார சித்திரவதை செய்தார்கள். அவள் எதிர்த்த நின்றாள். பிறகு ஓர் இருட்டறையில் அவளை ஒரு நல்ல பாம்புடன் சேர்த்து அடைத்தார்கள். அச்சத்தில் உறைந்து போனாள். இரண்டு நாட்கள் கழிந்தன. முன்றாம்நாள் இணங்கினாள்.

தாய்லாந்தின் ஈவிரக்கமற்ற விபச்சாரத்தரகர்களைப் போல 8 வயதுக் குழந்தையைக் கொண்டு வந்து விபச்சாரியாக்குவது நம் நாட்டிலும் நடக்குமா என்ற ஐயம் யாருக்கும் இருக்க வாய்ப்பில்லை. ஏற்கனவே அது நடந்து கொண்டுதானிருக்கிறது. சிறுநீரகத் திருட்டின் தரகர்கள் வேறெந்த ரகம்?

மண்ணையும் மக்களையும் அந்நியனுக்குக் கூட்டிக்கொடுக்கும் தரகர்கள் ஆளும்நாட்டில் பெண்ணையும் குழந்தைகளையும் அவனுடைய படுக்கையறைக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விற்கும் தரகர்களா இல்லாமல் போய்விடுவார்கள்?

" அது ஒன்றும் கஷ்டமில்லை ருமேனியாவுக்குப் போனேன். கேட்பாரில்லாத பெண்கள் யாரென்று தேடினேன். அவர்களை அழைத்துவந்து பெல்ஜியத்தில் விற்றுவிட்டேன். பிறகு அவர்கள் பல கைமாறி விற்கப்பட்டார்கள். எனினும் கேட்பதற்கு ஒரு நாதியும் கிடையாது. தொழில் ரொம்பச் சுலபம் ஒரு கில்லோ ரொட்டியை விற்பது போலத்தான்." என்று தொலைக்காட்சிக்குப் போட்டி கொடுத்தான் ஒரு கங்கேரிய விபச்சாரத் தரகன். முதலாளித்துவம் வெற்றிக் கொடி நாட்டிய நாடல்லவா!

" ஒன்று மதம் இன்னொன்று போலீசு இவையிரண்டும்தான் விபச்சாரத்தை ஒழிப்பதற்கு அவர்கள் வைத்திருக்கும் ஆயதங்கள் " என்று முதலாளித்துவத்தைக் கேலி செய்தார் லெனின். ஆனால் ஏட்டளவில் விபச்சார ஒழிப்புப் பற்றிப் பேசிய காலம் கூட இன்று ஒழிந்து விட்டது.

" குழந்தை உழைப்பைத் தடை செய்வோம் " என்று முழங்கிவிட்டு இன்று குழந்தைத் தொழிலாளர்நலச் சட்டம் கொண்டு வந்து அதையே ஊக்கப்படுத்தி ஒழுங்குபடுத்துவது போல.

விச்சாரத்திற்கும் ஒருவழி கண்டுபிடித்து விட்டார்கள். "விலைமாதர்கள்" என்ற சொல் அவர்களை இழிவுபடுத்துவதால் (நன்றாகக் கவனியுங்கள். அந்தத் தொழிலல்ல, சொல்தான் அவர்களை இழிவுபடுத்துகிறதாம்.) பாலியல் தொழிலாளர்கள் என்ற புதிய கௌரவமான சொல்லை அறிமுகப்படுத்தியிருக்கின்றன முதலாளித்துவப் பத்திரைகைகள்.

சிவகாசி, மத்தாப்பூவுக்குக் குழந்தைகள் "தவிர்கவியலாத" தேவையாகிவிட்டதைப் போல, நாளை சுற்றுலா வளர்ச்சிக்கும் அந்நிய செலாவணி வருவாய்க்கும் குழந்தைகள் தவிர்க்கவியலாதவர்கள் ஆகலாம். " பருவம் வராத பாலியல் தொழிலாளர்கள்" என்றொரு புனிதப் பெயர் சூட்டி இதையும் இந்த அரசு நிறுவனமயமாக்கிவிடலாம்.
பாலுறவு என்றால் என்னவென்றே தெரியாத, அதற்குரிய பருவமும் வராத சிறுவர்களும், சிறுமிகளும் விபசாரத்திற் குட்படுத்தப்படுவதன் சமூகவிளைவுகள் என்ன? சில ஆண்டுகள் இத்தகைய பாலியல் வன்முறைக்கு ஆனாக்கப்பட்டபின் ஒருவேளை அவர்கள் விடுவிக்கப்பட்டாலும் அவர்கள் மனநிலை என்னவாக இருக்கும்? வாழ்க்கைமதிப்பீடுகள் என்னவாக இருக்கும்?

" திரும்பவும் எங்கள் நாட்டுக்குப் போய் என்ன செய்வது? குடும்பத்தோடு பட்டினி கிடப்பதா? ஆணாயிருந்தால் எவனையாவது கொலைசெய்துவிட்டுப் பணம் திருடியிருப்பேன். பெண் என்பதால் விபச்சாரி ஆகிவிட்டேன்". என்றாள் பம்பாய் விடுதி ஒன்றிலிருந்து மீட்கப்பட்ட ஒரு நேபாளப்பெண்.

விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்க சிறார்களில் கணிசமானோர் அவ்வப்போதைய கைச்செலவுகளுக்காக தொழிலில் ஈடுபடுபவர்கள் என்கிறது ஓர் அமெரிக்க ஆய்வு. இங்கே பெரும் நகர்ப்புறங்களில் ஏற்கனவே தோன்றிவிட்டது இந்தப் பண்பாடு.



சில வாடிக்கையாளர்களின் ரசனைக்கேற்ப மகிக் என்ற சிறுவனுக்கு பெண் வேடம் போட்டு அனுப்புகிறான் ஒரு தரகன். நடக்குமிடம்-பெல்ஜியத்தின் மல்கே.

பம்பாய் விபச்சார விடுதிகளிலிருந்து தமிழ் நாட்டுக்கு மீட்டுக் கொண்டுவரப்பட்ட பெண்களிற் சிலர் திரும்பவும் அங்கேயே சென்றுவிட விரும்பினர். காரணம்? " இந்த நரகத்திற்கு அந்த நரகமேமேல்" என்பதுதான் அவர்களது பதில்.

தாய்லாந்தின் மரமும், இலங்கையின் தேயிலையும், வங்காளதேசத்தின் சணலும், காஸ்மீரின் பனிமலையும், பாங்கொக்கின் பெண்களும், கோவாவின் சிறுவர்களும் தங்கள் நுகர்வுக்காகவே இறைவனால் படைக்கப்பட்டிருக்கின்றன என்று கருதும் சொர்க்கபுரி வாசிகளான அமெரிக்கர்கள் என்ன சொல்கிறார்கள்?

" மீண்டும் வியட்நாம்" என்ற தலைப்பில் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் நியூஸ்வீக் வார இதழ் (நவம்பர்"94) வெளியிட்டுள்ள புகைப்படக் கட்டுரை கிழ்க்கண்டவாறு துவங்குகிறது :

" வியட்நாமைப் போல வேறெந்த ஆசியநாடும் அமெரிக்க மனங்களை ஆக்கிரமித்ததில்லை. ஒரு தலைமுறைக்கு முன் அமெரிக்க இரத்தத்தையும் செல்வங்களையும் ஏராளமாக உறிஞ்சிக் குடித்த ஒரு சிறிய ஏழை நாடு வியட்நாம்." அமெரிக்கப் போர் விமானங்கள் வீசிய குண்டுகளின் கந்தக நெடி கூட இன்னும் வியட்நாம் மண்ணிலிருந்து நீங்கவில்லை : அதற்குள் வரலாற்றைத் தலைகீழாகத் திரிக்கும் இந்தக் கயவர்கள்தான் இப்போது கோவாவிற்கு வரவிருகின்றார்கள்.

**பிரேசில், மெக்சிகோ, பிலிப்பைன்சு, தாய்லாந்து இந்தியா. தங்கள் நாட்டின் மானத்தைச் சில லட்சம் டாலர்களுக்கு அமெரிக்காவிடம் விலை பேசிவிட்ட நாடுகளின் பெண்கள், தமது மானத்தை ஒன்றிரண்டு டாலர்களுக்கு விற்க நேர்வது தவிர்க்க முடியாதது.**

தாய்லாந்தைக் குதறிய நாய்கள் இப்போது தங்கள் பார்வையை நம்பக்கம் திருப்பியுள்ளன. இந்தியச் சிறுமிகளை விபச்சாரிகளாகவும், சிறுவர்களை விபச்சாரத் தரகர்களாகவும் மாற்றிய பின், எழுதுவார்கள் : " இந்தியா தனது சிறுமிகளையும் சிறுவர்களையும் வைத்து அமெரிக்க இளைஞர்களை மயக்கி, அவர்களது செல்வத்தையும் ஏமாற்றிப் பிடுங்கிக் கொண்ட வேசிகளின் தேசம்" என்று.

அனுமதிக்கப் போகிறோமா இந்த அமெரிக்க நாய்களை?

- சூரியன்

நன்றி : புதிய கலாச்சாரம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# 2ம் உலக யுத்தத்தின் 50-வது வருட கொண்டாட்டங்களின் ஊடாக மறைக்கப்பட்டு வரும் உண்மைகள்

சென்ற இதழ் தொடர் 15

காலை 7மணி முதல் இரவு 8மணி வரைக்கும் 300 டன் கன வெடி குண்டுகளையும் 13,000 எரிகுண்டுகளையும் வீசினர்..

செப்டெம்பர் 13ம் திகதி இரவு 1000 பாசிச விமானங்கள் லண்டன் மீது தாக்குதலைத் தொடுத்தது. இங்கு பிரிட்டீஸ் விமானங்களுடன் வானில் கடும் சண்டை நடைபெற்றது. ஜெர்மன் 60 விமானங்களையும், பிரிட்டன் 26விமானங்களையும் இதில் இழந்தது. இதையடுத்து லண்டன் மீதான தாக்குதல் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. மொத்தமாக பிரிட்டன் மீது 46,000 க்கு மேற்பட்ட தாக்குதல்களை நடத்திய ஜெர்மன், இதில் 60,000 டன் குண்டுகளை வீசியிருந்ததுடன் 1,700 விமானங்களையும் இழந்திருந்தது.

பிரிட்டன் 915 விமானங்களை இழந்து, 500 க்கு அதிகமான விமானிகளைப் பறிகொடுத்தும், 10லட்சம் கட்டிட சேதங்களுடன் 40,000 மக்களையும் இழந்திருந்தது. இதைத் தொடர்ந்து கிட்லரின் படைத் தலைமை இரண்டு முக்கிய விடயத்தை விவாதத்திற்கு உள்ளாக்கியது.

1 பிரிட்டீஸ் பிரச்சனை
2 கிழக்கத்தைய பிரச்சனை

என இரண்டு பிரச்சனைகள் உள்ளதென ஜெனரல் கால்டர் தனது நாட்குறிப்பில் எழுதினார். அதைப் பார்ப்போம்

"ருஷ்யா முறியடிக்கப்பட்டால் பிரிட்டன் தனது கடைசி நம்பிக்கையை இழந்து விடும்."

பெ.கால்டர்
-யுத்த நாட்குறிப்பு . தொ.2-

1940ம் ஆண்டின் இரண்டாம் பகுதியில் ஜெர்மனி அட்லான்டிக்கில் தனது சக்தியைப் பலப்படுத்தியது. இதன் மூலம் நேச நாட்டினதும், நடுநிலை நாடுகளினதும் 7.6 மில்லியன் டன் மொத்த எடையைக் கொண்ட போக்குவரத்து மற்றும் போர் கப்பல்களை மூழ்கடித்தது. இவற்றில் 53.4 வீதம் நீர்மூழ்கிகள் மூலமும், 18.3 வீதம் வான் மூலமும், 12சத வீதம் சாதாரண கப்பல்கள் மூலமும், ஜெர்மன் ஒழித்துக் கட்டியது. இதே காலத்தில் ஜெர்மனி 43 நீர்மூழ்கிகளை இழந்தது. பிரிட்டனின் கடல் போக்குவரத்துகள் முற்றாக சீர்குலைக்கப்பட்டது. இதையொட்டி பிரிட்டீசின் அதிகார பூர்வ வரலாற்றில் குறிக்கப்பட்டதைப் பார்ப்போம்.

"எதிரி மட்டும் தனது ஆரம்ப தாக்குதல் சக்தியை இன்னும் சிறிது காலம் மாறாமல் அப்படியே வைத்திருந்தால் அது எங்களுக்கு பெரும் கேடான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கும்."


ஜா.பட்லர்.ஜா.குலாயர்
-பெரும் போர்த் தந்திரம்-

பிரிட்டிஸ் படை தனது பலத்தைப் பெருக்கி 1941 மே 27 ம் திகதி ஜெர்மனியின் பெரும் போர் கப்பலான "பிஸ்மார்க்" கப்பலை மூழ்கடித்தது. இது ஜெர்மனிக்குப் பலத்த இழப்பாகவே அமைந்தது.

1940 மார்ச் 1ம் திகதி ஜெர்மன் பல்கேரியாவுக்குள் நுழைந்தது. எப்பிரல் 6ம் திகதி யூகோசிலாவாக்கியா, கிரிஸ்சுக்குள் புகுந்தது. எப்பிரல் 15ம் திகதி நிபந்தனை அற்ற சரணாகதியில் யுக்கோசிலாவாக்கியா கையெழுத்திட்டது. எப்பிரல் 23ம் திகதி கிரிசும் சரணடையும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. எப்பிரல் 27ம் திகதி ஜெர்மன் எதென்சில் நுழைந்தது. இங்கு இருந்த பிரிட்டிஸ்படை 15 ஆயிரம் பேரைப் பறிகொடுத்து, சகல ஆயுதங்களையும் போட்டுவிட்டு நாட்டைவிட்டே வெளியேறியது. இவ்வாறாக 1941 ஜூன் மாதங்களில் மத்திய ஐரோப்பாவின் எல்லா நாடுகளையும் ஜெர்மனியும், இத்தாலியும் கைப்பற்றி இருந்தது. இவற்றின் சகல மூலப் பொருட்களையும் சோவியத் யுத்தத்திற்காகத் தயாரித்தது

இதே நேரம் 1940ம் ஆண்டு ஜூனில் மத்திய தரைக் கடல் பிரதேசத்திலும், வடக்கு ஆபிரிக்காவிலும் மற்றும் கிழக்கு ஆபிரிக்காவில் காலனிக்காகவும் போர் தொடங்கியது. 1940 ஆகஸ்டில் இத்தாலி, சோமாலி, கெனியா, சூடானின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டது. சூயஸ் கால்வாயைக் கைப்பற்ற லிபியாவில் இருந்து எகிப்துக்குள் இத்தாலி புகுந்தது. கிரிஸ் யுத்தம் மூலம் சூயஸ் கால்வாயை இலகுவில் கைப்பற்ற முடியுமென கனவு கண்ட இத்தாலியின் முடிவு தவறாக அமைந்தது. இதையடுத்து யுத்தம் நிறுத்தப்பட்டது. இதைப் பயன்படுத்திய பிரிட்டீஸ் எதிர் தாக்குதலைத் தொடுத்தது. இதற்குப்பின் 1941 மே வரை தேசபக்த சக்திகளின் உதவியுடன் சோமாலியா, எரிட்ரியா, எத்யோப்பியா, ஆகிய பிரதேசங்களை விடுவித்தது. இதை அடுத்தும் இத்தாலியின் பெரும் இழப்பை அடுததும் ஜெர்மனிய படைகள் அனுப்பப்பட்டன. 1941 மார்ச் 31ல் ஜெர்மனி - இத்தாலி தாக்குதல்களை மீண்டும் தொடங்கியது. ஆங்கிலேயர்





«Den tyske armé 1940—1944». Karikatur av I. Ross.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழப்பமடைந்து வேகமாகப் பின்வாங்கத் தொடங்கினர். இவர்கள் 90கி.மீ வரைக்கும் முன்னேறினர். இது நிறுத்த வேண்டிய வகையில் ஜெர்மன் நிர்பந்திக்கப்பட்டது. ஏனெனில் சோவியத்தின் மீதான யுத்தத்தை அது தொடங்க இருந்தது. இதை யொட்டி கிட்லர் முசேலினிக்கு எழுதிய கடிதத்தைப் பார்ப்போம்.

''1941 இலையுதிர் காலத்திற்கு முன் எகிப்தின் மீது தாக்குதல் கிடையாது.''
-Les letters secretes-

பிரான்சின் சரணடைவுடன் அதன் கடற்படை ஒரான், அல்ஜீரியா, கசபிளான்கா, மற்றும் தோக்கான் போன்ற துறைமுகங்களில் இருந்தது. இதை பிரிட்டீஸ் படை அழிக்கும் வகையில் 1940 யூலையில் சுற்றி வளைத்தது. பெரும் தாக்குதலுக்கு உள்ளாகியது. ஒருசில கப்பலைத் தவிர மிகுதி முற்றாக அழிக்கப்பட்டது. இதை யொட்டி டேகோல் எழுதியதைப் பார்ப்போம்.

''காட்டுமிராண்டித் தனமான புயல் வீசின்... ஆனால் பிரஞ்சுக் கடற்படை ஆங்கிலேயர்களுக்கு எதிரான பகைமை நடவடிக்கைகளை எப்பொழுதுமே திட்டமிடவில்லை.''
டேகோல்
-யுத்த நினைவுக் குறிப்புகள்-

சோவியத் மீதான தயார் படுத்தப்பட்ட நிலையில் இதை கிட்லர் பின்வருமாறு 'மாய்ன் காம்.்.ப்' என்ற நூலில் எழுதினான்.

''ஐரோப்பாவில் எல்லா நிலப்பரப்புகளையும் பெறுவதைப் பற்றி பேசப்படுகையில், இதை முக்கியமாக ருஷ்யாவிடம் இருந்துதான் பிடுங்க வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் புதிய ஜெர்மனியப் பேரரசு தெவ்தோன் வீரத்திருத்தகைகளால் இடப்பட்ட பாதையில் மீண்டும் பயணத்தைத் தொடங்க வேண்டும்.''
கிட்லர்
-Mein kambf-

இந்த வகையில் சோவியத்தைக் கைப்பற்றுவதும், அதன் முக்கியத்துவத்தையும் கிட்லர் அறிவித்தான். அதற்காக தனது சக்திகள் அனைத்தையும் சோவியத் முனையில் குவித்தான். அத்துடன் சோவியத்தை சுடுகாடு ஆக்கும்படி அறிவித்தான். அதை கிட்லர் ஜெனரன்களள் முன் பேசும் போது கூறியதைப் பார்ப்போம்.

''சோவியத்துடனான யுத்தத்தில் ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டத்தைப் பற்றிப் பேசப்படுகிறது. நாம் இக் கண்ணோட்டத்தில் பார்க்காவிடில் நாம் எதிரியை முறியடித்தாலும் 30 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் கம்யூனிச அபாயம் தலைதூக்கும். நமது எதிரியை ஏதோ நிறுத்தி வைப்பதற்காக நாம் யுத்தத்தை நடத்தவில்லை.''
-்.பெ.கால்டர்-
யுத்த நாட்குறிப்பு, தொ-2-

இந்த வகையில் கம்யூனிச அபாயம் மீது படுகொலைகளைத் தீர்வாக வைக்கப்பட்டு 2கோடி மக்களை கொன்றொழித்தான். அந்த வகையில் யுத்தம் சோவியத் மண்ணில் தீவிரமாக நிகழ்த்தப் பட்டவுடன் ஜெர்மனியின் தோல்வியும் சோவியத் மண்ணில் ஆரம்பித்தது.

மேற்கத்தைய ஊதுகுழல்கள் சோவியத்தின் பெரும்வீத பங்களிப்பை மறுத்து தாமே கிட்லரை தோற்கடித்தனர் என்ற கட்டுக்கதைகள் மூலம் மக்களை ஏமாற்ற முனைந்து நின்றனர்.

போலந்து 3வாரங்களிலும், பெல்ஜியம் 18 நாட்களிலும், நோர்வே 2 மாதத்திலும், பிரன்ஸ் 44 நாட்களிலும் ஜெர்மனியிடம் தோல்வி பெற்றன. ஆனால் சோவியத்தில் 3 வருடங்களின் பின் தோல்விகளுடன் பாசிசத்தின் முடிவும் ஏற்பட்டது. ஜெர்மன் சோவியத்தால் துரத்தியடிக்கப்பட்டது. சோவியத் தாக்குதலின் முன்னர் ஜெர்மனிய படை பெரும் பலத்துடன் இருந்தது.

| முக்கிய குறியீடுகள் | ஜெர்மனி / அஸ்திரியா | ஜெர்மனியும் அதன் துணைநாடு. ஆக்கிரமித்த நாடு |
|---|---|---|
| நிலப்பரப்பு (ஆயிரம் ச.கி.மீ) | 554 | 3,277 |
| மக்கள் தொகை (மில்லியன்) | 76 | 283 |
| எ்கு உற்பத்தி (மில்லியன் டன்) | 20 | 43.6 |
| நிலக்கரி உற்பத்தி (மில்லியன் டன்) | 185 | 348 |
| எண்ணை உற்பத்தி (மில்லியன் டன்) | 0.5 | 10 |
| மின்சக்தி (மில்லியன் கிலோவைட்) | 52 | 110 |
| தானிய உற்பத்தி (மில்லியன் டன்) | 13.6 | 54.8 |


இதைவிட 30 செக்கோஸ்லொவாக்கியா, 92 பிரஞ்சு, 12 பிரிட்டீஸ், 32 பெல்ஜியம், 18 ஹொலந், மற்றும் 6 நோர்வே டிவிசன்களின் ஆயுதங்களும், படைத் தளபாடங்களும் ஜெர்மனிய வசம் இருந்தன. ஜெர்மனிய பொருளாதாரம் இராணுவ வழிகளில் கொண்டுவரப்பட்டும் இருந்தன.

1940-41ல் ஆண்டு ஒன்றுக்கு 10,000 முதல் 11,000 விமானத்தையும், 1,400 கனரக டாங்கிகளையும், 2,300 இலகுவான டாங்கிகளையும் உற்பத்தி செய்தது. சோவியத்தின் மீது தாக்குதலைக் தொடுக்க முன் ஜெர்மன் விமானங்கள் 324 தடவைகள் எல்லையை மீறின. 5000 ஜெர்மனிய வேவுக்காரர்களை சோவியத் பரப்பில் கைது செய்தனர். 1940 டிசம்பர் 18ல் சோவியத்மீதான தாக்குதல ஆனைமது கிட்லர் கைடியழுத்து இட்டான்.

இது ''பார்ப்ரோஸ்ஸா'' என அடையாளப் பெயரைப் பெற்றது. 1941 ஆகஸ்ட் 15 வாக்கில் மொஸ்கோ விழுந்து விடும், அக்டோபர் 1 க்குள் சோவியத்துடன் யுத்தம் முடிந்துவிடும் அதாவது 2-3 மாதங்களுக்குள் கைப்பற்றி விட முடியுமென கிட்லர் அறிவித்தான். இதையொட்டி வெளியான ஆனையைப் பார்ப்போம்.

''பிரிட்டனுக்கு எதிரான யுத்தம் முடியும் முன்னதாகவே ஜெர்மனிய இராணுவம் குறுகியகால நடவடிக்கையின் போது சோவியத் ருஷ்யாவை முறியடிக்கத் தயாராக இருக்க வேண்டும்.''
-கெ.ரெயன்ஹார்ட்-
-மாஸ்கோ அருகே நடந்த திருப்பம்-

**அடுத்த இதழில் தொடரும்**






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாக்கிஸ்தானில்..
(பின் பக்கத் தொடர்ச்சி)

ஆம், இரத்தத்தின் மீது பிராத்தனைகளும், ஆட்சி அதிகாரங்களும் வாழுகின்றனவே!

இன்று பாக்கிஸ்தானில் உள்ள 3.5கோடி சிறுவர்களில் 70லட்சம் சிறுவர்கள், அதாவது 5சிறுவர்களுக்கு ஒருவன் உழைப்பில் ஈடுபடுவதுடன், மிக மோசமாக சுரண்டப்படுகின்றான். இவர்களின் உழைப்போ ஒரு நாளைக்கு 3-10 ரூபாய்கள் தான். இந்நிலைமை இன்று இத்தாலி, அமெரிக்கா என மேலை நாடுகளையும் விட்டுவைக்கவில்லை. இன்று உலகில் 20 கோடி சிறுவர்கள் உடல் உழைப்பில் ஈடுபடுத்தப் படுகின்றனர். இது உலகிலுள்ள 28சிறுவர்களுக்கு ஒருவன் என்ற ரீதியில் உள்ளது.

இந்தியாவில் 5.5 கோடி சிறுவர்கள் உழைப்பில் ஈடுபடுத்தப்படும் அதேவேளை, 23 இந்தியனுக்கு ஒருவன் என்ற ரீதியிலும், இலங்கைச் சனத்தொகை போல 3மடங்காகவும் இது இருக்கின்றது. அமெரிக்காவில் கலிபோனியாவில் மட்டும் 5 லட்சம் சிறுவர்கள் வெறும் ஒரு டொலருக்காக உழைப்பில் ஈடுபடுத்தப் படுகின்றனர். பிரேசிலில் வீதிச் சிறுவர்கள் 2 லட்சமாக உள்ள அதேநேரம் இவர்களில் நான்குபேர் ஒவ்வொரு நாளும் பொலீசாரால் சுட்டுக் கொல்லப்படுகின்றனர். பொலீசாரால் பரோசிலில் மட்டுமல்ல பெரு பொலிலியாவிலும் வீதிப் படுகொலைகள் நிகழ்த்தப்படுகின்றன.

ஜெல்சின் ஆட்சிப்பீடம் ஏறிய பின்னர் ரஸ்யாவில் பல ஆயிரம் சிறுவர்கள் வீதிகளில் வசிக்கத் தொடங்கியுள்ளனர். ரஸ்யாவில் பல ஆயிரம் சிறுவர்கள் தாம் ஏன் அடைத்து வைக்கப்பட்டு இருக்கின்றோம் என்ற விபரங்கள் தெரியாமலே சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இலங்கை, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் 5 லட்சம் இளம் குருத்துக்கள் சுற்றுலாமையங்களில் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். கடந்த பத்துஆண்டுகளில் 10 லட்சம் சிறுவர்கள் யுத்தங்களால் கொல்லப் பட்டுள்ளதுடன், 50 லட்சம் குழந் தைகள் அகதி முகாம்களிலும், 1 கோடியே 20 லட்சம் சிறுவர்கள் பெற்றோர்களையும், வீடுவாசலையும் இழந்து உள்ளனர். சிறுவர்கள் மீது வரமுறையின்றி சூறையாடுவதன் மூலம் அவர்களை ஓர் இயந்திரப் பொம்மைகளாக மாற்றியும், அவர்களை மிகக் குறுகிய வயதில் கொன்றொழிக்கவும் இவ் அநியாய உலகம் ஆயத்தம் ஆகிவிட்டது.

3ம் உலக நாடுகளின் அவலத்தை இங்கு தொலைக்காட்சிகளில் பார்க்கும் எம்மவர்கள் முகத்தைச் சுளித்தக்கொண்டு இதைவிட எத்தனையோ அழகியல் விடயங்கள் உண்டென அலுத்துத் திரிகின்றார்கள். இவர்கள் தமது சொந்தச் சிறுவர்களை அவர்களின் இடத்தில் வைத்து ஒப்பிட முடியாதவர்களாக உள்ள அதேநேரம் ஆண் மீகம் தேடி ஆண்டவனை அலைந்து போலியாக வேறு கும்பிட்டுத் திரிகின்றார்கள்.

இன்று இந்த அவலம் கம்யூனிஸத்தின் விளைவு அல்ல மாறாக முதலாளித்துவத்தின் பரிசு என்பதைப் பார்க்கத் தவறுகின்றனர். இன்னும் ஒருபக்கம் கம்யூனிஸப் போலிகளோ இவைகளெல்லாம் கம்யூனிஸத்தின் தோற்றங்கள் எனப் புலம்பி அடிப்படை மார்க்சிஸமே இதன் காரணமென மாரடிக்கின்றார்கள். இதைத் தடுக்க தேவை ஒரு புரட்சியே. அது முதலாளித்துவத்திற்கு எதிராக விட்டுக்கொடுக்பற்ற ஒரு போராட்டம் மட்டுமே ஆகும் ●


வெளிவந்துவிட்டது!



மக்கள் கலை இலக்கிய கழகத்தினரின்
இசை விழா கருத்தரங்க
ஒலிப்பேழைகள் (ஓடியோ கசட்)

ஜனவரி 23 – 26 தஞ்சை இசை விழா நிகழ்ச்சிகள்

தஞ்சையில் நடைபெற்ற தமிழ் மக்கள் இசைவிழா கருத்தரங்க உரைகளின் பதிவு நாடாக்கள் விற்பனைக்கு உண்டு

- தலைமை உரை 60நிமி - 17F
  மருதையன்- பொதுச் செயலாளர்
  ம.க.இ.க தமிழ் நாடு
- தமிழிசையின் சுருதிகள் 60நிமி- 17F
  பேரா. எஸ்.டி.வீரபாண்டியன்
- தமிழிசையின் தொன்மைக்கு சொல்லியல் ஆதாரங்கள் 60நிமி- 17F
  திரு. அருளி
- சிலப்பதிகார இசையரங்கம் 120நிமி- 34F
  பேரா. மா.வைத்திலிங்கம்
  திரு. மா.கோடிலிங்கம்
- களவாடிய இசையே கர்நாடக இசை
  கீர்தனை வடிவங்கள் பற்றி- திரு.தண்டபானி
  60நிமி- 17F
- உழைக்கும் மக்கள் இசைவகைகள் 90நிமி - 23F
  முனை கே.ஏ.குணசேகரன்

மற்றும் ம.க.இ.க இன்

- தேர்தல் வந்தது
- இருண்ட காலம்
- அசுர காணம்
- அடிமைச்சாசனம்

போன்ற புரட்சிகர பாடல் கசெட்டுக்களும் விற்பனைக்கு உண்டு!
கசெட் ஒன்றின் விலை
**25F மட்டுமே!**

மற்றும் மார்க்சிஸ நூல்கள், சிறந்த இலக்கிய வரலாற்று நூல்கள் முதற்கொண்டு அனைத்துவகை புரட்சிகர புதிய சிந்தனை வெளியீடுகளை பெற்றுக்கொள்ள சமருடன் தொடர்பு கொள்ளவும்.

தாபாற் கணக்கு:- 2.674.73M

Centre de chequees postaux, 75900 Paris chequees France




## பிரான்சில்: பெண்கள் மீதான வன்முறை.

முன்னேறிய நாடுகளில் பெண்கள் விடுதலை பெற்று, ஆணாதிக்கத்தை அடித்து நொருக்கி விட்டனர் என கூறிக்கொண்டு, முன்னேறிய நாட்டுப் பெண்களின் நிலையை நோக்கி பின்தங்கிய நாட்டுப் பெண்கள் பவனிவர முயல்வதைக் காணமுடிகின்றது. அண்மையில் பிரான்சில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விபரம் அதிர்ச்சியை அளிக்கின்றது. பாடசாலை செல்லும் 15வயதிற்கு மேற்பட்ட பெண்களிடம் செய்யப்பட்ட ஆய்வில் 16சதவிகித பெண்கள் தாம் ஏதோஒரு வகையில் பலாத்காரத்திற்கு உட்பட்டதை வெளிப்படுத்தி உள்ளனர். அதாவது 6பேருக்கு ஒருபெண் ஆணாதிக்க சமூகத்தால் வன்முறைக்கு உள்ளாகியுள்ளாள். ஆனால் ஆண்கள் தண்டிக்கப் படுவதில்லை. பள்ளி செல்லும் 15வயதிற்கு மேற்பட்ட பெண்களில் ஆறில் ஒரு பகுதி ஆண்கள் சிறையில் இருக்க வேண்டியவர்களே. Free Sex ஐக் கொண்டுள்ள நாடுகளிலே இவ்வளவு பலாத்காரம் என்றால் ஆணாதிக்கத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ளுங்கள். இதைத் தகர்பது ஒரு வர்க்கப் புரட்சியே. அதற்கு மட்டுமே அந்தப்பலம் உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# வளைகுடா யுத்தமும், அதன் கோர வெளிப்பாடுகளும் அமெரிக்காவில்...

1991ம் ஆண்டு வளைகுடா யுத்தத்தையும்(GOLF), மக்கள் படுகொலை செய்யப்படுவதையும் உலகச் செய்தி ஸ்தாபனங்கள் ஒரு சினிமாப் படக்காட்சி போன்று ஒளிபரப்பி தமது ஆக்கிரமிப்பை மூடிமறைத்தது. இன்று படுகொலைகள் செய்தவர்கள் அதன் பிரதிபலிப்பை அனுபவிக்கும் அதேநேரத்தில் படுகொலைகளின் விபரங்கள் முற்றாக வெளிவராமலே உள்ளது.

அமெரிக்காவின் தலைமையிலான ஐ.நா ஆக்கிரமிப்புப் படை ஈராக்மீது தனது காட்டுமிராண்டித்தனமான மிருகத்தாக்குதலை 1991ல் நடத்தியது. தனது புதிது புதிதான ஆயுதங்களைப் பயன்படுத்தி பரிசோதித்து பார்த்ததுடன், அணுமுலாம் பூசிய குண்டுகள், நாசவாயுக் குண்டுகளை ஈராக்கின் மக்கள்மீது வீசி அமெரிக்கா பரீட்சித்தது.

9லட்சம் துருப்புக்களைப் பயன்படுத்தி அன்று ஆக்கிரமித்து நச்சுக் குண்டுகளை வீசியெறிந்த அமெரிக்க ராணுவத்தின் உடல்களிலும், உயிர் உற்பத்தியிலும் அதன் தாக்கங்கள் இன்று பிரதிபலித்துள்ளது. யுத்தத்தின் பின்னர் இவ் ராணுவவீரர்களுக்குப் பிறந்த 40 ஆயிரம் குழந்தைகள் அங்கவீனர்களாகவும், மனநோய்களுக்கும் உட்பட்டு, மரணத்தை எதிர்பார்த்த வண்ணம், அமெரிக்கா எங்கினும் யுத்தக் கொரூரங்களின் அவலம் தோய்ந்துபோய் உள்ளது.

இந்த நிலைமைகளுக்குப் பின் யுத்தத்தில் பங்குகொண்ட வீரர்கள் இரண்டாவது குழந்தையைப் பெற அஞ்சுவதுடன், குடும்பம் சிதைந்து பைத்தியம் பிடித்து அலைகின்றனர். யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவத்தினர் சமூக ஒத்துழைப்புகளில் இருந்து விலகிவிடும் போக்கு அதிகரித்தும் வருகின்றது. இவற்றைத் தடுக்க புதிய மருந்துகளைத் தேடி ஓடும் அமெரிக்கா, மறுபுத்தில் தொடர்ந்தும் இவ் ஆயுதங்களை உற்பத்தி செய்வதை நிறுத்தாமல் உயர்த்தி வருகின்றது.

அமெரிக்காவில் குண்டுகள் வீசியவர்களுக்கே இவ்வளவு பாதிப்பு எனின்: குண்டுகள் வீசப்பட்ட ஈராக்கில் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்கவே தலை சுற்றுகின்றது. அமெரிக்காவில் 40 ஆயிரம் குழந்தைகள் எனில், ஈராக்கில் பல லட்சமாகவே இருக்கும். ஆனால் இவற்றைப்பற்றி எல்லாம் போலி ஜனநாயகவாதிகளோ, மனிதாபிமானிகளோ என்றும் அலட்டிக்கொள்வது இல்லையே! ஏன்?

உலகின் தலைமை ஆக்கிரமிப்பு நாடான அமெரிக்கா எதிர்காலத்தில் மக்கள் மீது புதிய புதிய வழிகளில் தாக்குதல் நடத்தவே திட்டம்தீட்டி வருகின்றது. போராட்டம் நடக்கும் பகுதிகளில் கிருமிகளை விதைத்து பயிர் பச்சைகளையும், மனித உயிர்களையும் அழித்து, வியட்நாமில் இதுபோன்ற ஆரம்பப் பயிற்சியைச் செய்த அமெரிக்கா இன்று பெருமளவு கிருமிகளை உற்பத்தி செய்து குவிக்கின்றது. நாசவாயுக்களைக் கொண்டு மக்களைக் கூட்டம் கூட்டமாக அழிக்கத் தயாராகி வருகின்றது அமெரிக்க ஏகாதிபத்தியம்●

**வாசகர்களே! உங்களிடமிருந்து தரமான ஆக்கங்களையும் ஆரோக்கியான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்**

**சந்தாவுக்கான அன்பளிப்பு: ஐரோப்பிய நாடுகள் 6 பிரதிகள் 100 F , 12 பிரதிகள் 200 F ஏனைய நாடுகள் 12 பிரதிகள் 225 F**

# பாக்கிஸ்தான் இக்பால் மசிக் என்ற சின்னஞ் சிறுவனின் வீரமரணம்



சிறுவன் இக்பால் மசிக்

பாக்கிஸ்தானில் நான்கு வயதிற்கும் 14 வயதிற்கும் இடைப்பட்ட பலலட்சம் சிறுவர்கள் கம்பளம் பின்னும் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். நாள் ஒன்றுக்கு 13-14மணிநேர வேலைகளில் ஈடுபடுத்தப்படுவதுடன் அந்நேரங்களில் மலசலம் கழிக்கவோ, உணவு அருந்தவோ அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இவர்கள் தப்பி ஓடாத வகையில் மா.'.பியா குண்டர்படையினரால் பலத்த சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டு, மிகமோசமான சுரண்டலினால் வதைக்கப்பட்டும் வருகின்றனர். பாலியல் வதைகளுக்கு பலவந்தமாக உட்படுத்தப்படுவதுடன் இரவில் இரும்புச் சங்கிலியால் கால்கள் பிணைக்கப்பட்டு சித்திரவதைகளை அனுபவித்தும் வருகின்றனர். இத் தொழில் நிறுவனங்கள் சிறுவர் சிறைக்கூடமாகமே இயங்கி வருகின்றது.

தனது 4வயதிலிலேயே தொழில் தொடங்கிய இக்பால் மசிக் பத்தாவது வயதில் அத் தொழிலிலிருந்து தப்பிவிட்டான். தன்னைப்போல் சிறுவர்கள் கண்ணாடிகளில் கருகுவதிலிருந்தும், கம்பளங்களில் கசக்கப்படுவதிலிருந்தும், சித்திரவதைகளிலிருந்தும் விடுபடுவதற்காக போராடத் தொடங்கினான். இவனது ஓர்மம் மிக்க விடாப்பிடியான போராட்டம் சர்வதேச ஆதரவைப் பெற்றுக் கொண்டதுடன், பாக்கிஸ்தானின் கம்களத் தொழிற்சாலைகளை அதிரவைத்தது. பல ஆயிரம் சிறுவர்களை தனது போராட்டத்தின் ஊடாக விடுவித்த இக்பால் மசிக் இந்த அநியாய உலகத்தின் முதலாளிகளின் மா.'.பியாக் குண்டர்களால் அண்மையில் படுகொலை செய்யப்பட்டான்.

அரசும்,பொலிஸ்சும் மா.'.பியாக் குண்டர்களுடன் கூட்டுச்சேர்ந்து இந்தப் 12வயதுப் பாலகனின் படுகொலையை ஒரு தனிப்பட்ட பிரச்சனையாகக் காட்டிவிட முனைந்து வருகின்றது. சர்வதேசம் எங்கும் அவனுக்கான நியாயக் குரல்கள் ஓங்கி ஒலித்த வண்ணமே உள்ளன. முஸ்லிம் மதமோ கம்பள மா.'.பியாக்களின் பின்னால் பக்கபலமா உள்ளனர். சின்னஞ் சிறுவர்கள் வதைக்கப்பட்டு, மிகமோசமாக சுரண்டப்படும் நிலையில் கூட சின்ன எதிர்ப்பைக்கூட இந்த மதங்கள் செய்யத் தயாராக இல்லை. அச்சிறுவர்கள் தமது இரத்தத்தைச் சிந்திய பின்னும் கம்பளங்கள் மசூதியையும், அரசபீடங்களியும் அழகு செய்ய, அதில் விழுந்து கும்பிட்டு அமைதியைத் தேடுகின்றார்களாம்! தொடர்ச்சி பக் 27ல்..

சமர்16 வெளியீடு – தமிழ் அகதிகள் இலக்கிய வட்டம் வைகா – ஆனி பதிவுசெய்யப்பட்டது 316956

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்